Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 255 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 23, வியாழன் 08.08.2013

வட மாகாண சபை
தேர்தல் - 2013
கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்
Dr. கந்தசாமி திருலோகமூர்த்தி



X 3
உறுதி செய்யப்பட்ட
வெற்றியை நோக்கி
உங்கள் தெரிவு இல.3
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தொடரும் தாக்குதல் 06

ஆப்கனில் தேர்தல் நடத்துவது நேரத்தை வீணடிக்கும் செயல் 07

புத்தூர் சரஸ்வதி இறுதிக்குத் தகுதி 22

# பொதுநலவாய அழைப்பை ஏற்பாரா மன்மோகன் சிங்?

## 18 ஆம் திகதி அதனைக் கையளிக்க நேரில் செல்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஓக.8

எதிர்வரும் நவம்பரில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டுக்கான அழைப்பிதழை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நேரில் கையளிப்பதற்கு இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. இதனை கையளிக்க வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இம்மாதம் 18 ஆம் திகதி புதுடில்லி விரைகிறார்.



எனினும் இலங்கை அரசின் இந்த அழைப்பிதழை பிரதமர் மன்மோகன் சிங் ஏற்றுக்கொள்வாரா என்பதில் சந்தேகம் நிலவுவதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

13 ஆவது அரசமைப்புத் திருத்தம், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணத்தின் பின்னான அறிக்கை, இலங்கையில் சீனாவின் அதிகரித்த தலையீடு, தமிழக அரசியல் கட்சிகளின் எதிர்ப்பு, வடக்கு மாகாணத் தேர்தல் ஆகிய முக்கிய காரணிகளை வைத்தே பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பதா? இல்லையா? என்ற முடிவை இந்திய அரசு மேற்கொள்ளும் எனவும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' கூறியுள்ளது.

நவம்பர் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இலங்கையில் நடக்கவிருக்கும் பொதுநலவாய மாநாட்டுக்கான அழைப்பிதழை இந்தியப்பிரதமரிடம் நேரில் வழங்க வெளிவிவகார அமைச்சர் ஒரு நாள் பயணமாக எதிர்வரும் 18 ஆம் திகதி புதுடில்லி செல்கிறார். ஆயினும் அந்த அழைப்பிதழ் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பல முக்கிய விடயங்களை கருத்தில்கொண்டே இந்தியா இதில் முடிவெடுக்கும் என்று கூறப்படுகிறது.

இலங்கை வரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஜெனிவாவில் சமர்ப்பிக்க இருக்கும் அறிக்கையை இந்தியா எதிர்பார்த்திருக்கிறது. அத்துடன் வடக்கு மாகாணத் தேர்தல் குறித்தும் இந்திய மத்திய அரசு தனது உன்னிப்பான கவனத்தை செலுத்தி உள்ளது. அதே வேளை, 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மாற்றி அமைக்க இலங்கை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பிலும் இந்தியப் பிரதமர் கவனம் செலுத்தி உள்ளார். இவற்றுக்கு மேலாக பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என்று தமிழக அரசியல் கட்சிகள் காட்டி வரும் பலமான எதிர்ப்பையும் புதுடில்லி அவதானித்து வருகிறது. இலங்கையில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் சீனாவின் தலையீடு குறித்தும் இந்தியா அக்கறை செலுத்துகிறது.



இவற்றை எல்லாம் கருத்தில் வைத்துக்கொண்டே பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதா? இல்லையா? என்பதை பிரதமர் மன்மோகன்சிங் முடிவுசெய்வார் என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது. (த-ப)

## இராணுவ நடவடிக்கையை கண்டிக்கிறார் கர்தினால்

கொழும்பு, ஓக. 8

வெலிவேரியாவில் சுத்தமான குடிதண்ணீர் கேட்டு பொதுமக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது, இராணுவத்தினர் நடந்துகொண்ட விதம் மற்றும் அவர்களின் நடவடிக்கைகள் குறித்து கர்தினால் மல்கம் ரஞ்சித்

தொடர்ச்சி: பக்கம் 21

## தேர்தல் விதிகளுக்கு முரணாக யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகள்

### அகற்ற நடவடிக்கை ஏதும் இல்லை

யாழ்ப்பாணம், ஓக.8

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் தேர்தல் விதிகளுக்கு முரணாகச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருவதுடன் பதாகைகளும் வைக்கப்பட்டுள்ளன. எனினும் இவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஆளும் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களே இவ்வாறு தேர்தல் விதிமுறைகளுக்கு முரணாகச் செயற்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் உடுப்பிட்டி, தொண்டமானாறு, வதிரி, கரணவாய், நெல்லியடிப் பகுதிகளில் ஆளும் கட்சியில் போட்டியிடும் வர்த்தகர் ஒருவர் தனது படத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற

தொடர்ச்சி: பக்கம் 21

## வெலிவேரியா தாக்குதலுக்கு பிரிட்டனும் ஆழ்ந்த கவலை

கொழும்பு, ஓக. 8

வெலிவேரியாவில் சுத்தமான குடிதண்ணீருக்காகப் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ள பிரிட்டன், இந்தச் சம்பவம் குறித்து வெளிப்படையான விசாரணைகளை நடத்துமாறு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக பிரிட்டன் வெளிவிவகாரப் பணியக அமைச்சர் அலிஸ்ரயர் பேர்ட், வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தச் சம்பவம் தொடர்பாக தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்கும் உரி

தொடர்ச்சி: பக்கம் 21

## இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக சென்னையில் இன்று ஆர்ப்பாட்டம்

சென்னை, ஓக. 8

13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வலியுறுத்தியும், இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்தியும், தமிழக மீனவர்களைப் பாதுகாக்கக் கோரியும் டெசோ அமைப்பு சார்பில் இன்று வியாழக்கிழமை தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் இன்று மு.ப. 9.30 மணிக்கு நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி பங்கேற்கிறார்.

தென் சென்னை மாவட்ட

தொடர்ச்சி: பக்கம் 21

## நல்லூர் ஆலயச் சூழலில் தேர்தல் பிரசாரம் தடை

யாழ்ப்பாணம், ஓக.8

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத் திருவிழா எதிர்வரும் திங்கள்கிழமை ஆரம்பமாக உள்ள நிலையில் அந்த ஆலயச் சூழலில் தேர்தல் பிரசாரம் செய்வதோ, சுவரொட்டிகளை ஒட்டுவதோ, பதாதைகளை காட்சிப்படுத்துவதோ முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வட மாகாண பிரதித் தேர்தல் ஆணையாளரும், யாழ். மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான சி.அச்சுதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லூர் ஆலயம், அதனை அண்டியுள்ள சூழல் என்பன வணக்கத்துக்குரிய பிரதேசம் அங்கு தேர்தல் தொடர்பான எந்தப் பிரசாரத்துக்கும், விளம்பரத்துக்கும் இடமில்லை. இதனை மீறினால் பொலிஸாரால் உடன் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

ஆலயத்தின் உள்ளேயோ அல்லது வெளியேயோ சுற்றாடலிலோ தேர்தல் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் கூட விநியோகிக்க முடியாது - என்றார். (த-4)

## தேர்தல் விதிகளை மீறுகிறார் பிரதமர் ஜயரத்னவின் மகன்

### 'கபே' அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.8

பிரதமர் டி.எம். ஜயரத்னவின் மகன் உட்பட அரசின் பல வேட்பாளர்கள் தேர்தல் விதிமுறைகளை மீறியுள்ளனர். பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்காது வாய் பார்த்துக்கொண்டு இருக்கின்றனர் என்று 'கபே' குற்றம் சாட்டியுள்ளது.



இது தொடர்பில் அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் மேலும் தெரிவித்ததாவது:

வடமத்திய, வடமேல் மாகாணங்களிலேயே குறிப்பாக வடக்கில் குறைந்தளவிலும் தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதுவரை இவ்வாறு 50 இற்கும் மேற்பட்ட சம்பவங்களும், 4 வன்முறைச்சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் டி.எம். ஜயரத்னவின் மகனான அனுராத ஜயரத்ன கம்பளையில் என்றும் இல்லாத அளவுக்கு மிகப் பெரிய பதாகை ஒன்றை கட்டியுள்ளார். இன்று வரை அது அகற்றப்படவில்லை.

இவை தொடர்பில் ஏற்கெனவே தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளோம். இருந்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை - என்றார். (த-4)

## காணிகள் சுவீகரிப்புக்கு எதிராக இன்று சம்பந்தன் உரை

கொழும்பு, ஓக.8

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் காணிகள் இராணுவத்தினரால் அபகரிக்கப்படுவதைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று நாடாளுமன்றில் குரல் கொடுக்கவுள்ளது.

காணி அபகரிப்புத் தொடர்பில் நாடாளுமன்றில் கூட்டமைப்பு சமர்ப்பித்த பிரேரணை இன்று மாலை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்போது இதுதொடர்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் இரா.சம்பந்தன் முதலில் உரையாற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சியினரும் ஆளுந்தரப்பினரும் தங்கள் வாதங்களை முன்வைக்கவுள்ளனர். (த-சி)

# தேர்தல் விதிமுறைகளை மீறினால் சட்ட நடவடிக்கை

## பிரதித் தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக. 8
தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், வேட்பாளர்கள் தேர்தல் சட்ட விதிமுறையின் படி சுவரொட்டிகளை ஒட்டவோ, பதாகைகளைக் கட்டவோ முடியாது. இதனை மீறிச் செயற்படுகின்ற வேட்பாளர்கள்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவர்கள் நீதிமன்றிலும் முற்படுத்தப்படுவார்கள் என்று வடமாகாணப் பிரதித் தேர்தல் ஆணையாளரும், யாழ்.மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான சி.அச்சுதன் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேர்தல் சட்ட விதிமுறைகளின் படி எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி தேர்தலை முன்னிட்டு விளம்பரங்களை ஒட்டுவது, பதாகைகளைக் காட்சிப்படுத்துவது என்பவற்றைத் தடுத்து நிறுத்தத் தேர்தல் ஆணையாளரால் உத்தரவிடப்பட்டுள்ளது.
எனவே கட்சிகளோ, வேட்பாளர்களோ வீணாகப் பணத்தைச் செலவழித்து விளம்பரங்களையோ, பதாகைகளையோ அச்சிட வேண்டாம்.
வீதிகளில், பொது இடங்களில் என எந்த இடத்திலும் இவற்றைக் காட்சிப்படுத்த முடியாது. இதனை மீறிக் காட்சிப்படுத்தப்படும் அனைத்தும் அகற்றப்பட்டு அழிக்கப்படும். வேட்பாளர்களுக்கும் சுவரொட்டிகளை ஒட்டுபவர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனால் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் - என்றார். (த-4)

# வடக்கில் என்ன நடந்தது என்பது சர்வதேசத்துக்கு இப்போது புரியும்

## வெலிவேரியத் தாக்குதல் குறித்து கிரியெல்ல




கொழும்பு,ஓக 08
வெலிவேரியவில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் நிச்சயமாக மனிதப்படுகொலை எனவும் நிராயுதபாணிகளாக நின்ற நிரபராதி மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.தண்ணீர் கலன் கேட்ட மக்களுக்கு போர்க் கலன் கொடுக்கப்பட்டதாகவும் இந்தச் சம்பவத்தின் மூலம் வடக்கில் என்ன நடந்திருக்கும் என்பதைச் சர்வதேச சமூகம் இன்று புரிந்து கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இராணுவத்தினர் மீது பொது மக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக கூறி, நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி புதிய குற்றச்சாட்டை உருவாக்கி வருவதாக அவர் கூறியுள்ளார்.
வெலிவேரிய சம்பவத்தில் பாதுகாப்பு அமைச்சு தலையிட்டிருக்கத் தேவையில்லை எனவும் நீர்வழங்கல் அமைச்சும் சுற்றாடல் அமைச்சுமே இதில் தலையிட்டிருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.
நிராயுதபாணிகளாக நின்ற மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தும்படி கட்டளையிட்டது யார் என வெளிப்படுத்துமாறும் அதிகாரிகளிடம் அவர் கேட்டுக் கொண்டார். (த)

# மார்பகங்களுக்குள் போதைப் பொருள்

## குடுராணி கைதானார்

கொழும்பு, ஓக. 08
மார்பகங்களுக்குள் மறைத்துப் போதைப்பொருள்களைக் கடத்திய பெண்ணொருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
கொழும்பு-14 கிராண்பாஸிலிருந்து கண்டி நகரத்துக்கு ஹெரோயின் போதைப் பொருள்களைக் கடத்திய 'குடுராணி' என்றழைக்கப்படும் 29 வயதான யுவதியே கைது செய்யப்பட்டுள்ளார்.
கட்டுகஸ்தோட்டை பொலிஸாரினால் இந்தப் பெண் கண்டி நகரத்தில் வைத்து நேற்றுப் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். அவரைக் கைது செய்த பொலிஸார் அவருடைய மார்பகங்களுக்குள் மறைத்துவைத்திருந்த 48.65 கிராம் ஹெரோயினையும் மீட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்ட சந்தேக நபரை கண்டி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த)

# நவுறுவில் உள்ள இலங்கையருடன் தொடர்புகள் அனைத்தும் துண்டிப்பு



கொழும்பு, ஓக. 08
இலங்கையிலிருந்து சட்ட விரோதமாகப் படகு மூலம் ஆஸ்திரேலியா சென்றடைந்து நவுறு தீவில் தங்க வைக்கப்பட்டிருந்த தமது உறவினர்களுடன் இரு வாரங்களுக்கு மேலாகத் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.
நவுறுதீவு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள ஆஸ்திரேலியப் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கிடையே கடந்த ஜூலை மாதம் 19ஆம் திகதி இடம்பெற்ற மோதலை அடுத்தே அங்குள்ளவர்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரிச் சென்று நவுறுதீவில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினரான பெண்ணொருவர் இது பற்றி தெரிவிக்கையில், 'தனது சகோதரர்கள் இருவர், கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் படகு மூலம் ஆஸ்திரேலியா சென்றடைந்த போது படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான நிலையில் அந்நாட்டு விமானப் படை மற்றும் கடற்படையால் காப்பாற்றப்பட்டனர்.
இவர்கள் பின்னர், நவுறு தீவில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில், தொலைபேசி மூலம் உறவினர்களுடன் தொடர்ந்தும் தொடர்பில் இருந்தனர். ஆனால் கடந்த 23ஆம் திகதிக்கு பின்னர் தொடர்புகள் இல்லை. இறுதியாகத் தொடர்பு கொண்ட போது நவுறு தீவுக் கலவரத்தில் தங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்று கூறி தங்களை அங்கிருந்து வேறு இடத்துக்கு மாற்றம் செய்யப் போவதாக கூறினார்கள்.
அந்த இடத்தில் தொலைபேசி வசதிகள் இருக்குமானால் தொடர்பு கொள்வதாகக் கூறினார்கள். ஆனால் இரண்டு வாரங்களாகியும் இதுவரை தொடர்பு இல்லை. அவர்கள் எங்கே தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்? அவர்களுக்கு என்ன நடந்திருக்கும்? என குழப்பத்துடன் இருக்கின்றோம்' என்று அப்பெண் குறிப்பிட்டார். (த)

# குப்பிளான் பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



வலி. வடக்கு, ஓக. 08
தமக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரிக் குப்பிளான் வடக்கில் மீளக் குடியேறிய மக்களில் ஒரு பகுதியினர் உடுவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
மக்களுக்கு உதவாத கிராம அலுவலகம் வேண்டாம், மின்சாரம் வேண்டும், வீடு வேண்டும் போன்ற கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இதன்போது உடுவில் பிரதேச செயலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் போராட்டம் நடத்திய மக்களுடன் கலந்துரையாடித் தற்போதைய நிலைமையை விளக்கினர். எனினும் அவர்களின் கருத்தை ஏற்கமறுத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு, அவர் வரும்வரை தாம் இங்கேயே நிற்போம் என்று கூறியுள்ளனர்.
சிறிது நேரத்தில் குறிப்பிட்ட நபர் வந்ததும் அவரிடம் மனு ஒன்றைக் கொடுத்துவிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கலைந்து சென்றனர். (ஜ-86)

# வெலிவேரியவில் பயன்படுத்திய 90 துப்பாக்கிகளும் பகுப்பாய்வுக்கு

கொழும்பு, ஓக. 08
வெலிவேரிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது இராணுவம் பயன்படுத்தியதாகக் கூறப்படும் 90 துப்பாக்கிகளை அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்புவதற்காக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு அவற்றைப் பொறுப்பேற்றுள்ளது.
இது தொடர்பில் கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்த்தன, 'வெலிவேரிய சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்ட அனைத்துத் துப்பாக்கிகளும் அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்படவுள்ளன' என்றார்.
சுத்தமான குடிதண்ணீர் கோரி ஆர்ப்பாட்டம் செய்த வெலிவேரிய கிராமவாசிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் மூவர் உயிரிழந்ததுடன் 37பேர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

> சுத்தமான குடிதண்ணீர் கோரி ஆர்ப்பாட்டம் செய்த வெலிவேரிய கிராமவாசிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் மூவர் உயிரிழந்தனர்

# குற்றவாளிகளுக்கு தண்டனை நிச்சயம்

## வெலிவேரியா குறித்து அரசு உறுதி

கொழும்பு, ஓக. 08
எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல் வெற்றிமூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் பலத்தை சர்வதேச சமூகம் அறிந்துகொள்ளும் எனத் தெரிவித்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குற்றவாளிகளை இந்த அரசு பாதுகாக்காது என்றும் சுட்டிக்காட்டினார்.
நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்த) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
யுத்த காலத்தில் இராணுவத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் அவ்வாறு செயற்படுகின்றது. குறிப்பாக, வெலிவேரிய சம்பவம் தொடர்பில் ஏதாவது ஒரு தரப்பில் தவறு இடம்பெற்றிருக்கும் பட்சத்தில் நிச்சயம் தண்டனை வழங்கப்படும். குற்றவாளிகளை இந்த அரசு பாதுகாக்காது.
சம்பவம் தொடர்பில் இராணுவமோ அல்லது பொலிஸாரோ தவறிழைத்திருந்தால் கூட அரசின் மேற்படி கொள்கையில் மாற்றம் இருக்காது. ஏதாவது ஒரு சம்பவத்தின் மூலம் மரண சம்பவங்கள் நிகழுமாயின் அதுகுறித்து அரசு சந்தோஷமடையாது. மாறாக, ஐ.தே.க. மரணங்களின் எண்ணிக்கையை எண்ணிக் கொண்டிருக்கின்றது.
அதேவேளை, வருகின்ற மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே.கவால் வெற்றிபெற முடியாது. முடிந்தால் ஏதாவது ஒரு தேர்தல் தொகுதியில் வெற்றியீட்டிக்காட்டுமாறு நாம் ஐ.தே.கவுக்கு சவால் விடுக்கின்றோம். குறிப்பாக ஜனாதிபதி கதவை அடைக்காவிட்டால் ஐ.தே.கவிலிருந்து மேலும் பலர் எம்முடன் இணைந்திருப்பார்கள்.
எப்படியிருந்த போதிலும் தேர்தல் முடிவடைந்த பின்னர் ஐ.தே.க. உறுப்பினர்கள் சிலர் எம்முடன் இணையவுள்ளனர் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர சபையில் குறிப்பிட்டார்.
மாகாணசபைத் தேர்தலில் அரசு பெருவெற்றியீட்டும். அதன்மூலம் அரசின் பலத்தை சர்வதேசத்தால் அறியக் கூடியதாக இருக்கும் - என அவர் மேலும் கூறினார்.

# வாஸின் மகனுக்கு 72 மணிநேரம் தடுப்புக்காவல்

கொழும்பு, ஓக. 8
முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தனவின் மகனான ரவிந்து குணவர்த்தனவை 72 மணி நேரம் தடுத்து வைத்து விசாரிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
அவருடன் கைது செய்யப்பட்ட ஏனைய சந்தேகநபர்களைப் பொலிஸார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இவர், பெபிலியான் பிரதேசத்தில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். வர்த்தகரொருவரின் கொலை தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## கையளிக்கப்பட்ட காணிகளை துப்புரவு செய்யும் மக்கள்



கொழும்புத்துறை, ஓக.8
அரியாலையில் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்து உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்ட வீடுகளையும் அதன் சூழல்களையும் துப்புரவு செய்வதில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வீட்டின் சேதமான பகுதிகளை சீர் செய்வதிலும் காணி எல்லைகளைக் கண்டறிந்து வேலிகள் அமைப்பதிலும் அந்தப் பகுதி மக்கள் ஈடுபடுகின்றனர்.

பாதுகாப்புப் படையினர் பயன்படுத்தி வந்த வீடுகளைத் தவிர ஏனைய வீடுகளும் ஆங்காங்கே சேதமடைந்து காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை - அந்தப் பகுதியில் உள்ள சில கிணறுகள் குப்பை கூழங்களால் நிரப்பப்பட்டுள்ளதாகவும் இனந்தெரியாத நபர்கள் சிலர் மக்கள் நடமாட்டமற்ற நேரங்களில் பழைய இரும்புகள் மற்றும் மரங்களை வெட்டிக் களவாடுவதில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகிறது.

(வ-135)

# இருமொழிக் கொள்கை நடைமுறை தொடர்பில் கிராம மட்ட ஆய்வு

யாழ்ப்பாணம், ஓக.8
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெறுகின்ற இரு மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக கிராம மட்டத்தில் இருந்து ஆய்வு செய்வதற்கான நடவடிக்கைகளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேற்கொள்ளவுள்ளது.

தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மொழி உரிமை மீறல்கள் இடம்பெறுவதால் வெவ்வேறு மொழி பேசுவோர் பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்து வரும் சூழலில் இந்த மொழி உரிமை மீறல் தொடர்பாக கிராம மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களது பிரச்சினைகளை இனங்காணுவதற்கு ஏதுவாக ஓர் ஆய்வு நடவடிக்கையாக இதனை மேற்கொள்ளவுள்ளது.

இதற்கென கிராம ரீதியாக உருவாக்கப்பட்டுள்ள மொழிச் சங்கங்கள் ஊடாக தனிநபர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களைச் சந்தித்து இரு மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல் எந்தளவுக்கு சாத்தியமாகிறது என்பதை ஆய்வு செய்யவுள்ளனர்.

இந்த ஆய்வு நடவடிக்கைகள் ஊடாக ஒவ்வொருவருடையதும் மொழிப் பிரச்சினைகள் கேட்டறியப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

கிராம ரீதியான மொழிச் சங்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்த ஆய்வுகளை மேற்கொண்டு இரு மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தாத தொடர்புடைய திணைக்களங்களுக்கு எதிரான முறைப்பாடுகளையும் பதிவு செய்வதற்கு திட்டமிட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளையும் பயன்படுத்தும் மொழிப் பயன் பாட்டாளர்கள் உள்ள நிலையில் அவர்களது மொழி உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்த ஆய்வு நடவடிக்கை ஏதுவாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-14)

## முதியோருக்கான மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஓக.8
பருத்தித்துறை ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் முதியோர்களுக்கான இலவச மருத்துவ முகாம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மருத்துவ முகாமில் மந்திகை ஆதார வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் கே.சிவராமன், 6 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் மற்றும் முதியோர்களுக்கான இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களுக்கான மருத்துவ ஆலோசனைகளை வழங்குவார். அதனைத் தொடர்ந்து நீரிழிவு நோயை இனங்காண்பதற்கான பரிசோதனையும் இடம்பெறும். அத்துடன் ''முதியோர் நலன் காப்போம்'' என்ற தலைப்பில் வைத்திய ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன் உரை நிகழ்த்துவார். (வ-14)

## 775 வழித்தட பஸ் சேவையை மீண்டும் ஆரம்பியுங்கள்

தென்மராட்சி, ஓக.8
தினமும் காலை 6 மணிக்கு சாவகச்சேரியிலிருந்து கனகன்புளியடி, மட்டுவில், புத்தூர் ஊடாக சுன்னாகம் செல்லும் 775 வழித்தட பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். இந்த வழித்தடத்திலான பஸ் சேவை முன்னர் காலையில் சாவகச்சேரியிலிருந்து புறப்பட்டு சுன்னாகம் சென்று அங்கிருந்து 7 மணிக்கு புறப்பட்டு பாடசாலை மாணவர்களுடன் பொதுமக்களையும் ஏற்றி வரும் சேவையில் ஈடுபட்டது.

சாவகச்சேரியிலிருந்து காலை 6 மணிக்குப் புறப்படும் பஸ் சேவை திடீரென இடைநிறுத்தப்பட்டு விட்டது. தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய பெரும் திருவிழாவுக்குச் செல்லும் சாவகச்சேரி, மட்டுவில், சரசாலை பிரதேசங்களைச் சேர்ந்த அடியார்களின் நலன்கருதி திருவிழா முடியும் வரையான காலப் பகுதி வரை தினமும் காலை 6 மணிக்கு இந்தச் சேவையை நடத்துமாறு மக்கள் கேட்டுள்ளனர். (ஓ-9)

# நெடுந்தீவில் யாழ். ஆயர்...



கடந்த சனிக்கிழமை நெடுந்தீவுக்கு வருகை தந்த யாழ். ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நெடுந்தீவு துறைமுகத்தில் வைத்து மக்களால் வரவேற்பளிக்கப்பட்டுப் புனித யுவானியார் ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவு கிழக்குப் பகுதியில் புனரமைக்கப்பட்ட புனித அந்தோனியார் தேவாலயத்தைத் திறந்து வைத்துத் திருப்பலிப் பூசைகளையும் ஆயர் ஒப்புக் கொடுத்தார்.

நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்திரு அமலராஜ் அடிகள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கத் தலைவர் அ.வெ.அரியநாயகம், பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷியன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஓ-7)

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் ரூ.1, 000 கொடுப்பனவு

வலி.தென்மேற்கு, ஓக.8
புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் முதியோருக்காக வழங்கப்பட்ட மே, ஜூன் ஆகிய இரு மாதங்களுக்குரிய ஆயிரம் ரூபா கொடுப்பனவை இதுவரை பெறாதவர்கள் இந்த மாதம் 12ஆம் திகதிக்கு முன்பு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்ட புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 70 வயதுக்கு மேற்பட்ட 454 முதியோர்கள் ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெறுவதற்குத் தகுதி பெற்றிருந்தனர்.

இவர்களில் மே, ஜூன் ஆகிய இரு மாதங்களுக்குரிய 1000 ரூபா கொடுப்பனவைப் பெறாத 54 முதியோர்களுக்கான கொடுப்பனவு செயலகத்தில் வைத்து வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே, கொடுப்பனவைப் பெறாதவர்கள் 12 ஆம் திகதிக்கு முன்பு பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-115)

# தென்மராட்சி கிழக்கில் நடமாடும் சேவை

தென்மராட்சி, ஓக.8
தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக்களுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கல் தொடர்பான இலவச நடமாடும் சேவை எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

நடமாடும் சேவையில் புதிதாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்போர் மற்றும் தொலைந்த அல்லது பழுதடைந்த அடையாள அட்டைக்கு பதிலாக புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்போர், அடையாள அட்டையில் மாற்றங்கள் செய்யவுள்ளோர் அடையாள அட்டையில் உள்ள தவறுகள், கணவரின் பெயரை இணைத்தல் போன்றவற்றை மேற்கொண்டு விரும்புவோரை இதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் ஏற்கெனவே வரணி, கைதடி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாதவர்களையும் இங்கு சமுகமளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நடமாடும் சேவையில் முத்திரை, புகைப்படம் போன்றவை இலவசமாக வழங்கப்படவுள்ளன. கிராம அலுவலர்கள், சமாதான நீதிவான்கள், பொலிஸார் அஞ்சல் திணைக்களத்தினர் ஆகியோர் சமூகமளித்து உடனுக்குடன் அறிக்கைகள் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களான பிறப்புச் சான்றிதழ், விவாகப் பதிவுச் சான்றிதழ் ஆகியவற்றையும் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் தொடர்பான விவரங்களையும் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

### குதிரை கிடைத்துவிட்டது; சவுக்கு இல்லையே

## கிராம அலுவலர் பிரிவு பெயர்ப்பலகை பொருத்தப்படாமல் அறை மூலைக்குள்!

குதிரை வாங்கிக் கொடுத்தவர்கள் சவுக்கு வாங்கிக் கொடுக்காதது போல பொதுமக்களுக்கு அலுவலகத்தை அடையாளப்படுத்துவதற்காக கிராம அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுக்கான பெயர்ப் பலகையைப் பொருத்துவதற்குரிய குழாய்க் கம்பிகள் வழங்கப்படாததால் அவை அலுவலக மூலைக்குள் வைக்கப்பட்டுள்ளதைப் பல கிராம அலுவலர் பிரிவுகளில் காணமுடிகிறது.

கிராம அலுவலரின் அலுவலகம் அமைந்துள்ள இடத்தைப் பொது மக்கள் அடையாளம் காணத்தக்க வகையில் அலுவலகத்துக்கு முன்பாக பொருத்துமாறு பிரிவுப் பெயர்ப் பலகைகள் மூன்று மாதங்களுக்கு முன்னர் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால், பெயர்ப் பலகை பொருத்துவதற்குரிய குழாய்க் கம்பிகள் இதுவரை வழங்கப்படாததால் பல கிராம அலுவலர்களின் அறையினுள் ஒரு மூலையில் அவை 'பாதுகாப்பாக' வைக்கப்பட்டுள்ளன. (ஓ)

## சமுர்த்தி மகா சங்க அலுவலகங்களில் நூலகம்



யாழ்ப்பாணம், ஓக. 8
நாட்டில் உள்ள அனைத்து சமுர்த்தி மகா சங்க அலுவலகங்களில் நூலகம் ஆரம்பிக்குமாறு சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் ஆர்.பி. பீ.திலகசிறி அறிவித்துள்ளார்.
சமுர்த்தி மகா சங்கங்களால் கடந்த வருடங்களில் நடத்தப்பட்ட பிரதேசத்துக்குப் பொருத்தமான அபிவிருத்திச் செயற்பாடுகள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் நிகழ்கால அபிவிருத்தி செயற்பாடுகள் உட்பட்டவற்றை நூலகங்களில் ஆவணப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
நூலகத்தை அமைப்பதற்குத் தேவையான தளபாடங்கள் உள்ளிட்ட பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு மகா சங்க நிதியிலிருந்து 30 ஆயிரம் ரூபா தொகையினை பெறமுடியு மெனவும்.
நூலகச் செயற்பாடுகளை உடனடியாக ஆரம்பிக்குமாறும் அறிவித்துள்ளார். (வ-9)

# பிரதேச சபை செயலாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியாது

### சட்டத்தில் இடமில்லையென ஆலோசனை வழங்குகின்றார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்


வலி.தென்மேற்கு, ஓக. 8
வலி.தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க சட்டத்தில் எந்தவித ஏற்பாடும் இல்லை என்று வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு அறிவித்துள்ளார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர். சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாத விடயங்கள் தொடர்பாக சபையில் தீர்மானங்கள் எடுப்பதைத் தவிர்க்குமாறு தவிசாளருக்கு ஆலோசனையும் வழங்கியுள்ளார்.
வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் உறுப்பினர்களை அவமதிக்கும் வகையில் செயலாளரினால் சபையில் வாசிக்கப்பட்ட அநாமதேயக் கடிதத்தின் பிரதியை வழங்குமாறு உறுப்பினர்கள் செயலாளரைக் கோரியிருந்த போதிலும் அந்தக் கடிதம் தவறவிட்டதாகத் தெரிவித்துள்ள செயலாளர் அதற்காக சபையிடம் மன்னிப்புக் கோரியிருந்தார்.
செயலாளரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்த உறுப்பினர்கள் செயலாளர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியதுடன், இது குறித்து உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் கோரியிருந்தனர்.
உறுப்பினர்களின் தீர்மானத்துக்கமைய செயலாளரின் விடயம் குறித்து உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப் பட்டது.
உறுப்பினர்களின் தீர் மானம் சம்பந்தமாக உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் பிரதேச சபைத் தவிசாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத் தில்;
தங்களது கடிதத்தில் குறிப்பிட்டதற்கமைவாக சபைச் செயலாளர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பில் சபையில் தீர்மானம் எடுப்பதற்குச் சட்டத்தில் எதுவித ஏற்பாடுகளும் இல்லை என்பதை தங்களுக்கு அறியத்தருவதுடன் இந்த விடயத்தை தங்கள் சபைக்குத் தெரிவிப்பதுடன் சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாத விடயங்கள் தொடர்பாக சபைத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கப்படுகின்றது- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-115)

# வெலிவேரியாவில் இந்தக் கொடுமை என்றால் வன்னி நிலைமை எப்படி இருந்திருக்கும் ?

### இராணுவத்தினரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து தென்னிலங்கையில் எழும் கேள்வி புல்லரிக்கிறது என்கிறார் மனோ



யாழ்ப்பாணம், ஓக.8
வெலிவேரிய ரதுபஸ்கலவில் கண்மூடித்தனமாக துப்பாக்கி சூட்டை நடத்தி இராணுவம் இத்தகைய விபரீதங்களை நடத்தியிருக்குமானால், வன்னியில் இடம்பெற்ற போரின் போது இதே இராணுவம் தமிழ் மக்கள் மீது எத்தகைய கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தியிருக்கும் என்ற கேள்விகள் இப்போது தெற்கில் பரவலாக எழுப்பப்பட்டு வருகின்றன. கண்மூடித்தனமான இத்தகைய தாக்குதல்களுக்கு ஆணையிட்டது யார் என்ற கேள்வி உரக்க கேட்கப்படுகின்றது. தென்னிலங்கை சிங்கள அரசியல் கட்சித் தலைவர்கள், தேரர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் தற்போது இத்தகைய கேள்விகளை எழுப்புகின்றார்கள்.
'இங்கேயே இன்று இப்படி என்றால் அன்று வன்னியில் எப்படி' என்ற கருத்துகளை கேட்கும்போது என் உடம்பு புல்லரிக்கின்றது. என் நெஞ்சம் கனக்கின்றது. என் கண்களில் கண்ணீர் தளும்புகின்றது, என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் நேற்று கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில் சிங்கள மொழியில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
2009 மே மாதத்தில்போர் முடிவடைவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னரே விடுதலைப் புலிகள் சண்டையிடுவதை நிறுத்தி விட்டார்கள். பெருந்தொகை போராளிகள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு சரணடையத் தொடங்கி விட்டார்கள். அந்த இயக்கம் செயலிழந்துவிட்டது. புலிகளில் சரணடைய வந்தவர்கள் சரணடைந்தார்கள். ஏனையோர் போரிட்டு மடிந்தனர்.
ஆனால் அப்போது முள்ளிவாய்க்காலில் சிக்கிக் கொண்டு பெருந்தொகை அப்பாவி தமிழ் மக்கள் மரண ஓலம் எழுப்பி கொண்டிருந்தனர். அப்பாவி தமிழ் மக்கள் சிக்கித் தவிப்பதை அறிந்தும் அறியாதது போல், விடுதலைப் புலிகளை கொல்கின்றோம் என்ற பெயரில் அப்பாவி தமிழ் மக்கள் மீது பல்குழல் எறிகணை இராணுவ தாக்குதல் கண்மூடித்தனமாக நடத்தப்பட்டன. அதைத் தான் உலக நாடுகள் நிறுத்தக் கூறினதே தவிர விடுதலைப்புலிகளைப் பாதுகாக்கச் சொல்லவில்லை. அப்பாவி மக்களை கொலை செய்ய வேண்டாம் என உலக சமூகத்துடன் சேர்ந்து நாமும் கூறினோம். அதை சொன்ன எங்களை பார்த்து பயங்கரவாதிகள் என்றும், புலிகள் என்றும், பிரிவினைவாதிகள் என்றும் இங்கே முத்திரை குத்தி பயமுறுத்தினார்கள்.
இப்போது 'இங்கேயே இன்று இப்படி என்றால் அன்று வன்னியில் எப்படி' என்று கேள்வி எழுப்பும் ஜே.வி.பி. கூட அன்று கைதட்டி போரை ஆதரித்துவிட்டு எங்களை பார்த்து புலிப்பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டியது.
இன்று பிரதான எதிர் கட்சியான ஐ.தே.க., வெலிவேரிய ரதுபஸ்கல இராணுவ துப்பாக்கி சூட்டை விசாரிக்க சர்வதேச விசாரணை தேவை என்று சொல்லுகின்றது. இதைத்தான் நாங்களும் அன்று வன்னிப் போர் பற்றி கூறினோம். வன்னியில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதை நிறுத்தக் கூறினோம். அங்கு நடைபெற்ற படுகொலைகள் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்றும் கூறினோம்.
தற்போதும் நாம் சொல்கின்றோம். முள்ளிவாய்க்கால் படுகொலைகள் பற்றி சர்வதேச விசாரணை தேவை.
அதேபோல் வெலிவேரிய ரதுபஸ்கல படுகொலைகள் தொடர்பிலும் சர்வதேச விசாரணை தேவை. முள்ளிவாய்க்காலிலும், ரதுபஸ்கலவிலும் அப்பாவி மக்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்த ஆணையிட்டது யார் என கேட்கின்றோம் - என்றார்.




பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் அமைக்கப்பட்டுள்ள படகு கட்டும் தொழிற்சாலையில் இதுவரை 75 மீன்பிடிப் படகுகள் கட்டப்பட்டுள்ளன. (க-18)

## மரண அறிவித்தல்

### திருமதி ஸ்ரீமதி சீமாட்டிதேவி குமாரசாமி

*(இளைப்பாறிய அதிபர், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மற்றும் உதவி ஆணையாளர் கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)*



யாழ். உடுவிலைப் பிறப்பிடமாகவும், ''கல்யாணி'' லோட்டன் வீதி மானிப்பாயை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான திருமதி ஸ்ரீமதி சீமாட்டிதேவி குமாரசாமி கடந்த (05.08.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை குமாரசாமியின் (இளைப்பாறிய ஆசிரியர் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும் ஜெயலக்சுமி, ஞானப் பூங்கோதை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சியாமளாதேவி (லண்டன்), ஸ்ரீரஞ்சினி (ஆஸ்திரேலியா), சண்முகப்பிரியா (லண்டன்), ஸ்ரீகுமரன் (ஆஸ்திரேலியா), ஆனந்தபைரவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், ஸ்ரீபத்மநாதன், சேகர், கிருபாஜினி, சுரேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், Dr.அச்சுதன், சாரங்கன், பிரமோதயன், தாரணி, வரோதயன், ஆரூரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2013) வியாழக்கிழமை லண்டனில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி பிரியா சேகர்
T.P- 00442035651752, 00447845184167
Email- priyasekar@hotmail.co.uk

தகவல்: திருமதி கனா உமாசுதன் (மாணவி)
சண்டிலிப்பாய்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
செல்லத்துரை
கமலாதேவி



கடந்த 7.7.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் நினைவுப் பிரார்த்தனை நிகழ்வும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்வும் இன்று (08.08.2013) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஊர்வத்தை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

(வ10792) (11.6)

## மரண அறிவித்தல்

ஓம் வீராட் விஸ்வ பிரம்மனே நம;

### இராசையா சரவணபவன்

*(ஆசாரி, பழனி)*



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், சங்குவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சரவணபவன் நேற்று (07.08.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கலட்சுமியின் அன்புக் கணவரும், ஆதவன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), அற்புதராஜன் (டுவாய்), ஆதித்தன் (கட்டார்), விஜிதா (லண்டன்), அருளகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரூபன் (லண்டன்), கலைவாணி (சிங்கப்பூர்) ஆகியோரின் மாமனும், பவீனாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.08.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.30 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்துமானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
சங்குவேலி தெற்கு, மானிப்பாய், T.P- 0212255123

# காணிச் சுவீகரிப்புக்கு நட்டஈடு நடைமுறைச் சாத்தியமற்ற விடயம்

## தெல்லிப்பழையில் காணியை பறிகொடுத்தோர் கேள்வி

யாழ்ப்பாணம், ஓக. 8

26 வருடங்களுக்கு முன்னர் தெல்லிப்பழையில் சுவீகரித்த காணிக்கு இதுவரை நட்டஈடு வழங்காத அரசு தற்போது சுவீகரிக்க முற்படும் காணிக்கு நட்டஈடு வழங்கவா போகின்றது? அவ்வாறு தருவதாக இருந்தாலும் அது எப்போது சாத்தியமாகும் என்று பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது தொடர்பில், சுவீகரிக்கப்பட்ட காணிக்கு உரித்துடையவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். அவர்களில் ஒருவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதிக்கு கடந்த டிசெம்பர் மற்றும் கடந்த பெப்ரவரியில் இவ்விடயம் தொடர்பாக இரண்டு கடிதங்கள் அனுப்பப்பட்டன. ஜனாதிபதி அதனைக் கவனத்தில் கொள்ள வில்லை. வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறிக்கு கடந்த மார்ச், மே ஆகிய மாதங்களில் இரண்டு கடிதங்கள் அனுப்பப்பட்டன. அவரும் அதற்கு பதிலளிக்கவில்லை.


தெல்லிப்பழை பிரதேச செயலாளர் கடந்த ஏப்ரல் 11 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பியிருந்தார். அதில் எம்மை யாழ்.மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு விசாரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அங்கு சென்று விசாரித்தோம். அவர்கள் 1987 ஆம் ஆண்டு சுவீகரிக்கப்பட்ட காணி விடயங்களை பிரதேச செயலகமே கவனிக்க வேண்டும் என்றும், தற்போது சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் காணிகள் தொடர்பாகவே தாம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

இது தொடர்பில் நில அளவை செய்வதற்கு உரிய நடவடிக்கையை காணி ஆணையாளர் மூலமாக மேற்கொண்டு ஆவன செய்யுமாறு கடந்த ஜூன் மாதம் பிரதேச செயலருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காணிபொதுத்தேவைக்குத் தேவைப்படுதாக காணி சுவீகரிப்புச் சட்டம் 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் திருத்தச் சட்டத்தின் படியான காணி எடுத்தல் சட்டத்தின் அத்தியாயம் 460 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் பிரகாரம் சுவீகரிக்கப்பட்டது என 1989 ஆம் ஆண்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. சுவீகரிக்கப்பட்ட காணியில் அண்ணா பண்ணைக்குரிய காணியும் உள்ளடங்குகிறது.

நட்டஈடு வழங்குமாறு பிரதேச செயலரிடம் பலமுறை கேட்டுள்ள போதும். இறுதி நில அளவை செய்த பின்பே நட்டஈடு வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். காலம் தாழ்த்தப்படுகிறதே தவிர இதுவரை நிலஅளவை இடம் பெறவில்லை'' என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (வ-4)

## வீதி 'காப்பெற்' மயமானதால் ஒழுங்கைகள் பள்ளமாகின



யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு அண்மித்த ஏ-9 வீதியில் குறித்த சில ஒழுங்கைகள் மிகப் பள்ளமாகக் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணம், ஓக.8

வீதிப் புனரமைப்பின்போது காப்பெற் வீதியாக மாற்றப்பட்ட ஏ-9 வீதி உயரமாக்கப்பட்டுள்ளதால் ஒழுங்கைகள் பள்ளமாகியுள்ளன. இதன் காரணமாக அந்தப் பகுதி குடிமனைகளுக்குள் மழை காலத்தில் வெள்ள நீர் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வீதிப் புனரமைப்பின்போது யாழ். கண்டி ஏ-9 வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ளது. இதனால் வீதி முன்பாக இருந்ததை விட உயரமாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஏ- 9 வீதிக்கு குறுக்கே உள்ள ஒழுங்கைகள் பள்ளமாகக் காணப்படுகின்றன.

யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு அண்மித்த ஏ-9 வீதியில் குறித்த சில ஒழுங்கைகள் மிகப் பள்ளமாகக் காணப்படுகின்றன.

இதனால் அந்தப் பகுதி ஒழுங்கைகளுக்கு அண்மித்த குடிமனைகளுக்குள் மழை காலத்தில் வெள்ளம் புகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் சுண்டுக்குளி காட்டுக் கந்தோர் வீதியின் ஒரு பகுதி வெள்ள நீர் வழிந்தோடும் வாய்க்கால் புனரமைப்புப் பணிகள் முடிவடையாத நிலையில் காணப்படுகிறது.

இதனை உடனடியாகச் சீர் செய்து தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-14-135)

## அபிமான வீட்டுத் திட்டத்துக்கான கொடுப்பனவு வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ்.மாவட்ட சமுர்த்தி சங்கங்களால் ''திரிய பியச'' வீடமைப்புஅபிவிருத்திவேலைத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 19 பேருக்கான கொடுப்பனவுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் 16லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த 15 பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து இந்தத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

நிதி ஒதுக்கீட்டின் பிரகாரம் நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் ஒருவருக்கு தலா 85 ஆயிரம் ரூபா வீதமும், நல்லூர் பிரதேசத்தில் இருவருக்கு ஒரு லட்சத்து 55 ஆயிரம் ரூபா வீதமும் தெல்லிப்பழை, கோப்பாய், சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களில் இருவருக்கு வழங்க தலா ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா வீதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகத்தால் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## பக்தர் கூட்டத்தின் அரோகரா கோஷத்துடன் செல்வச் சந்நிதியில் நேற்று கொடியேற்றம்





வடமராட்சி, ஓக. 8

பிரசித்திபெற்ற தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில் வருடாந்தப் பெருந் திருவிழா நேற்று புதன் கிழமை அதிகாலை 4.30 மணியளவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அரோகரா, முருகா, ஆற்றங்கரையானே, கந்தா, வேலவா எனப் பக்திக் கோஷம் எழுப்ப கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொடியேற்றத்துடன் விசேட பூசைகள் இடம்பெற்று முருகப் பெருமான் உள்வீதி, வெளிவீதி வலம் வந்து திரண்டிருந்த பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுத்தார்.

அதிகாலை வேளை கொடியேற்றம் நடைபெற்றபோதும் பெருந்திரளான பக்தர்கள் தனியார் வாகனங்கள், ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்களில் வந்து சேர்ந்தனர். தூர இடங்களைச் சேர்ந்த பக்தர்கள் முதல்நாளே கோயிலை வந்தடைந்து மடங்களில் தங்கியிருந்து கொடியேற்றத் தரிசனத்தை மேற்கொண்டனர்.

கொடியேற்றம் நிறைவுற்றதும் திரண்டு வந்த பக்தர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் காலைத் தேநீர் வழங்கப்பட்டது.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து இரண்டாம் நாள் திருவிழா நேற்று புதன் மாலை நடைபெற்றது. (ஓ-8)

## போக்குவரத்துப் படி வழங்குவதில் தாமதம் ஏன்?

வலி.தென்மேற்கு, ஓக.8

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கு போக்குவரத்துப்படியாக பிரதேச சபையினால் மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் நிதி ஒழுங்காக வழங்கப்படாமை குறித்து விசனம் தெரிவித்துள்ள உறுப்பினர்கள், காலதாமதத்துக்குரிய காரணம் தெரியாமல் விழிக்கின்றார்கள்.

பிரதேச சபைகளில் நடைபெறும் மாதாந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களுக்கு மாதாந்த போக்குவரத்துச் செலவாக தவிசாளருக்கு 10 ஆயிரம் ரூபாவும் உபதவிசாளருக்கு 7,500 ரூபாவும் மற்றும் உறுப்பின்ர்களுக்கு 5 ஆயிரம் ரூபாவும் பிரதேச சபையினால் வழங்கப்படுவது வழக்கம்.

இந்த நிலையில் கடந்த இரு மாதங்களாக இந்த நிதியை வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. ஜூன் மாதத்துக்குரிய நிதி ஓகஸ்ட் மாதம் வழங்கப்பட்டுள்ளது. ஜூலை மாதத்துக்குரிய நிதி இதுவரை வழங்கப்படவில்லை.

ஒருநாள் நடைபெறவேண்டிய மாதாந்தக் கூட்டம் பல நாள்கள் தொடர்ந்து நடைபெறுவதனால் பாதிப்புக்குள்ளான உறுப்பினர்கள் காலதாமதமாக நிதி வழங்கப்படுவது குறித்துக் கவலை தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை, ஏனைய பிரதேசசபை உறுப்பிணர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகள் ஒழுங்காக வழங்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ-115)

# நல்லூரில் நேற்று இடம்பெற்ற நடமாடும் சேவை



யாழ்ப்பாணம், ஓக. 8

நல்லூர் பிரதேச சபையின் ''மக்களை நோக்கிய நடமாடும் சேவை'' நேற்று புதன்கிழமை மணியந்தோட்டம் முன் பள்ளியில் பிரதேச சபை தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.


காலை 9 மணிக்கு ஆரம்பமான மேற்படி சேவையில் அதிகமான மக்கள் சோலை வரிக்கான பகுதியிலேயே சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டினர். சோலை வரி தவிர்ந்த வியாபார நிலையங்களின் உரிமங்கள், சிமெந்துக் கட்டடம் தொடர்பான சேவைகளும் இடம்பெற்றன.

இதேவேளை இடம்பெற்ற புத்தகக் கண்காட்சியில் சிறுவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். ஆயுள்வேத மருத்துவ சேவையும் நடமாடும் சேவையின்போது வழங்கப்பட்டது. (வ-7)

உதயன்
08/08/2013

# தொடரும் தாக்குதல்

## இந்திய எல்லையில் போர்ப் பதற்றம்



புதுடில்லி, ஓக.8
நேற்றுமுன்தினம் இந்திய எல்லைக்குள் ஊடுருவிய பாகிஸ்தான் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 5 இந்திய இராணுவத்தினர் உயிரிழந்தனர்.
இந்தநிலையில் நேற்றும் பாகிஸ்தான் இராணுவத்தினர் இந்திய நிலைகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதையடுத்து இந்திய இராணுவத்தினர் பதில் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அதையடுத்து இரு நாடுகளிடையே பதற்றம் ஏற்பட்டுள்ளது.
நேற்று மதியம் காஷ்மீரின் ஊரி என்ற இராணுவ முகாம் பகுதியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலை அடுத்து இந்திய இராணுவத்தினரும் பதில் தாக்குதலை நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதல்கள் சுமார் இரு மணி நேரம் நடைபெற்றுள்ளது. தாக்குதல்களில் இரு பாகிஸ்தான் இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர் என்று தெரியவருகின்றது. அதையடுத்து இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் தாக்குதல் நடைபெற்ற இடத்துக்குச் சென்றுள்ள இந்திய இராணுவத் தளபதி பிக்ரம் சிங், எல்லைப் பாதுகாப்பு குறித்து ஆராய்ந்து வரும் நிலையில் மீண்டும் தாக்குதல் நடைபெற்றுள்ளது.(ற)



இந்திய எல்லையில் நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இந்திய இராணுவத்தினரின் உடல்கள் காஷ்மீரில் வைக்கப்பட்டுள்ளன. இந்திய இராணுவ தளபதி பிக்ராம் சிங் உயிரிழந்த இராணுவ வீரர்களின் உடல்களுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினார். (ற)



இந்திய எல்லைக்குள் ஊடுருவிய பாகிஸ்தான் இராணுவத்தினர் இந்திய நிலைகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதைக் கண்டித்து இந்து மக்கள் கட்சி சார்பில் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் போது பாகிஸ்தான் தேசியக் கொடி தீயிட்டு எரிக்கப்பட்டது. அதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

# பேச்சு நடத்த இது நேரமல்ல

## – அத்வானி

புதுடில்லி, ஓக.8
பாகிஸ்தானுடன் பேச்சு நடத்துவதற்கு இது நேரம் அல்ல என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.க. தலைவர் அத்வானி.
இந்திய எல்லையில் இடம் பெற்றுவரும் தாக்குதல்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
''எல்லைப் பகுதியில் அத்துமீறி பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி வருகின்றது. அதில் 5 இந்திய இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் பாகிஸ்தானுடன் பேச்சுக்கள் நடத்துவது எந்தப் பயனையும் தரப்போவதில்லை. பேசுவதற்கான நேரம் இதுவல்ல'' என்று தெரிவித்துள்ளார் அத்வானி. (ற)



# தலைவா வந்தால் குண்டு வெடிக்கும்

## திரையரங்குகளுக்கு மிரட்டல்



சென்னை, ஓக.8
நடிகர் விஜய் நடித்த 'தலைவா' படம் திரையிடப்பட உள்ள 9 தியேட்டர்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதை அடுத்து பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.
நடிகர் விஜய் நடித்துள்ள 'தலைவா' திரைப்படம் நாளை வெளியாக உள்ளது. இந்த நிலையில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்ட மாணவர் புரட்சிப் படை என்று முகவரியிட்டு, திரைப்படத்தை வெளியிடவுள்ள திரையரங்குகளுக்கு மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
''தலைவா திரைப்படத்தை திரையிட்டால் திரையரங்குகளில் குண்டு வெடிக்கும்'' என்று அந்தக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதையடுத்து தலைவா திரைப்படத்தை திரையிடவுள்ள திரையரங்குகளுக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள் ளது. (ற)

# திராவிடக் கட்சிகள் இனி ஆட்சிக்கு வரா

## காடுவெட்டிக் குரு காட்டம்



காஞ்சிபுரம், ஓக.8
திராவிடக் கட்சிகள் இனி ஆட்சிக்கு வராது. பா.ம.க. மீது பொய் வழக்குகளை பதிவு செய்யும் அ.தி.மு.க. அரசுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்று காட்டமாகத் தெரிவித்துள்ளார் காடுவெட்டிக் குரு.
மகாபலிபுரத்தில் பா.ம.க. நடத்திய மாநாட்டைத் தொடர்ந்து எழுந்த கலவரத்தையடுத்து பா.ம.க.வின் முக்கிய பிரமுகர் பலர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் காடுவெட்டி குரு தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.
இந்த நிலையில் காஞ்சிபுரம் அருகே நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் தமிழக அரசையும், தமிழக மின்துறை அமைச்சர் நத்தம் விஸ்வநாதனையும் விமர்சித்து அவதூறாக பேசினார் என்று அவர் மீது மீண்டும் வழக்கு பதிவு செய்துள்ளனர் பொலிஸார்.
அந்த வழக்கு விசாரணைகளின் பின்னர் மீண்டும் புழல் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது செய்தியாளர்களைச் சந்தித்தார் காடுவெட்டிக் குரு. அதன் போதே இவ்வாறு காட்டமாகக் கருத்துத் தெரிவித்தார் அவர்.
அங்கு அவர் மேலும் கூறியதாவது:
''ஆளும் கட்சியான அ.தி.மு.க. இன்னும் எத்தனை வழக்குகள் போட்டாலும் அந்த அடக்குமுறைகளுக்கு நாங்கள் அஞ்சமாட்டோம். அத்தனை வழக்குகளையும் நீதிமன்றத்தில் உரிய முறையில் எதிர்கொண்டு வெற்றி பெறுவோம்.
பா.ம.க.வினர் மீது அடக்குமுறைகளை ஏவி விடும் திராவிடக் கட்சிகளுக்கு இது தான் இறுதி ஆட்சி. அதிமுக. மீது மக்கள் கோபமாக உள்ளனர். எதிர்வரும் தேர்தலில் மக்கள் அரசின் அடக்கு முறைக்களுக்கு எதிராகச் சரியான பாடம் புகட்டுவார்கள்'' என்று தெரிவித்தார். (ற)

# மன்னிப்பு கேட்க வேண்டும் அந்தோனி

## இந்திய நாடாளுமன்றத்தில் பெரும் அமளி

புதுடில்லி, ஓக.8
இந்திய எல்லையில் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து முரணான தகவல்களை நாடாளுமன்றத்தில் தெரிவித்தமைக்காக இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கோரி இந்திய நாடாளுமன்றத்தில் பெரும் அமளி ஏற்பட்டது.
நேற்றுமுன்தினம் இந்திய எல்லைப் பகுதியில் இடம் பெற்ற தாக்குதல் குறித்து நாடாளுமன்றில் விளக்கமளித்த ஏ.கே. அந் தோனி ''பாகிஸ்தான் இரா ணுவ சீருடையில் வந்த தீவிரவாதிகள் இந்திய இராணுத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள்'' என்று கூறியிருந்தார்.
எனினும் இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சு வெளியிட்டிருந்த அறிக்கையில் பாகிஸ்தான் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 5 இந்திய இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.



அதையடுத்தே நேற்று நாடாளுமன்றில் பெரும் அமளி ஏற்பட்டது.
இதுகுறித்துக் கடும் கண்டனம் வெளியிட்ட எதிர்க்கட்சிகள் இந்த விடயம் தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் ஏ.கே.அந்தோனி மன்னிப்புக் கோர வேண்டும் என்று வலியுறுத்தின.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த யஷ்வந் சின்ஹா, ''ஏ.கே.அந்தோனி பாகிஸ்தானைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடுகின்றார். அவர் இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சரா? அல்லது பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சரா என்று சந்தேகம் ஏற்படுகின்றது என்று தெரிவித்தார். (ற)

# தமிழகம் வருகிறார் பிரணாப்



சென்னை, ஓக.8
சென்னையில் கலாஷேத்ரா சார்பில் நடைபெறும் விழாவில் கலந்த கொள்வதற்காக ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தமிழகம் வரவுள்ளார்.
ஜனாதிபதியின் வருகையை அடுத்து சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ற)

## புஷ்ஷுக்கு சத்திர சிகிச்சை

நியூயோர்க், ஓக.8
அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இருதய அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

67 வயதான புஷ்ஷ்'க்கு நேற்றுமுன்தினம் வழமையான மருத்துவ பரிசோதகைள் மேற்கொள்ளப்பட்டன. அதில் அவரது இதயத்துக்குச் செல்லும் இரத்தக் குழாய் ஒன்றில் அடைப்பு ஏற்பட்டுள்ளதை மருத்துவர்கள் கண்டறிந்தனர். அதையடுத்து அவர் உடடினயாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இதய அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

இரத்தத்தில்உள்ளஅடைப்பை நீக்கும் வண்ணம், சிறிய கருவி ஒன்று அவருக்குத் தற்போது பொருத்தப்பட்டுள்ளது. அவர் நலமுடன் இருப்பதாக அவரது தகவல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஜோர்ஜ் டபிள்யூ புஷ், அமெரிக்காவின் ஜனாதிபதியாக 2001 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை பதவி வகித்துள்ளார். (ற)

# ஆப்கனில் தேர்தல் நடத்துவது நேரத்தை வீணடிக்கும் செயல்

## தலிபான்களின் தலைவர் கூறுகின்றார்

காபூல், ஓக.8
ஆப்கனில் தேர்தல் நடத்துவது நேரத்தை வீணடிக்கும் செயல் என்று தலிபான் அமைப்பின் தலைவர் முல்லா ஓமர் தெரிவித்துள்ளார். அடுத்த ஆண்டு ஆப்கனில் தேர்தல் நடைபெறவுள்ளநிலையிலேயே முல்லா ஓமர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் ஈத் பெருநாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அனைத்து ஆப்கன் மக்களையும் உள்ளடக்கிய இஸ்லாமிய அடிப்படையிலான அரசு ஒன்று அமைய வேண்டும் என்பதே எமது விருப்பம்.



"தேர்தல் என்ற பெயரில் நாடகத்தை நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இந்த வீண் வேலையில் எங்கள் மக்கள் ஈடுபடமாட்டார்கள். தேர்தலில் யார் வெற்றி பெற வேண்டும் என்பதை அமெரிக்கா தீர்மானிக்கிறது. இந்நிலையில், இது போன்ற தேர்தலில் பங்கேற்பது நேரத்தை வீணடிக்கும் செயல். ஆட்சி அதிகாரத்தை எங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்று நாங்கள் நினைக்கவில்லை. அனைத்து ஆப்கன் மக்களையும் உள்ளடக்கிய இஸ்லாமிய மத அடிப்படையிலான அரசு ஒன்று அமைய வேண்டும் என்பதே எங்களின் விருப்பம். எங்கள் மண்ணில் இருந்து கொண்டு பிற நாட்டினருக்கு தீங்கு இழைக்க யாரையும் அனுமதிக்க மாட்டோம்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011ஆம்ஆண்டுஅமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளின் தாக்குதலைத் தொடர்ந்து ஆப்கனில் தலிபான்கள் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டனர். அதன் பின்னரும் தலிபான்களுக்கு எதிரான நடவடிக்கை களுக்குக்காக அங்கு நிலை கொண்டிருக்கும் நேட்டோ படைகள் அடுத்த ஆண்டு இறுதிக்குள் முற்றிலுமாக வெளியேறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## 500 ஆண்டுகளின் பின்னர் திறக்கப்பட்ட பரிஸ் கோபுரம்

பரிஸ், ஓக.8
500 ஆண்டுகளாக மூடி வைக்கப்பட்டிருந்த பிரான்ஸின் பரிஸ் கோபுரம் தற்போது சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டில் 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பிரெஞ்சு புரட்சியின்போது செயிண்ட் ஜாக்ஸ் டி லா போச்செரி கோபுரமானது தாக்கப்பட்டது. அதையடுத்து கோபுரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு மக்கள் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டது.


பரிஸ் நகரத்தின் நடுவே அமைந்துள்ள இந்த கோபுரமானது 62 மீற்றர் உயரமும் மற்றும் 300 படிக்கட்டுகளும் கொண்டமைந்து பார்ப்பதற்கு மிகவும் அழகான தோற்றத்துடனும் அமைக்கப்பட்டுள்ளது. (ற)

## நைரோபி விமான நிலையத்தில் தீ விபத்து

நைரோபி, ஓக.8
கென்யாவின் நைரோபியில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதனையடுத்து விமான நிலையத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டதுடன், பயணிகள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்தத் தீ விபத்தால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் உரிய விவரங்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. (ற)



## ஒரே நேரத்தில் 408 பலூன்கள் புதிய கின்னஸ் சாதனை

பரிஸ், ஓக.8
பிரான்ஸில் உள்ள மெட்ஸ் நகரில்ஆண்டுதோறும்ஓகஸ்ட் மாதம் அனல் பலூனில் பறக்கும் சாகச விளையாட்டு விழா நடைபெறுவது வழமை.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆண்டின் பலூனில் பறக்கும் சாகச விழாவில் ஆயிரத்து 200 வீரர்கள் தமது திறன்களை வெளிப்படுத்தினர்.

983 பலூன்கள் வண்ண வண்ணமாக வானில் வலம் வந்தமை கண் கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. இதில், தரையில் இருந்து ஒரே நேரத்தில் 391 பலூன்கள் வானம் நோக்கி எழுந்த ரம்மியமான காட்சியை சுமார் 3 1/2 லட்சம் மக்கள் கண்டு களித்தனர்.

391 பலூன்கள் ஒரே நேரத்தில் மேலெழுந்ததும், 408 பலூன்கள் வானில் தவழ்ந்ததும் புதிய உலக சாதனையாக பதிவாகியுள்ளது.(ற)

## பிணமாக நடித்தவர் தாகத்தால் சிக்கினார்

பீஜிங், ஓக.8
சீனாவில் அரசின் நிவாரண உதவி பெறுவதற்காகப் பிணம் போன்று நடித்தவர் வெப்பம் தாங்காமல் எழுந்து ஓடியதால் அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டார்.

சீனாவில் இந்த வருடம் மிகவும் கடும் கோடைக் காலம் நிலவுகிறது. வெப்பம் மற்றும் அனல் காற்றின் தாக்கத்தில் பலர் பரிதாபமாக உயிரிழந்து வருகின்றனர்.

அவ்வாறு உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணமாக இழப்பீடு வழங்கி வருகிறது சீன அரசு. அவ்வாறு வழங்கப்படும் நிவாரண உதவியைப் பெறுவதற்காக ஹுபே நகரைச் சேர்ந்த நபர் ஒருவர் அனல் காற்றில் சிக்கி உயிரிழந்தவர் போன்று நடித்துள்ளார்.

அதிகாரிகள் வந்து அவரது உடலைப் பரிசோதித்தனர். திடீரென வெப்பத்தின் தாக்கம் அதிகமானதால் பிணமாகப் படுத்திருந்த நபருக்கு தாகம் அதிகரித்தது.



தண்ணீர் குடிக்காவிட்டால் உயிரே போய் விடும் என்ற நிலையில் இருந்த அவர், உயிரைக் காத்துக் கொள்ள உடனடியாக அருகில் இருந்த தண்ணீர் போத்தலை எடுத்து நீர் அருந்தினார்.

இறந்து கிடந்த உடலொன்று திடீரென எழுந்து தண்ணீர் அருந்துவதைக் கண்ட அரசு அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர். தனது சாயம் வெளுத்துப் போனதால் தப்பி ஓட முயன்ற அந்நபரை பொலிஸார் விரட்டிச் சென்று கைது செய்தனர். மேலும், அவருக்கு உடந்தையாக இருந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற)

# ஏமனில் இருந்து வெளியேறுங்கள்

## அமெரிக்கர்களுக்கு அறிவுறுத்து

சனா, ஓக.8
பயங்கரவாதத் தாக்குதல் அச்சம் காரணமாக ஏமனில் உள்ள தமது நாட்டுப் பிரஜைகளை உடனடியாக வெளியேறும்படி அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது.

அல் - குவைதா அமைப்பின் தலைவர் அய்மான் அல் ஜவாஹிரி அமெரிக்கர்களின் இருப்பிடங்கள் மீது தாக்குதல் நடத்துமாறு உத்தரவிட்டுள்ளார் என்று அமெரிக்க புலனாய்வு அமைப்பு வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

ஏமனில் அல் குவைதா அமைப்பின் ஆதிக்கம் வலுவாக உள்ளது. அதையடுத்து அவர்கள் அங்கு எந்த நேரத்



திலும் தாக்குதல் நடத்தக் கூடிய நிலை காணப்படுகின்றது. அதையடுத்தே தமது நாட்டுப் பிரஜைகளை உடனடியாக அந்த நாட்டில் இருந்து வெளியேறுமாறு அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளும் ஏமனில் உள்ள தமது தூதரகங்களைத் தற்காலிகமாக மூடியுள்ளதுடன். அங்குள்ள தமது நாட்டுப் பிரஜைகளுக்குப் பாதுகாப்புத் தொடர்பான எச்சரிக்கையையும் விடுத்துள்ளன. (ற)

## குள்ளமான சகோதரர்கள் இடம்பிடித்தனர் கின்னஸில்

நியூயோர்க், ஓக.8
அமெரிக்க கல்லூரி மாணவி பிரிட்ஜெட் ஜொர்டன் உலகிலேயே மிகவும் குள்ளமான பெண் என்ற கின்னஸ் உலக சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

இவரது உயரம் வெறும் 27 அங்குலம்தான். பிரிட்ஜெட் ஜொர்டனுக்கு 22 வயது. இவரது சகோதரர் பிராட் ஜார்டனுக்கு 20 வயது.

பிரிட்ஜெட்டின் உயரம் 27 அங்குலம் என்றால், பிராட்டின் உயரம் 38 அங்குலம். உலகிலேயே குள்ளமான உடன் பிறப்புகளும் இவர்கள்தான் என்கிறது கின்னஸ் நிர்வாகம்.

இவர்கள் இருவரும் மத்திய இல்லினாய்சில் உள்ள கஸ்கசியா கல்லூரியில் படித்து வருகின்றனர். நடனம், சீயர் லீடிங் ஆகியவை பிரிட்ஜெட்டின் பொழுதுபோக்குகள். பிராட், கராத்தே, ஜிம்னாஸ்டிக், கூடைப்பந்து, மஜிக் என்று பல விடயங்களில் ஆர்வமுள்ளவராக இருக்கிறார்.

28.5 அங்குல உயரமான துருக்கியைச் சேர்ந்த எலிப் கோகமேன்தான் இதற்கு முன்பு உலகின் குள்ளமான பெண்ணாகத் திகழ்ந்தார். அவரை முந்திவிட்டார் பிரிட்ஜெட்.

பூமியில் பிறந்தவர்களிலேயே குள்ளமான பெண் என்றால் அது நெதர்லாந்தைச் சேர்ந்த பாலின் மஸ்டர்ஸ்தான். அவரது உயரம் வெறும் 24 அங்குலம்தான். அவர் 1895ஆம் ஆண்டு தனது 19ஆவது வயதில் நிமோனியாவால் உயிரிழந்தார். (ற)



சிகை அலங்காரங்களில் பல்வேறு வகைகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் ஆபிரிக்க சிகை அலங்கார ஸ்டைல். அந்த முடியலங்காரத்தால் ஒரு பெண் சாதனையை புரிந்துள்ளார். 38 வயதான ஏவின் டுகாஸ் என்ற அந்தப் பெண் உலகிலேயே பெரிய ஆபிரிக்க சிகை அலங்கார முடியைக் கொண்டவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். 14 வருடங்களாக அவ்வாறான சிகை அலங்காரத்துடன் உள்ள டுகாஸின் தலைமுடியின் நீளம் 1.32 மீற்றர். (ற)

## ஸ்ரீல.சு.கட்சி அலுவலகம் சாவல்கட்டில்

வலி.தென்மேற்கு, ஓக.8

சாவல்கட்டு கிராமத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளை அலுவலகம் நாளைமறுதினம் 10 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் கடற்றொழில் நீரியல் துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனரத்ன கிளை அலுவலகத்தைத் திறந்து வைப்பார். (ஓ-115)

## இன்று நடைபெறும் ஜோதிலிங்க இரத பவனி

யாழ்ப்பாணம், ஓக.8

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினால் நடத்தப்பட்டுவரும் ஜோதிலிங்க இரத பவனி இன்று வியாழக்கிழமை வடமராட்சி, வலிகாமம், கிளிநொச்சி பிரதேசங்களில் நடைபெறவுள்ளது.

இதில் வடமராட்சி பிரதேசத்தில் காசி விஸ்வநாதர் ஜோதிலிங்க இரதபவனி காலை 8 மணிக்கு அல்லையம்பதி முருகன் ஆலயத்திலும், முற்பகல் 11 மணிக்கு கோயிற் கடவைப் பிள்ளையார் ஆலயத்திலும் நடைபெறவுள்ளன.

வலிகாமம் பிரதேசத்தின் ஸ்ரீ சோமநாதர் ஜோதிலிங்க இரதபவனி காலை 7 மணிக்கு பனிப்புலம் அம்மன் ஆலயத்திலும், மாலை 4 மணிக்கு பண்ணாகம் விசுவத்தனை முருகன் ஆலயத்திலும், இரவு வழக்கம்பரை அம்மன் ஆலயத்திலும் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி பிரதேசத்தில் இராமேஸ்வரர் ஜோதிலிங்க இரத பவனி முற்பகல் 10 மணிக்கு கணேசபுரம் பிள்ளையார் ஆலயத்திலும், நண்பகல் 12மணிக்கு திருநகரிலும், பிற்பகல் 1.30 மணிக்கு ஜெயந்தி நகரிலும், பிற்பகல் 3 மணிக்கு உருத்திரபுரத்திலும், இரவு பொறிக்கடவை அம்மன் ஆலயத்திலும் இடம்பெறவுள்ளன. (ஓ-14)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி,தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

போலிகள் நடமாடுவதால், பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியில் **'சித்தாரா டிஸ்பென்சரி' 'வைத்திய முத்திரைக் குறியீடு'** என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் **'ஒறிஜினல்'** என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.

*Manufactured By:*
**SITHARA PRODUCTS**
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228 (c/11040)(6)

**யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:**
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

**கணக்கு உதவியாளர்/ எழுதுவினைஞர்/விற்பனையாளர்**

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கணக்கியலில் தகைமை உள்ள ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றன. விற்பனைத் துறையில் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். கிளிநொச்சி நகரப் பகுதிக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

***விண்ணப்ப முடிவு திகதி : 13.08.2013***

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :
நாராயணா செரமிக் யுனிற்,
இல.113, கண்டி வீதி, கிளிநொச்சி. (C/9777)(8)

## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BIDS

1. **The Chairperson, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs) | Contract Period | Minimum Required Grade ICTAD | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| 1 | YA/CWP/ RE/ 2013-13 | Chain Link Fencing at Graduate Studies and Allied Health Science Unit, University of Jaffna. | 3.2 million | 90 Calendar Days | Building/ C8 or above | Rs. 32,000.00 | 26th December 2013 |
| 2 | YA/CWP/ RE/ 2013-14 | Improving Facilities at Kanagasuntheram Male Hostel and Sivagnanasundram Female Hostel, University of Jaffna. | 4.2 million | 90 Calendar Days | Building/ C8 or above | Rs. 42,000.00 | 26th December 2013 |
| 3 | YA/CWP/ AG/KLN/ 2013-WS | Construction of Panel Room and Water Supply System at the Faculty of Agriculture, Ariviyalnagar, Kilinochchi. | 14.1 million | 90 Calender Days | Building/ C6 or above | Rs. 140,000.00 | 26th December 2013 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction with the Institute for Construction Training and Development (ICTAD) as indicated in the above table.
4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the table.
5. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna from 8th August 2013 until 26th August 2013** from **9.00 hrs to 15.00 hrs** upon payment of a non refundable fee of rupees one thousand five hundred **(Rs.1500/-)** for works No 1 and 2 and rupees four thousand (Rs. 4000/-) for work No 3.
7. Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna to reach on or before 14.00 hrs on the 27th August 2013 or be deposited in the tender box kept in the Registrar's office.** Bids will be opened immediately thereafter on **27th August 2013** in the Board room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be Valid for a period for **91 days** from the date fixed for closing of Bids or any extend period.
9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in Section 09 in the Bidding document.
   - In favour of **"Vice Chancellor, University of Jaffna."**
   - Issued by one of the agencies indicated in the clause 16 of ITB of the schedule.
10. Pre Bid meeting will be held at Board room, University of Jaffna at 10.30 hrs on the **21st August 2013 for the works No 1 & 2** and at Ariviyalnagar, Kilinochchi at 10.30 hrs on the **19th August 2013 for the work No 3.**

**Vice- Chancellor,**
**Chairperson, Procurement Committee,**
**University of Jaffna,**
**Thirunelvely, Jaffna.**
**07.08.2013**

(C/9793)(10.6)

## ஆண் ஒருவரைத் தாக்கிய பெண்ணுக்கு தண்டம் நஷ்டஈடு வேறு

யாழ்ப்பாணம், ஓக.8

ஆண் ஒருவரைத் தாக்கிக் காயப்படுத்திய குற்றத்துக்காக, பெண்ணொருவரை நஷ்டஈடும், அபராதமும் செலுத்த உத்தரவிட்டது நீதிமன்று.

புங்குடுதீவைச் சேர்ந்த குறித்த இருவருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக ஒரு கட்டத்தில் குறித்த பெண் ஆண் மகனைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார்.

இந்தப் பிரச்சினை நீதிமன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதி வான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் குறித்த பெண் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதனையடுத்து நஷ்ட ஈடாக குறித்த ஆணுக்கு 5 ஆயிரம் ரூபா செலுத்துமாறும், அபராதமாக ஆயிரத்து 500 ரூபாவும் 6 மாத சிறைத் தண்டனையும் விதித்து 5 வருடங்களுக்கு ஒத்தி வைத்து தீர்ப்பளித்தது நீதிமன்று. (ஓ-4)

## 25 ஆயிரம் ரூபாவை நஷ்டஈடாக செலுத்தும் லான்ட்மாஸ்ரர் சாரதி

யாழ்ப்பாணம், ஓக.8

விபத்தை ஏற்படுத்திய குற்றத்துக்காக லான்ட்மாஸ்ரர் சாரதியொருவரை 25 ஆயிரம் ரூபா நஷ்டஈடு செலுத்துமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

ஊர்காவற்றுறையில் சிறு வீதியொன்றினூடாக வாகனத்தைச் செலுத்திச் சென்ற லான்ட்மாஸ்ரர் சாரதி பிரதான வீதிக்கு வாகனத்தைத் திருப்பியபோது பிரதான வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை மோதிச் சேதத்தை ஏற்படுத்தியுள்ளார். இது தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. விபத்தை ஏற்படுத்தியவர் நீதிமன்றில் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து மோட்டார் சைக்கிள் உரிமையாளருக்கு நஷ்டஈடாக 25 ஆயிரம் ரூபா வழங்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஓ-4)

**காணி விற்பனைக்கு**

சங்கத்தானை தாமோதரம்பிள்ளை வீதியில் 6 பரப்புக் காணியும், தனங்கிளப்பில் 46 பரப்பு நெற்காணியும் விற்பனைக்குண்டு.

தொ.பே. 075 506 1893 (29614) (6.3)

**TV கள் மலிவு விலையில்**

யாழ் நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் உத்தரவாதத்துடன் SONY Wega TV கள் 21"- 11000/= முதல், 29"- 16000/= Panasonic 29" -15000/= DTS amp, Box, DVD என்பன.

தொடர்பு: 077 044 0570
சேனி ரேற் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, சுன்னாகம்.
(30314)(46.63)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் வீதி மின்குமிழ்கள் அபகரிப்பு

## திருட்டுப் பேர் வழிகள் கைவரிசை

தென்மராட்சி, ஓக. 8



இரவு வேளை தமது நடமாட்டத்துக்கு இடைஞ்சலாகக் காணப்படும் மின் குமிழ்கள் திருடர்களால் அபகரிக்கப்படும் சம்பவங்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்றன என்று மக்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி கற்குளி, வீரபத்திரர் ஆலய வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த மின் குமிழ்களை ஞாயிற்றுக்கிழமை இரவு மின்தடை இருந்த நேரத்தில் இனந்தெரியாதோர் அபகரித்துச் சென்றுள்ளனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். ஆலய வளாகத்தில் இரவு வேளையில் பிறர் நடமாடுவதை அவதானிக்கவெனப் பொருத்தப்பட்டிருந்த மின் குமிழ்களே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளன என்று மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.(ச-9)

# வடபகுதி வைத்தியசாலைகளில் 202 வைத்தியர்கள் பற்றாக்குறை

## நீண்டகாலமாக நிலவுகிறது என்கிறார் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஓக.8

வடமாகாணத்தில் யாழ். போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளில் 202 வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.

இதனால் மக்களுக்கு சேவை வழங்குவதில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி ஜுட்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் யாழ். போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளில் பணிபுரிய வென 557 வைத்தியர்கள் தேவைப்படுகின்றனர்.

ஆனால் தற்போது 355 வைத்தியர்களே கடமையாற்றுகின்றனர். மீதி 202 வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. இந்தக் குறைபாடு இன்று வரை நிவர்த்தி செய்யப்படவில்லை.

குறிப்பாக யாழ்.மாவட்டத்திலுள்ள மாகாண வைத்தியசாலைகளில் பணிபுரிய 155 வைத்தியர்கள் தேவை. ஆனால் 69 வைத்தியர்களே கடமையில் உள்ளனர். மீதி 86 வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் பணிபுரிய 90 வைத்தியர்கள் தேவை. தற்போது 59 பேர் மட்டுமே உள்ளனர். மீதி 31 வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.



முல்லைத்தீவு மாவட்டத்தில் 94 வைத்தியர்கள் தேவை. தற்போது 54 வைத்தியர்களே உள்ளனர். மீதி 40 வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் பணிபுரிய 96 வைத்தியர்கள் தேவை. ஆனால் இங்கு 62 வைத்தியர்களே உள்ளனர். மீதி 34 வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.

வவுனியா மாவட்டத்தில் 122 வைத்தியர்கள் தேவை. தற்போது 111 வைத்தியர்கள் உள்ள நிலையில் 11 வைத்தியர்களுக்குப் பற்றாக் குறை நிலவுகிறது. இதனால் தற்போது பணியாற்றும் வைத்தியர்கள் குறிப்பாக கிராமப்புற வைத்தியர்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர்- என்றார். வருடாந்தம் வைத்தியர்களாகப் பலர் நியமிக்கப்படுகிறார்கள். இதில்ஒரு பகுதியினர் வடக்கு மாகாணத்துக்கு நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் வடக்கில் நிலவும் வைத்தியர்களுக்கான தேவை இன்றுவரை சீர் செய்யப்படாத நிலையில் உள்ளது. பற்றாக்குறை தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-4)

# யாழ்.பிரதேச செயலர் பிரிவில் மீண்டும் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஓக.8

யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவில் எதிர்வரும் 14 ஆம் திகதி தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவை மீண்டும் இடம்பெறவுள்ளதாக யாழ்ப்பாணம் பிரதேச செயலர் திருமதி சுகுணாரதி தெய்வேந்திரன் தெரிவித்தார். 'கபே' அமைப்பின் அனுசரணையுடன் நடைபெறும் இந்த நிகழ்வில் பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கான செயற்பாடுகள் இடம்பெறமாட்டாது எனவும் பிரதேச செயலர் மேலும் குறிப்பிட்டார். (வ-7)



குருநகர் மத்திய கிழக்கு வீதியில் அமைந்துள்ள கழிவுநீர் வடிகாலில் குப்பைகள் அடைத்து கழிவுநீர் செல்ல முடியாமல் உள்ளதைக் காணலாம். (ச-51)

# 30 வருடங்களின் பின் இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலயத் திருவிழா

பளை, ஓக.8

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலய அலங்காரத் திருவிழா முப்பது வருடங்களின் பின்னர் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

சயனம், வெண்ணெய் திருடல், சர்ப்பம், மஹாகம்சன் போர், சப்பறம் ஆகிய திருவிழாக்களின் பின்னர் எதிர்வரும் 19 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் ஆழியவளை கடலில் சமுத்திர தீர்த்தமும் இடம் பெற்று மறுநாள் கேணித் தீர்த்தமும் இடம்பெறும்.

கிரியாசாகரம் சிவஸ்ரீ க.நாகேஸ்வரக் குருக்கள் தலைமையில் திருவிழா கிரியைகள் இடம்பெறும். (ஒ-5)

# புதிய பாதுகாப்புச் சபைகளை உருவாக்க கலந்துரையாடல்

அச்சுவேலி, ஓக. 8

பிரதேச செயலர் பிரிவு வாரியாக செயற்படும் ஆயுள்வேத பாதுகாப்புச் சபைகளின் செயற்பாடுகளை ஸ்திரப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல், ஆயுள்வேத பாதுகாப்புச் சபைகள் செயற்படாத பிரதேச செயலர் பிரிவுகளில் புதிய பாதுகாப்புச் சபைகளை உருவாக்குதல் என்பவை தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஆயுள்வேத பாதுகாப்புச் சபைகளின் தலைவர், செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலகத்தில் ஆயுள்வேத பாதுகாப்புச் சபை விடயங்களைக் கையாளும் அலுவலர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்கள ஆணையாளர் திருமதி சியாமா துரைரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார். (ச-11)

# பலாலி ஆசிரியர் கலாசாலை செயற்பாடுகள் இவ்வருடத்துடன் நிறைவுக்கு

## புதிய ஆளணியினருக்கு விண்ணப்பம் கோரப்படவில்லை

அச்சுவேலி, ஓக. 8

பலாலி ஆசிரிய கலாசாலையின் செயற்பாடுகள் இந்த வருடத்துடன் நிறுத்தப்படவுள்ளன. இந்த நிலையில் இந்த வருடம் பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சிபெற விண்ணப்பங்கள் கோரப்படவில்லை.

இந்த வருடம் ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு பலாலி ஆசிரிய கலாசாலை தவிர்ந்த ஏனைய 8 ஆசிரியர் கலாசாலைகளுக்குமான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. விண்ணப்ப இறுதித் தினம் ஓகஸ்ட் 05 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டு வர்த்தமானி விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது.

பலாலி ஆசிரியர் கலாசாலையில் கடந்த வருடம் ஆங்கில பாட பயிற்சி நெறிக்கு மட்டும் 45 பயிற்சி ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

அவர்களுக்கான பயிற்சிகள் இந்த வருட இறுதியுடன் நிறைவடைகின்றன. ஆசிரியர் கலாசாலை தொடர்ந்து செயற்பட அனுமதிக்கப்படுமானால் புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்க வேண்டும்.

பலாலி ஆசிரியர் கலாசாலை வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் வயாவிளான் சந்திக்கும் பலாலி விமான நிலையத்துக்கும் இடையில் உள்ள 52 ஏக்கர் நிலப்பரப்பில் ஆசிரியர் பயிற்சிக்கான சகல வள வசதிகளுடனும் செயற்பட்டு வந்தது.

1981 ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படையினரின் வருகையுடன் பலாலியில் இருந்து முற்றாக நிறுத்தப்பட்டது.

ஆசிரிய கலாசாலை வளாகத்தில் அமைதிப்படை முகாமிட்டு இருந்தது.

பலாலியில் இருந்து இடம்பெயர்ந்த பலாலி ஆசிரிய கலாசாலை கடந்த 26 வருடங்களுக்கு மேலாக பல்வேறு இடங்களில் மாறி மாறி இயங்கியது.

தற்பொழுது திருநெல்வேலியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் செயற்பட்டு வருகிறது.

பலாலி ஆசிரியர் கலாசாலையை கடந்த வருடம் மூடுவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்ததோடு பலாலி ஆசிரியர் கலாசாலைக்குச் சொந்தமான 52 ஏக்கர் காணி மற்றும் கட்டடத் தொகுதியை பாதுகாப்பு அமைச்சு கையேற்பதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஆசிரியர் தொழிற் சங்கங்கள் மற்றும் கல்வியியலாளர்களால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அறிக்கைகள் வெளியிடப்பட்டன. அத்துடன் அந்த விடயம் கிடப்பில் போடப்பட்டது.

பலாலி ஆசிரியர் கலாசாலைக்குச் சொந்தமான தளபாடங்கள், நூல் நிலையத்தில் இருந்த புத்தகங்கள் என்பன யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டன.

ஆசிரிய கலாசாலையின் நிர்வாகம் தொடர்பான அனைத்து கண்காணிப்பும் மேற்பார்வையும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இதற்காக கொழும்பு கல்வி அமைச்சில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்த உயர் அதிகாரிகள் குழு சில தினங்கள் இங்கு தங்கியிருந்து மேற்படி ஒழுங்குகளை செய்திருக்கிறது.

பலாலி ஆசிரியர் கலாசாலையின் இறுதிப் பயிற்சி ஆசிரியர் அணியாக ஆங்கிலப் பயிற்சி நெறியை சேர்ந்த அணியுடன் பலாலி ஆசிரியர் கலாசாலை செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்படவுள்ளன.

பலாலி ஆசிரியர் கலாசாலையில் தற்போது கடமையில் உள்ள ஆளணியினர் வேறு நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். (வ-11)

# ஆஸி. பயணத்தைத் தடுக்க கிழக்கு கடற்கரையோரத்தில் ரோந்து நடவடிக்கை தீவிரம்



திருகோணமலை,ஓக.8
கிழக்கு கடற்கரையோரப் பகுதிகளில் கடற்படையினர் தீவிர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மைக் காலமாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இருந்து சட்ட விரோதமாக ஆஸ்திரேலியா செல்பவர்களின் வீதம் அதிகரித்துள்ளது.

கடந்த சில வாரங்களாக இவ்வாறு கடல் மார்க்கமாகச் செல்ல முற்பட்ட பலர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை, சட்டவிரோதமாக படகுகள் மூலம் ஆஸ்திரேலியா செல்பவர்களைத் தடுக்கும் விசேட செயற்றிட்டம் ஒன்றையும் கடற்படையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

அத்தோடு அப்பாவி மக்களை ஏமாற்றி ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பிவைக்கும் போலி முகவர்களையும் அவர்கள் தேடி வருகின்றனர்.

ஆபத்தான ஆஸ்திரேலியா பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று கடற்படையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

> சட்டவிரோதமாக படகுகள் மூலம் ஆஸ்திரேலியா செல்பவர்களைத் தடுக்கும் விசேட செயற்றிட்டம் ஒன்றையும் கடற்படையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

கல்லடிப் பாலத்துக்கு அருகில்

## இயந்திர படகுகளை நிறுத்த வேண்டாம்

மட்டக்களப்பு,ஓக.8
மட்டக்களப்பு நகர் வாவியின் கல்லடிப் பாலத்துக்கு அருகில் மீன்பிடி இயந்திர படகுகள் நிறுத்துவதை உடனடியாக தடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை சுற்றாடல் மத்திய அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலக பொறுப்பதிகாரி எஸ்.கோகுலனினால் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளருக்கு மனு மூலம் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கல்லடிப் பாலத்தின் மட்டு நகர் வாவி அருகில் மீன்பிடி இயந்திர படகுகள் நிறுத்தப்படுவதால் சுற்றாடல் பாதிப்பு தொடர்பாக அந்தப் பிரதேசத்திலுள்ள பொது அமைப்புக்களும் பொதுமக்களும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டினை அடுத்து அங்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் செய்த களப் பரிசோதனைகளின் போது, அந்த இடத்தில் மீன்பிடி இயந்திரப் படகுகளை நிறுத்தி வைப்பதால் சுற்றாடல் மாசு அடைவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

கழிவு எண்ணெய் வாவியில் கலப்பதால் நீருடன் எண்ணெய்ப்படலம் கலந்து நீர்வாழ் உயிரினங்கள் அழிவடை ம் அபாயம் ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகரித்துச் செல்கின்றது.

இவற்றைக் கருத்தில் கொண்டு மீன்பிடி இயந்திரப் படகு



களை அங்கு நிறுத்துவதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அம்பாறையில் நெல் கொள்வனவு




அம்பாறை,ஓக.8
அம்பாறை மாவட்டத்தில் நெல் கொள்வனவு செய்யும் நடவடிக்கையை நெல் சந்தைப்படுத்தும் சபை செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பித்துள்ளது.

பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, தமன, அம்பாறை ஆகிய நெல் சந்தைப்படுத்தும் களஞ்சியங்களில் நெல் கொள்வனவு இடம்பெற்று வருகின்றது.

ஒரு கிலோ நாட்டரிசி நெல் 32 ரூபாவுக்கும், சம்பா ஒரு கிலோ 35 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுகின்றன. (ச)

## கிழக்கு பல்கலை விரிவுரைகள் ஆரம்பம்



மட்டக்களப்பு,ஓக. 8
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2011/2012 ஆம் கல்வியாண்டுக்கு விஞ்ஞான மற்றும் கலை, கலாசார பீடங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன என்று பதிவாளர் கே. மகேசன் தெரிவித்தார்.

விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள மேற்படி பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் தத்தமது விடுதிகளில் தங்கும் ஆயத்தங்களுடன் பீடங்களின் விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதிக்கு முதல் நாள் கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங்கலடி என்னும் முகவரிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ச)

ஏறாவூர்பற்று பிரதேசத்தில்

## புதிய பிரதேச சபையை உருவாக்க கோரிக்கை


மட்டக்களப்பு,ஓக.8
மட்டக்களப்பு,ஏறாவூர்பற்று பிரதேசத்திலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் கிராமங்களை உள்ளடக்கி புதிய பிரதேச சபை ஒன்றை உருவாக்குவதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை அமைச்சர் பசீர் சேகுதாவூத், கிழக்கு மாகாணசபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ்.சுபைர் ஆகிய இருவரினாலும் கூட்டாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவிடம் முன்வைக்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் பற்று பிரதேசசபை பிரிவிலுள்ள தமிழ், முஸ்லிம் கிராமங்களான ஐயங்கேணி முஸ்லிம் கிராமம், ஐயங்கேணி தமிழ்க் கிராமம், மிச்சி நகர், தாமரைக்கேணி, ஹிஸ்புல்லா நகர், மீராகேணி, சதாம் ஹுஸைன் கிராமம், முஹாஜிபீன் கிராமம், தளவாய், புண்ணக்குடா, சவுக்கடி, குடியிருப்பு உட்பட இன்னும் சில கிராமங்களை உள்ளடக்கி புதிய பிரதேச சபையை அமைக்குமாறு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் சுமார் 6,500 தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் உள்ளன. இந்தக் குடும்பங்களை உள்ளடக்கி புதிய பிரதேச சபையை உருவாக்க வேண்டும் என்று சுபைர் கேட்டுள்ளார். (ச)



கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம். பறஹத்துள்ளாஹ்வின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து கல்முனை அர்- ரிதா முன்பள்ளி பாடசாலைக்கு வெள்ளைப் பலகை கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பறஹத்துள்ளாஹ், பலகையை முன்பள்ளி ஆசிரியரிடம் கையளித்தார். (ச-10)

## யானை தாக்கி ஒருவர் சாவு



அம்பாறை,ஓக.8
அம்பாறை - மத்திய முகாம் பகுதியில் காட்டு யானை தாக்கி புதன்கிழமை அதிகாலை ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலை ஐந்து மணிக்கு மத்திய முகாம், 18 ஆம் கொலனியில் உள்ள தனது வீட்டில் இருந்து அவர் வயலுக்குச் சென்று கொண்டிருந்தபோது குறித்த நபர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

ஜெகன் சந்திரகுமார் (வயது-35) என்பவரே யானை தாக்கி உயிரிழந்துள்ளார். (ச)


## மாமாங்கேஸ்வரர் தீர்த்தத்துக்கு திரண்டு வந்திருந்த பக்தர் கூட்டம்

மட்டக்களப்பு,ஓக.8
இராமாயண காலத்துக்கு முற்பட்டதாகக் கருதப்படும் மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் தீர்த்தத்திருவிழா செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

மாமாங்கேஸ்வரர் ஆலயம் தானாக தோன்றியதன் காரணமாக சுயம்பு ஆலயமாகவும் போற்றப்பட்டு வருகின்றது.

இராவணனால் வழிபடப்பட்ட ஆலயமாகவும், இராவணன் அனுமானின் வாலில் கொளுத்திய தீயை அணைத்த இடமாகவும் இந்த ஆலயம் சிறப்பு பெற்றது.

அனுமனின் தண்டாயுதத்தால் உருவான தீர்த்தக்



கேணியே மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தக்கேணி என்று கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

இத்தனை சிறப்புகளைக் கொண்ட மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் தீர்த்த உற்சவத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். (ச)

## கஞ்சா விற்றவர் மாட்டினார்

ஏறாவூர்,ஓக.8
கஞ்சா போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஏறாவூர் பிரதேசச்தைச் சேர்ந்த நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நபர் ஏறாவூர், தைக்கா வீதி சந்தியில் வைத்து செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

## ஜனாதிபதி தலைமையில் 10 பிரசாரக் கூட்டங்கள்

கொழும்பு,ஒக.8

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பத்து தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன. இந்த பிரசாரக் கூட்டங்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களை முன்னிட்டு நடத்தப்படவுள்ளன.



ஜனாதிபதி தலைமையிலான முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி குருநாகலில் நடைபெறவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் நடைபெறவுள்ள பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் மட்டும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

கிராம, பிரதேச சபை மட்டத்தில் நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அமைச்சர்கள் பங்கேற்கவுள்ளனர். (ச)

# வடக்கு அதிவேக நெடுஞ்சாலையை விரைவில் செயற்படுத்துங்கள்

### சீன அதிகாரிகளிடம் ஜனாதிபதி வலியுறுத்து

கொழும்பு,ஒக.8

வடக்கு அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தை விரைவாக செயற்படுத்துவது குறித்து சீன அரச நிறுவனத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாடினார்.

அலரி மாளிகையில் நடந்த இந்தச் சந்திப்பில், வடக்கு அதிவேக நெடுஞ்சாலையை அமைக்கும் பணியைப் பொறுப்பேற்றுள்ள சீன மேர்ச்சன்ட் குழும நிறுவனத்தின் தலைவர் லீஜியாங்கொங் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் பங்கேற்றனர்.



இந்தக் கலந்துரையாடலில் வடக்கில் தற்போது மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி குறித்து சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, வடக்கு- தெற்கு மக்கள் விரைவாகப் பயணம் மேற்கொள்வதற்கு, அதிவேக நெடுஞ்சாலை அவசியம் என்று தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தை விரைவாக செயற்படுத்துமாறு அவர் சீன அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

வடக்கு அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் தொடர்பான தொழில்நுட்ப, நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான சாத்திய ஆய்வை சீனாவின் மேர்ச்சன்ட் குறூப் தற்போது மேற்கொண்டு வருகிறது.

இந்த நிறுவனமே, கடந்த திங்கட்கிழமை, திறந்து வைக்கப்பட்ட கொழும்பு தெற்கு கொள்கலன் முனையத்தை அமைக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ச)

### மின்சார சபையில் ஊழல், மோசடியா?

# நடவடிக்கை எடுக்க பின் வாங்கமாட்டேன்

கொழும்பு,ஒக.8

மின்சார சபையில் ஊழல் மோசடிகள் நடைபெற்றால் அது குறித்து எனக்கு அறிவிக்க வேண்டும். மோசடிகளுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நான் ஒரு போதும் பின்வாங்கப் போவதில்லை என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் பதவியில் இருக்கும் வரை மின்சாரசபையில் திருட்டோ, மோசடிகளோ இடம்பெற அனுமதிக்கப் போவதில்லை. எஞ்சியுள்ள சகல மின் உற்பத்தி நிலையங்களையும் துரிதமாக செயற்பட வைக்க அரசு எதிர்பார்க்கிறது.

நுரைச்சோலை இரண்டாம் கட்டத்தினூடாக மேலும் 300 மெகாவோல்ட் மின் உற்பத்தி இந்த வருட இறுதியில் தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்படும். சம்பூர் அனல் மின்நிலையத்தினூடாகவும் 500 மெகா வோல்ட் மின்சாரம் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

சம்பூர் அனல்மின் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் இந்த வருடத்துக்குள் ஆரம்பிக்கப்படும்.

இந்த அனைத்து மின் உற்பத்தி நிலையங்களும் செயற்படத் தொடங்கினால் மக்களுக்கு குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்க முடியும். - என்றார். (ச)



லுணுகம்வெஹேர பாலர் பாடசாலை மாணவர்களின் சித்திரக் கண்காட்சி ஹம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
கண்காட்சியை ஆரம்பித்துவைத்த பின்னர் சிறுவர்களின் கைவண்ணங்களிலான சித்திரங்களை அவர் பார்வையிடுகின்றார்.

## கார் மோதி சிப்பாய் சாவு

புத்தளம், மதுரங்குளி, வஜிரவத்த பிரதேசத்தில் புதன் கிழமை காலை சொகுசு கார் ஒன்று மோதியதில் இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பனாகொட இராணுவ முகாமுக்கு கடமைக்குச் செல்ல வீதியில் காத்திருந்தபோது அநுராதபுரத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்ற காரொன்று அவர் மீது மோதியுள்ளது.

அதனையடுத்து கடும் காயங்களுக்கு உள்ளான சிப்பாய், புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்று முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான கார், நிறுத்தப்படாமல் பயணித்த நிலையில் பதுளு ஓயா பிரதேசத்தில் கடமையிலிருந்த போக்குவரத்து பொலிஸாரால் பிடிக்கப்பட்டு காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று முந்தல் பொலிஸார் தெரிவித்தனர். (ச)



### பொதுநலவாய உச்சி மாநாடு:

# 18 நாடுகளின் பிரதிநிதிகள் 16 இல் இலங்கை வருகை

கொழும்பு,ஒக.8

பொதுநலவாய உச்சி மாநாட்டுக்கான ஏற்பாடுகளை பார்வையிடுவதற்கென 18 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழு இந்த மாதம் இலங்கை வரவுள்ளது என்று ஜனாதிபதியின் வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பான பேச்சாளர் அநுராதா ஹேரத் தெரிவித்தார்.




சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழுவினர் எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கை வரவுள்ள நிலையில், மற்றொரு குழுவினர் எதிர்வரும் 23 ஆம் திகதி வருகை தரவுள்ளனர் என்று அவர் கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பில் தங்கியிருக்கும் இந்தப் பிரதிநிதிகளுக்கு பொதுநலவாய உச்சி மாநாட்டை முன்னிட்டு முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து ஏற்பாடுகள் குறித்தும் விளக்கமளிக்கப்படவுள்ளது.

பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் 53 நாடுகளும் எதிர்வரும் நவம்பரில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளன.

இலங்கை வரவுள்ள பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் உட்பட முக்கிய வெளிநாட்டுத் தலைவர்களுக்கு உச்சி மாநாடு தொடர்பிலான ஏற்பாடுகள் மற்றும் அவர்கள் தங்கியிருப்பதற்கான வசதிகள் குறித்த ஏற்பாடுகளை நேரில் கண்டறியும் முகமாகவே அந்த நாடுகளின் பிரதிநிதிகள் குழுக்கள் இந்த மாதம் இலங்கை வர திட்டமிட்டுள்ளன. முன்கூட்டிய வருகைக்கென இது வரையில் 18 நாடு கள் தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளன.- என்றார். (ச)

### வெலிவேரிய சூட்டுச் சம்பவம்:

## பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு ஜனாதிபதி மஹிந்த பணிப்பு

வெலிவேரிய சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களது குடும்பத்தினருக்கு நட்டஈடு வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார்.

தொழிற்சாலையை மூடுமாறு வலியுறுத்தி பிரதேச மக்கள் கடந்த முதலாம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது இராணுவத்தினருக்கும் பொது மக்களுக்கும் இடையிலே மோதல் நிலை ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தில் மூவர் உயிரிழந்துள்ளதோடு, 30 இற்கு மேற்பட்ட பொது மக்கள் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வரிச் சுமையை திணிக்கிறது அரசு

### அஜித் மன்னப்பெரும எம்.பி.குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக.8

போர் நிறைவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் அரசு வரிச் சுமையை மக்கள் மீது திணித்து வருகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார்.



போருக்காகச் செலவிடப்பட்ட பணம் எங்கு செல்கின்றது. அரசின் வரி அறவீடு காரணமாக மக்களின் வாழ்க்கைச் சுமை மேலும் அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார்.

வீதிகளை மூடி கார்ப் பந்தயப் போட்டிகளை நடத்தும் அரசு மக்களின் மீது வரிச் சுமையைத் திணிக்கின்றது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ச)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கின் கல்வி வளர்ச்சி குன்றாது தடுக்க இயலுமா...?

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகி விட்டது. மிகப் பல வருடங்களாக, இந்தப் பரீட்சைக் காலங்களில் அடிக்கடி மின்தடை அல்லது மின்வெட்டு இடம்பெற்றுவரும். அந்த நிலையில், இன்னமும் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டதாக இல்லை.

வன்னிப் பிராந்தியத்தில் அநேகமான பிரதேசங்களில் மின்சார விநியோகம் அறவே இல்லை. குடாநாட்டிலோ சுன்னாகம் மின்நிலையம் புதுக்கி அமைக்கப்பட்டதால் மின் விநியோகம் சீராகும், மாணவர்களின் தேவைகளையும் முழு அளவில் நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதுவும் ஏமாற்றமாகவே முடிந்தாயிற்று.

பெற்றோர்களும் மாணவர்களும் மின்தடை மற்றும் மின்வெட்டு என்ற இரண்டும், இப்போது பரீட்சை எழுதுவோரை மிகவும்– முன்னரைப் போலவே– பாதிப்பதாகக் கவலை தெரிவிக்கிறார்கள்.

தமிழ்ப் பிரதேச பரீட்சார்த்திகளின் நன்மை கருதியேனும், மின் விநியோகத்தை விசேட ஏற்பாடுகள் மூலம் சீராக்க முடியாதா என்ற வினா உயர்ந்து சுருண்டு கிடக்கிறது.

பிரதான பொதுப் பரீட்சைகள் நடைபெறும் காலங்களிலாவது மின் விநியோகத்தை சீராக்காமல் இருப்பதும், வடக்கின் கல்விப் பெறுபேறுகளை வீழ்த்தும் மறைமுக சதிகளில் ஒன்றெனக் கொள்வதில் தப்பில்லையே!

பரீட்சைக் காலத்தில், மின்சாரத்தைத் தடை இன்றி, வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மின்சாரசபையின் யாழ்.தலைமைக் காரியாலயம் பணிப்புரை விடுத்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். அந்தப் பணிப்புரை பிசிறின்றிச் செயற்படுத்தப்பட வேண்டும்; அதனையே பெற்றோர்களும் மாணவர்களும் எதிர்பார்க்கிறார்கள்.

சதா காலமும் ஏதோ ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டிராமல் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தடங்கலற்ற மின்சார வசதி பெறுவதற்கு உடனடியாக வகை செய்ய மாற்று ஏற்பாடுகள் குறித்து சிந்திக்க கூடாதா...?

அது ஒரு புறமிருக்க–

கல்வித் துறை பெரும் சிக்கல்களை எதிர்நோக்கும் சூழ்நிலை உருவாகி வருவதனையும் இங்கு வெளிப்படுத்துவது பொருத்தம்.

அரசியல்வாதிகளின் அனாவசியமான தலையீடுகளால் கல்வித் துறைக்குப் பெரும் சவால் உண்டாக்கப்பட்டு வருவது நாளாந்தம் பிரச்சினையாக ஓங்கி உயர்ந்து வருவது பெரும் விசனத்துக்கு உரியதாகும்.

முன்னர் எல்லாம், சுதந்திரமான, புனிதமான துறையாக விளங்கிய கல்வித்துறை, இப்போது கூட்டுத்தாபனமாகவும், அரசியல் மயமாகவும் மாற்றப்பட்டு விட்டதால், பல சீர்கேடுகள் மேலெ முந்துள்ளதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கவலையுடன் சுட்டிக்காட்டி இருப்பதனை இங்கு தொட்டுக்காட்டுவது பொருத்தம்.

பாடசாலைகளில் முதலிடம் அளிக்கப்பட வேண்டிய ஒழுக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலை மிகப் பெரிய அளவில் அருகி வருவதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

கல்வித்துறை, இவை போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவதற்கு அரசின் உந்து சக்தி தேவை. உரிய செயற்றிட்டங்கள் உணர்வு ரீதியாக நடைமுறையாக்கப்பட வேண்டும்.

மேலும், கற்றலுக்கு உரிய உகந்த சூழல் ஏற்றதாக, உரிய வகையில் அமையும்போதே, மாணவர்கள் கல்வியில் சிறப்பான அடைவு மட்டத்தை எய்த இயலும்.

மிகக் குறிப்பாக, பரீட்சைக் காலத்தில் ஆலயங்களில் ஒலிபெருக்கிகள் பெரும் தொனியில் சத்தம் எழுப்புவதும், மாணவர்களுக்கு இடைஞ்சலும் பாதிப்பும் விளைவிக்கின்றன.

அதேபோன்று பரீட்சை நாள்களிலாவது போக்குவரத்துத் துறை சார்ந்தோரும் தமக்குள்ள, பங்களிப்பை உரிய வகையில் நல்க வேண்டும்.

தமிழர் பிரதேசங்கள் எங்கும் பாடசாலைகளில் பல்கிப் பெருகி விட்ட வளப் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யவும், மேம்படுத்தவும் அந்தந்தப் பாடசாலைகளின் பழைய மாணவர்களுக்கும் பெரும் பங்குண்டு.

மிகக் குறிப்பாக, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில், போருக்குப் பின்னர் மீள ஆரம்பிக்கப்பட்ட மிகப் பெரும்பாலான பாடசாலைகளில், பௌதிக வளங்கள் (கட்டட, தளபாட, மின்சார வசதிகள்) மிகக் குறைந்த வீதத்திலேயே உள்ளன.

அதேபோன்று முக்கிய, பிரதான பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும் எண்ணிக்கையில் பற்றாக்குறை நிலவுகிறது.

யாழ்ப்பாண மற்றும் வவுனியா மாவட்டங்களைத் தவிர்த்து, வன்னி மாவட்டங்களில் ''ரியூசன்'' வசதியும் மிக மிகக் குறைவு. முழுக்க முழுக்கப் பாடசாலைக் கல்வியிலேயே மாணவர்கள் தங்கி இருக்கிறார்கள்.

இவற்றுக்குப் புறம்பாக, திறமையும் அனுபவமும் உள்ள ஆசிரியர்கள் வட பிரதேச அரச பாடசாலைகளில் இருந்து வெளியேறுவது மாகாணத்தில் கல்வியை மிகப் பெரிய அளவில் பாதிப்புறச் செய்யும் என்பதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

மேற்காட்டப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாவிடின், அவற்றைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், வடக்கின் கல்வி நிலை மேன்மேலும் தேய்ந்துவிடும் பேராபத்து உண்டு.

## பணத்துக்கு விலை போகாதீர்கள்

# தமிழர்களின் கைகளில் இருப்பது வாக்கு என்ற ஆயுதம் மட்டுமே

ஈழப்பிரியன்

எதிர்பார்ப்புக்கள் நிறைந்த வடமாகாண சபைத் தேர்தல், இம்முறை பணத்தாலும், வன்முறைகளாலும் நிறையப்போகின்றது என்றதொரு அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் இயல்பாகவே எழுவதைத் தவிர்க்க இயலாது. 36 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான வடமாகாண சபைத் தேர்தலில் தொழாயிரத்து ஆறு வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளார்கள். இவர்களில் பதினான்கு கட்சிகளைச் சார்ந்தோரும் இருபத்தொன்பது சுயேட்சைக் குழுக்களை சார்ந்தோரும் அடங்குவர்.

வடமாகாணசபைத் தேர்தலை தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக் கைப்பற்றும் என்று அரசாங்கமே தெரிவிக்கின்றபோதும் இதனை ஒரு தேர்தல் யுக்தியாகவும் கருதலாம். ஏனெனில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தேர்தலில் வெற்றி பெறும் என்று கூறிவிட்டால் சில வேளை கூட்டமைப்பு கடுமையான தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்காது உறங்கு நிலையில் இருந்து விடும் என்று கூட அரசு எண்ணக்கூடும்.

வடமாகாண சபைத்தேர்தலைப் பற்றி அரசாங்கம் வெளிப்படையாக அலட்டிக்கொள்ளாதது போல் காட்டிக்கொண்டாலும், மறைமுகமாக தேர்தலை எதிர் கொள்வதற்கான பெரும் திட்டமிடலை மேற்கொண்டிருக்கிறது. தேர்தலில் வெற்றி பெறாவிட்டாலும் கணிசமான வாக்குகளை தன் பக்கம் ஈர்க்கவேண்டும் அல்லது சுயேச்சைக்குழுக்கள் மூலம், தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு கிடைக்கின்ற வாக்குகளை சிதறடிக்க வேண்டும் என்பன போன்ற திட்டங்கள் அரசாங்கத்திடம் இருக்கக்கூடும். ஏனெனில் இம்முறை தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளைவிட இருமடங்கான சுயேச்சைக்குழுக்கள் தேர்தல் களத்தில் குதித்துள்ளன. கணிசமான சுயேச்சைக்குழுக்கள் ஏதோ ஒரு வகை தூண்டுதலின் பேரிலேயே களத்தில் குதித்துள்ளன எனப் பரவலாக நம்பப்படுகிறது. இதற்காகப் பெருந்தொகைப் பணமும் கைமாறப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது. எனவே கருத்துக் கணிப்புக்[illegible]ா அரசாங்கமோ சொல்வதைப்போல் அவ்வளவு இலகுவாக வடமாகாண சபையை கூட்டமைப்பு கைப்பற்ற முடியாது. கடினமாக தேர்தல் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தே வெற்றி பெற்றாக வேண்டியுள்ளது.

இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களில் ஏழு மாகாணங்களில் பெரும்பான்மைப்பலத்துடன் ஆட்சியமைத்த அரசாங்கம் கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்துள்ளது. ஆக மொத்தத்தில் எட்டு மாகாண சபைகளையும் தன்வசம் வைத்திருக்கும் அரசாங்கம் தமிழர்களின் இதயப் பகுதியான வட பகுதியில் உள்ள மாகாண சபையை அவ்வளவு இலகுவாக எதிர்த்தரப்புக்கு விட்டுக் கொடுக்க எண்ணமாட்டாது. இதனைத்

> மறைமுக நிதியுதவிகளைப் பெற்று சுயேச்சையாக களமிறங்கியுள்ள வேட்பாளர்கள் மூக்குடைபடுவது திண்ணமாயினும் தேர்தல் காலங்களில் பணத்திற்காக சில தமிழர்கள் விலைக்கு வாங்கப்படுவது என்பது எம்மினத்தின் பலவீனமானதும் வேதனையானதுமான விடயமாகும். எனவே தமிழர்கள் வரலாறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

தனது கௌரவப்பிரச்சினையாகவும் அரசு கருதலாம். இதனாலேயே கணிசமான சுயேச்சைக்குழுக்கள் மூலம் போட்டியிடுகின்ற வேட்பாளர்களது உறவுகள் தமிழ்த்தேசியம் என்ற உணர்வுக்கு அப்பால் சென்று சொந்தங்களுக்கே வாக்களிப்பார்கள். இதனால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் வீழ்ச்சியை ஏற்படுத்தலாம் என்று தப்புக்கணக்குப் போடப்பட்டிருக்கலாம். இதைப்போன்றதொரு யுக்தியை அரசாங்கம் 2010 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் கையாண்டு அதில் தோல்வியும் கண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் அரச ஆதரவுடன் 2010 பொதுத்தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்ட ஒருவருக்கு அவரது மனைவி கூட வாக்களிக்கவில்லை என்கின்ற செய்தி அன்றைய நாள்களில் பிரபலமான செய்தியாக யாழ்ப்பாணத்திலும் யாழ்ப்பாணத்திற்கு வெளியேயும் உலாவந்தது. எனவே தமிழ் மக்கள் தமது உறவு நிலைக்கு அப்பால் தமிழ்த்தேசிய உணர்வுகளுக்கே வாக்களித்து வந்துள்ளார்கள், இனிவரும் காலங்களிலும் அக்கொள்கைகளில் இருந்து எள்ளளவேனும் விலகமாட்டார்கள் என்பது வெளிப்படை.

கட்சிகளின் தேர்தல் பிரசாரங்கள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படாத நிலையிலும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளர்கள் பலர் சீருடை தரித்தவர்களால் அச்சுறுத்தப்படுவதாகச் செய்திகள் வெளியாகின்றன. ஆசியாவிலே அதிகமான இராணுவத்தினர் இலங்கையின் வடபகுதியிலேதான் நிறுத்தப்பட்டுள்ளார்கள் என்று அண்மையில் கபே அமைப்புக் குற்றம் சாட்டியுள்ளது.

மறைமுக நிதியுதவிகளைப் பெற்று சுயேச்சையாக களமிறங்கியுள்ள வேட்பாளர்கள் மூக்குடைபடுவது திண்ணமாயினும் தேர்தல் காலங்களில் பணத்திற்காக சில தமிழர்கள் விலைக்கு வாங்கப்படுவது என்பது எம்மினத்தின் பலவீனமானதும் வேதனையானதுமான விடயமாகும். எனவே தமிழர்கள் வரலாறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு போடுகின்ற ஒவ்வொரு வாக்கும் முள்ளி வாய்க்கால் இன அழிப்புக்கான நீதிகோரலின் குரலாக மாறும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

கூட்டமைப்பு மாகாணசபையை அமோக வெற்றியின் மூலம் கைப்பற்றி விட்டால் பலமான ஒரு மாகாண சபையை உருவாக்கி புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் உதவியுடன் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வார்கள் என்ற பயமும் அரசாங்கத்துக்கு இருக்கவே செய்கின்றது. அத்துடன் வடமாகாண சபை முதலமைச்சராக சட்ட நுணுக்கங்கள் தெரிந்த சி.வி.விக்னேஸ்வரன் தேர்ந்தெடுக்கப்பட்டால் மாகாணத்திற்குள்ள அதிகாரங்களை மத்தியில் இருந்தும் ஆளுநரிடமிருந்தும் பிடுங்கி எடுக்க ஒரு பலமான ஜனநாயக மோதலை மேற்கொண்டு எமக்கான மாகாண அதிகாரங்களை பெறமுயற்சிப்பார் என்கின்ற பயமும் அரசாங்கத்துக்கு தற்போது எழுந்துள்ளது. அண்மையில் ஜனாதிபதியும் அவரது சகோதரர் பஸில் ராஜபக்ஷவும் விக்கினேஸ்வரன் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் அவர்களது அச்சத்தின் வெளிப்பாடெனக் கொள்ளத்தக்கது. இன்னொரு புறம் இக்கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகவும் கொள்ளத்தக்கது. அதாவது விக்னேஸ்வரன் இணக்க அரசியலுக்கு பொருத்தமானவர் என்று கூறுவதனூடாக விக்னேஸ்வரனை இரண்டு விடயங்கள் மூலம் மக்களிடம் இருந்து வேறுபடுத்துவதற்கான ஒரு யுக்தியாகவும் இதனை நோக்கலாம்.

1.அரசாங்கத்தால் விரும்பப்படும் ஒருவருக்கு தமிழ் மக்களில் கணிசமானவர்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்பதனால் அவர் அரசாங்கச் செயற்பாடுகளுக்கு வளைந்து கொடுக்கக் கூடியவர் என்ற போலித்தோற்றத்தை ஏற்படுத்துவது.

2.இணக்க அரசியலுக்கு பொருத்தமானவர் என்பதன் மூலம் அதிகாரப் பங்கீடு தொடர்பான பிரச்சினையை விக்னேஸ்வரன் ஏற்படுத்தமாட்டார் என்ற தவறான செய்தியை மக்கள் மத்தியில் பரப்புவது. போன்ற காரணங்களை நோக்கமுடியும்.

என்னதான் பூச்சாண்டி காட்டினாலும் வடமாகாண சபைத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டியே ஆகும். அத்தகைய நிலையில் மத்திக்கும் மாகாணத்திற்கும் இடையில் இடம்பெறப்போகின்ற அதிகாரப்பிடுங்கல்களை எவ்வாறு சமாளிப்பது என்று அரசதரப்பு அஞ்சுவதாகவும் கொள்ளலாம். தமிழர்களின் ஆயுத பலம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ்த்தேசிய அரசியலை சீரான பாதையில் கொண்டு செல்ல தமிழர்களிடம் இப்போதுள்ள ஆயுதம் வாக்கு ஒன்று மட்டுமே. அவ்வாயுதத்தை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். தமிழர்கள் தேசிய உணர்வை விடுத்து அளப்பரிய தியாகங்களை மறந்து, முள்ளிவாய்க்கால் இன அழிப்பை மறந்து வேறெந்தக்கட்சிகளுக்கோ சுயேச்சைக்குழுக்களுக்கோ வாக்களிப்பார்களானால் காலம் அவர்களை ஒருபோதும் மன்னிக்காது. ★

# மிகவும் கடினத்துடன் எழுச்சி பெற்று வரும் போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

அபிரா

கொடிகாமம் பிரதேசத்தின் தெற்கே பயன் தரு மரங்களுடன் பழைமை பேணும் பிரசித்தி பெற்ற தவசிக்குளம் கண்ணகை அம்மனின் கருணைமிகு பார்வையினால் கம்பீரமாக எழுந்துவரும் கல்விக் கூடம் தான் போக்கட்டி அ.த.க.பாடசாலை ஆகும். இந்தக் கிராமத்தில் வாழ்ந்த முன்னோர்கள் கல்வியின் அவசியம் கருதி சிறிய கொட்டில் ஒன்றினை அமைத்து முறைசாராத கற்கை ஒன்றை ஆரம்பித்தனர். எனினும் காலமாற்றத்தின் வேகம்'கார்ல்மாக்சின் கருத்தாகிய மாற்றம் ஒன்றுதான் மாறாதது'' என்பதற்கு அமைவாக இலங்கை அரசின் காலனித்துவ பிடியின் விடுதலைக்குப் பின்னர் மேற்படி கல்விச் சாலை 1960.05.09 ஆம் திகதி அரச பாடசாலையாக உள்வாங்கப்பட்டது. அன்றைய நிலையின் ஆசிரியராகக் கடமையாற்றிய செல்லையா என்பவரை முதல் அதிபராகக் கொண்டு பாடசாலையின் தலைமைப் பொறுப்புக்களை இ.குழந்தைவேலு, ஐ.மாணிக்கவாசகர், க.பெர்ணான்டோ, வே.திருநாவுக்கரசு, அ.சிவசம்பு, ந.நவரட்ணராஜா, கா.குணசிங்கம், வி.கணபதிப்பிள்ளை என நீட்சி பெற்று தற்போது க.எழிலழகன் என்பவர் அதிபராகக் கடமையாற்றி வருகிறார். சுமார் 81 மாணவர்களுடனும் 15 ஆசிரியர்களுடனும் இயங்கிவரும் இந்தப் பாடசாலையின் கற்றல் இணைப்பாடவிதான செயற்பாடுகளுடன் கூடிய பாடசாலை கல்வி நிலை மிகவும் சிறப்பானதாக உள்ளது. கல்வித்தாயின் கல்லினாலான கவர்ச்சிகர சிலை கம்பீரமாக எழுந்து நிற்பது கல்வியின் வளர்ச்சிக்கு கட்டியம் கூறும் ஒன்றாக அமைந்துள்ளது. கற்றல் மேம்பாடு தொடர்பாக நோக்குகைகயில் குறிப்பாக தரம்- 5 புலமைப்பரில் பபீட்சையின் அடைவு மட்ட ரீதியாக 2007, 2011 ஆண்டுகளில் தலா ஒரு மாணவர் வீதம் சித்தியடைந்த நிலையும், சுமார் 80 வீத மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற நிலையும் குறிப்பிடத்தக்கது. அதிலும் குறிப்பாக 2003 ஆம் ஆண்டு ஆகக் கூடிய புள்ளியாகிய 40 பெற்ற நிலையில், 2004 ஆம் ஆண்டு முதல் இந்த நிலை 120 புள்ளியை எட்டுவதற்கான சாதனையை எட்டியுள்ளது.



இணைப்பாட விதான செயற்பாட்டில் விளையாட்டில் குறிப்பாக 11 வயதுக்குட்பட்ட 100 மீற்றர் 75 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சி 2011 ஆம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் 3 ஆம் நிலையையும் மாகாண மட்டத்தில் 4 ஆம் நிலையையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 2012 ஆம் ஆண்டு 11 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தலில் முதலாம் இடத்தையும் 11 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான நீளம் பாய்தலில் 2 ஆம் இடத்தையும் பெறக்கூடியவகையில் திறன்கொண்ட மாணவர்கள் உருவாக்கப்பட்டதுடன் 2009 ஆம் ஆண்டு வலய ரீதியாக அதிகூடிய 1050 திருக்குறள்களை மனனம் செய்து ஒப்புவித்த சாதனைக்குரிய மாணவியும் இந்தப் பாடசாலையில் உருவாக்கப்பட்டமை பெருமைக்குரிய விடயமாகும். மேலும் தற்போதைய அதிபருடைய சேவைக் காலத்தில் வகுப்பறை ரீதியாக கற்பித்தல் செயற்பாட்டில் பபீட்சார்த்தமாக 2010 ஆம் ஆண்டு தொடக்கம் தமது பிள்ளைகளின் கற்றல் தொடரபான விடயங்களை அவதானிக்கவும் அறியவும் சுழற்சி முறையில் தினமும் காலை 8 முதல் முற்பகல் 10.30 மணி வரையான நேரப் பகுதியில் ஒவ்வொரு பெற்றோர் வரவழைக்கப்பட்டு கண்காணித்து வருகின்ற முறைமை பின்பற்றப்பட்டு வருகின்றது. இதனால், பெற்றோர் விழிப்படைவதுடன் தமது பிள்ளை நிலை தொடர்பாகவும் பாடசாலைக்கும் சமூக உறவுக்குள் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்குமான முயற்சியாக இந்த விடயம் கருதப்படுகின்றது.

மேலும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளில் சுழற்சி முறையில் 10 பெற்றோர் வருகைதந்து பாடசாலையின் மலசலகூடம் மற்றும் சுற்றுப்புறச் சூழலை சுத்தப்படுத்தி வருகின்ற நிலைமை வழமையானதொன்றாக காணப்படுகின்றது.

அதற்கு மேலதிகமாக மஹிந்த சிந்தனைக்கு ஏற்ப ஊட்டப் பாடசாலையாக உள்ளீர்க்கப்பட்ட இந்தப் பாடசாலை இந்த வருட செயற்பாடாக சிறந்ததொரு செயற்பாட்டறையும், சுற்றுமதில் வர்ணம் பூசும் செயற்பாட்டையும் வெற்றிகரமாக பெற்றோரின் இரவு நேர உடல் உழைப்பினூடாக சிறப்பாக நிறைவேற்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

''கடுகு சிறிதானாலும் காரம் பெரிது'' என்பது போல சிறிய பாடசாலையாக இருப்பினும் சிறந்த பான்ட் வாத்தியக்குழு ஒன்று இருப்பதுடன் வருடந்தோறும் பெரிய பாடசாலைகளுக்கு ஒப்பாக சிறப்பான விளையாட்டுப் போட்டிகளை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் பழைய மாணவர் சங்கத்தினதும் ஆசிரிய குழாத்தினருடைய பரிபூரணமான ஒத்துழைப்புடன் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்த வருட நோக்கக் கூற்று அனைத்து மாணவரையும் எழுத வாசிக்க தெரிந்தவராக்குதல் எனும் தொனிப்பொருளில் காணப்படுவதை நோக்க கூடியதாகவுள்ளன. அத்துடன் பாடசாலையில் புறச்சூழல் மனதுக்கும் அறிவிற்கும் புத்துணர்வு தருவதாக காணப்படுகின்றது. பாடசாலையின் சாதனையாளர்களது புகைப்படங்களுடன் அவர்களது சாதனைப் பரப்பு குறிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு வகுப்பறைக்கும் அழகான நிறப்பூச்சுக்களும் வகுப்பறையினுள்ளே ஒழுங்குற கற்பித்தல் சாதனங்களின் காட்சிகளும் கண்களுக்கு விருந்தளிக்கும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் மாணவர்களின் உள நெருக்கடியை தவிர்ப்பதற்கான ஓர் உபாயமாக மாடிக் கட்டடங்கள் இல்லாத குறையினை போக்குவதற்கு ஏதுவாக படிகள் பலவற்றினூடாக ஏறி உயர்ந்த இடத்தில் இருந்து கற்பதற்கு ஏதுவான சிறிய கற்றல் வாழிடம் ஒன்றை தற்காலிகமாக அமைத்து அதில் வாசிப்பு ஆற்றலை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டை மேற்கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது. இந்த விடயம் தொடர்பாக அதிபரிடம் வினாவிய போது எமது மாணவர்களுக்கு நகர்புற பாடசாலை போன்ற மாடி கட்டடம் இல்லாத ஏக்கநிலையைப் போக்கவும் மகிழ்ச்சியாக படிகளில் ஏறி உச்சத்தை அடைய முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காகவும் இந்தச் செயற்பாட்டை மேற்கொண்டதாக கூறினார்.

மேலும், சிறந்த சூழ்நிலையுடன் நல்நாவல் நிழலுடன் சிறப்பான விளையாட்டு முற்றம் ஒன்றும் அதற்கு அருகில் சுத்தமான மலசலகூட கட்டடத் தொகுதியும் காணப்படுகின்றன. மாணவர்களின் மதிய உணவு வழங்கலுக்கான போஷாக்கான கீரை வகைகளை பெற்றுக் கொள்வதற்கேற்ற வகையில் மூலிகைத் தோட்டத்துடன் கூடிய பாடசாலைத் தோட்டம் சிறப்பாகக் காணப்படுகின்றது. உலக உணவுத் திட்டத்தில் உணவு வழங்கும் செயற்றிட்டம் மிகவும் சிறப்பாக அனைவரதும் பாராட்டைப் பெறக்கூடிய வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்துடன், வெண் மணற்பரப்பில் விளையாடுவதற்கான விளையாட்டுத்திடலும் பாடசாலையின் மையத்தே அமைந்திருப்பது மேலும் பாடசாலைக்கு மெருகூட்டுவதாக உள்ளது. எனினும் எழுச்சிக்கான நிலை தோன்றினாலும் பாடசாலையில் நிறைவேறாத ஆசைகளுடன் பல தேவைகள் காணப்படுகின்றன என்பதையும் மறுக்க முடியாது. இந்தப் பாடசாலையின் பிரதான தேவையாக கட்டட பற்றாக்குறை நிலவுவதை அவதானிக்க முடிகின்றது. 5 வகுப்பறைகளும் அதிபர் அலுவலகம், செயற்பாட்டறை என்பவற்றுக்காக தற்போது 40 x 20 அடி நீள அகலம் கொண்ட ஒரு கட்டட தொகுதியும் 30 x 20 அடி நீள அகலம் கொண்ட ஒரு கட்டடத் தொகுதியுமே காணப்படுகின்றன. இந்த நிலை போதிய வகுப்புக்களுக்கான சிறப்பான கல்விநிலையோடு கூடிய கற்றல் மேம்பாட்டுக்கு நெருக்கடியாகவே உள்ளது. மேலும், வாசிப்புத் திறன் விருத்திக்காக 500 நூல்கள் உள்ள போதும் இவற்றை முறையாக பேணிப் பாதுகாத்து வாசிப்பதற்கான சூழலுடன் கூடிய நூலக வசதி இன்மை காணப்படுகிறது. அத்துடன் சமகால தொழில்நுட்ப தகவல் மறுமலர்ச்சி காலத்தில் இந்தப் பாடசாலையின் மாணவர்கள் தொட்டுணர்ந்து பார்ப்பதற்கு ஒரு கணினி இயந்திரம் கூட காணப்படாத நிலை பெரும் துர்ப்பாக்கிய நிலையாகும். அதே போன்று, ஏனைய நவீன கற்பித்தல் சாதனங்களோ அல்லது மாணவர்களுக்கான கற்றல் மேம்பாட்டுக்கான செயலட்டைகளை பிரதிபண்ணி வழங்குவதற்கான போட்டோ பிரதி இயந்திரமோ இங்கு இல்லை. இந்தப் பற்றாக்குறை அலுவலக முகாமை சார் கருமங்களை மேற்கொள்வதற்குக் கூட சிரமமாக இருப்பதை உணர முடிகின்றது. உலக மயமாதலின் விளைவினை உலக மாந்தர்கள் முற்று முழுதாக அனுபவிக்கும் இந்த வேளையில் இந்தப் பாடசாலையின் மைந்தர்கள் அதில் ஒரு சிறிய பகுதியையாவது அனுபவிக்க இயலாதிருப்பது வேதனைக்குரிய விடயம்.

எனினும், அண்மைக் காலத்தில் மிகவும் கடினப்பட்டு எழுச்சி பெற்று வரும் இந்தப் பாடசாலையின் பௌதிக வள தேவைகளை இனங்கண்டு பூர்த்தி செய்து இந்த மாணவர்களின் அறிவுப் பசியை போக்க சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை கொள்ள வேண்டும் என்பது இந்தப் பாடசாலைச் சமூகத்தின் பேரவாவாகும்.

# திட்டமிட்டால் திகட்டாத மகிழ்ச்சி

கவிதாயினி


நிதி நிர்வாகம் என்பது வாழ்வில் முக்கியமானதொரு விடயம். வரவு செலவு விடயத்தில் திட்டமிட்டுச் செயல்படுபவர்கள் என்றுமே திண்டாட வேண்டியிருக்காது. அவர்கள் திகட்டாத மகிழ்ச்சியை அனுபவிப்பார்கள்.

வாழ்வில் விரைவாக முன்னேற்றம் காண விரும்புபவர் முதலில் செய்ய வேண்டியது, கடன்களை ஒழிப்பது தான். கடன்களுக்கான வட்டிக்காக நீங்கள் மாதமாதம் எவ்வளவு செலவழிக்கிறீர்கள் என்று கணக்கிட்டாலே போதும். அதிலிருந்து மீள்வதற்கான உத்வேகம் பிறந்துவிடும்.


கடன்களுக்கான வட்டிகளில் இருந்து உங்கள் வருவாயை மீட்டால், சேமிப்பு உயரும். எவ்வளவுக்கு எவ்வளவு விரைவாக நீங்கள் கடன்களில் இருந்து மீள்கிறீர்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு விரைவாக உங்களின் பொருளாதாரம் நலம் பெறும்.

கடன்களை உடனே ஒழிக்க முடியாது, ஆனால் பணமும் சேமிக்க வேண்டும் என்றால், முதலில் உங்கள் கடன்களை ஒழுங்குபடுத்துங்கள். அதிக வட்டி கொடுக்க வேண்டியிருக்கும் தனிநபர் கடன், வட்டிக்கு வட்டி போடும் கடன் போன்ற கடன்களை முதலில் செலுத்தி முடித்து விடுங்கள். முடிந்தால், வட்டியில்லா கடன்களுக்கு (உறவினர்கள், நண்பர்களிடம் இருந்து பெறுபவை), அல்லது குறைந்த வட்டிக் கடன்களுக்கு அவற்றை மாற்றிக்கொள்ளுங்கள். கடன்களில் இருந்து மீள்வதற்கான ஒரு வழி, ஒரு அவசர கால நிதியை உருவாக்குவது. இந்த நிதியைப் பயன்படுத்தி ஒன்றிரண்டு மாதங்களை ஓட்டினால், வரும் வருவாயை கடன்களைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தலாம். நீங்கள் இதுவரை அவசர கால நிதி யைப் பேண தொடங்கவில்லை என்றால், உடனே அதைத் தொடங்குங்கள்.

தேவைகள் இல்லாத மனிதர்கள் இல்லை. ஆனால் நமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு பொருளாதார பலம் அவசியம். பொருளாதார விடயத்தில் குறுகியகால இலக்குகள், நீண்டகால இலக்குகள் என்று திட்டமிட்டால் நமது தேவைகளை எளிதில் நிறைவேற்றிவிடலாம்.



# கண்களைப் பாதுகாக்கும் காய்கறிகள்



நாம் அன்றாடம் உண்ணும் உணவிலேயே கண்களைப் பாதுகாக்கும் காய்கறிகள் அடங்கியுள்ளன. பச்சைக் காய்கறிகளில் விற்றமின் ஏ மற்றும் விற்றமின் சி , இரும்பு மற்றும் கல்சியம் ஆகியன அடங்கி உள்ளன. இவை கண்களுக்கு மிகவும் சிறந்தவை.

அகத்திக் கீரை, பசளிக் கீரை, முருங்கை, பொன்னாங்காணி, முளைக்கீரை, அரக்கீரை, வெந்தயக் கீரை ஆகிய கீரை வகைகளில் இரும்பு, போலிக் அசிட் மற்றும் விற்றமின் பி-12 ஆகிய சத்துக்கள் அடங்கியிருப்பதால் இவற்றை அதிகம் சேர்த்துக் கொள்வது நல்லது.



# சிந்திக்க.....

★குற்றம் செய்யும் போது ஆண்டவன் உன்னைப் பார்க்கிறான். தண்டனை பெறும் போது நீ ஆண்டவனைப் பார்க்கிறாய்.

★தோல்வியைச் சந்திப்பவர்கள் வெற்றி பெறாமல் ஓய்வதில்லை

★புன்னகை என்பது எதிரியைக் கூட நண்பனாக்கும்.

★கோபம் என்பது அமிலம், எறியப்படும் இடத்தைவிட அது இருக்கும் இடத்தையே நாசப்படுத்தி விடும்.

★துயரத்துக்கு மாற்று மருந்து சாதனை தான்.

★பிறர் குறை காணின் தன் குறை வெளிப்படும்.

★இறைபக்தி உள்ள இல்லத்தில் அமைதி நிலைத்திருக்கும்.

★உறவாடும் உதடுகளை விட உதவும் கைகளே உயர்ந்தவை.



சிந்து சிவதாஸ், ஐங்கரன்வீதி,
சுதுமலை.

# அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது ஆண்களே



இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான உரிமை என்கிறார்களே! ஆனால் அரசியலில் ஆண்கள் தான் தமது திறமை, ஆதிக்கம் என்பவற்றை வெளிக் காட்டுகின்றார்கள். பெண்கள் அரசியலில் ஈடுபடுவதில்லை என்று கூறிவிட இயலாது. பாகிஸ்தான், இந்தியா போன்ற வல்லரசு நாடுகளில் பெண்களும் அரசுத் தலைவர்கள் பதவிகளில் இருந்துள்ளனர். அவர்களுக்கு திறமை இல்லை என்று அல்ல. சமூகம் அவர்களை தட்டிக் கொடுத்து உற்சாகம் செய்திருந்தால் அரசியலில் அவர்களும் முன்னுதாரணமாக இன்று இருந்திருப்பார்கள்.

இன்றைய காலகட்டத்தில் அரசியல் என்றால் ஆண்கள். ஆண்கள் என்றால் அரசியல் என்ற நிலைதான் காணப்படுகின்றது. ஒரு பெண்ணால் தமது குடும்பத்தை தாங்க முடியும். ஒரு நிறுவனத்தை யும் தாங்க முடியும். ஆனால் நாட்டை தாங்குவது என்பது சுலபமான விடயம் அல்ல. அதற்குத் தனித் திறமை வேண்டும். ஒரு பெண் அரசியலில் ஈடுபட்டால் அவரை அரசியலிலிருந்து விலக்குவது மிக இலேசான விடயம். ஆனால் ஆண்கள் அப்படியல்ல; எதையும் துணிந்து செய்வார்கள்; எதிர்த்தும் நிற்பார்கள்.

நாங்கள் பேச்சுக்கு அரசியல் என்கின்றோம் அதன் அர்த்தம் அதில் ஈடுபட்டு உழைப்பவர்களுக்குத்தான் தெரியும். அதன் கஷ்டம் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி ஒன்றேதான். ''தலையிடியும் காய்ச்சலும் தனக்கு தனக்கு வந்தால்தான் தெரியும்''

பெண்கள் யாவரும் அடுப்பம் கரையும் வீடும் என்றிருந்த காலம் ஓடிவிட்டது. இன்று அப்படியல்ல. சமூகத்தில் ஆணுக்குச் சமமாக இருக்கின்றார்கள்.

பெண்களுக்கு அரசியல் ஒத்துவராது என்ற முதாதையரின் கருத்தையே இன்றும் எம்மில் பலர் கொண்டுள்ளனர். பெண்களுக்கு இன்று அரசியல் முக்கியத்துவம் இல்லாவிட் டாலும் நாளை அரசியலில் ஓர் அந்தஸ்தைப் பெறுவார்கள். ''பெண்கள் எதுவும் வித்தியாசமாக செய்தால் அதனை உலகம் அதிசயமாய் பார்க்கும் உலகம் இது'' எனவே அரசியல் பிரவேசத்தில் அதிகம் ஆதிக்கம் செலுத்துவது ஆண்களே ஆவர்.

*ச.புவித்ரா, சாவகச்சேரி.*

# காத்திருப்பேன் காதலியே....

இறைவன் படைத்த
அழகியே காத்திருந்தேன்
என்றாவது ஒருநாள்
என்னைத் தேடி வருவாய் என
அன்று
நானிருப்பேன் உன் அருகில்
அல்ல... கல்லறையில்
உன் பாத தரிசனத்துக்காக
நீ ரோஜா பூவுடன் வந்து
ஒரு துளி கண்ணீர் விட்டால்
போதுமடி
என் மனச் சுமையாவது
குறையும்...




## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

**அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது**

**ஆண்களா? பெண்களா?**

உங்கள் காரணங் களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங் களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-.....................................................................

முகவரி :- ..................................................................

..................................................................

.......................... ..........................

திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**

'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## செம்மொழி



கல் தோன்றி மண்
தோன்றாக் காலத்தில்
தோன்றிய மூத்த மொழியும் நீயே
வள்ளுவர் வாயாரப் புகழ்ந்த
வான்புகழ் கொண்ட
மொழியும் நீயே
கம்பனைக் கவி பாட வைத்த
கவிமொழியும் நீயே
இளங்கோவை இயம்பவைத்த
இனிய மொழியும் நீயே
ஔவைப் பாட்டியின்
அற்புத மொழியும் நீயே-எல்லா
மொழிகளிலும் மூத்த மொழியும்
செம்மொழியும் நீயே!

த.டிலானி, மீசாலை.

## துணுக்காயில் நடப்படும் 2000 பயன்தரு மரங்கள்



அக்கராயன், ஓக.8
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 2000 பயன்தரு மரங்கள் நடுகை செய்யப்படவுள்ளதாக துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.
துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற வாழ்வு எழுச்சித் திட்ட முன்னேற்றம் தொடர்பாக ஆராயுமுகமாக நடத்தப்பட்ட கூட்டத்தில் தலைமையுரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
இந்தக் கூட்டத்தில் வாழ்வு எழுச்சி திட்டத்துடன் தொடர்புடைய பட்டதாரிப் பயிலுநர்கள், கிராம அலுவலர்கள் மக்கள் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு வாழ்வு எழுச்சித் திட்டத்தில் காணப்படும் முன்னேற்றம் மற்றும் தடைகள் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தனர்.
துணுக்காயில் குரங்குகளின் தொல்லையால் முருங்கை, பப்பாசி ஆகிய மரங்களை நடுகை செய்து பாதுகாக்க முடியாதுள்ளதாக மக்கள் பிரதிநிதிகள் அங்கு தெரிவித்தனர். (க-18)

## அக்கராயன் - திருமுறிகண்டி வீதியில் மேம்பாலம் அமைக்குமாறு கோரிக்கை

அக்கராயன், ஓக.8
அக்கராயன் குளம் மழையின் போது வான்பாயும் முன்னர் அக்கராயன் - திருமுறிகண்டி வீதியில் மேம்பாலம் ஒன்றை அமைக்குமாறு அக்கராயன் கிழக்கு அமதிபுரம் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
அக்கராயன் குளத்தின் வான் வெள்ளம் வீதியைக் குறுக்கறுத்துச் செல்லும் போது ஆண்டுதோறும் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்படுவதால் அக்கராயன் கிழக்கு, அமதிபுரம், கோணாவில், யூனியங்குளம் கிராம மக்கள் கடுமையான போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொள்வதுடன் அக்கராயன் மத்திய பகுதியுடனான தொடர்புகளையும் இழந்து நிற்பது வழமையாகும். குறிப்பாக அக்கராயன் மருத்துவமனைக்குச் செல்ல முடியாத அவல நிலையும் இவர்களுக்கு ஏற்படுகின்றது.



இதனைக் கருத்தில் கொண்டு அக்கராயன் குளத்தின் வான்வெள்ளம் பாய்ந்து செல்லும் வீதியில் மேம்பாலம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகவே முன்வைக்கப்பட்டு வருகின்றது. ஆனால் அதிகாரிகள் மேற்படி கோரிக்கையை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## மூன்று சிறுவர்களைக் காணவில்லை

### வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

நெடுக்குளம், ஓக.8
வவுனியாவிலுள்ள ஆலயமொன்றுக்குப் பூசை செய்வதற்குச் சென்ற சிறுவன் உட்பட வேறு இரண்டு சிறுவர்களைக் காணவில்லை என வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.
வவுனியா கல்மடு பூம்புகார் பகுதியைச் சேர்ந்தவர் 14 வயது நிறைந்த பூ.சதீஸ். இவர் தினமும் இங்கிருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மறவன்குளம் பகுதியிலுள்ள ஆலயமொன்றுக்குப் பூசை செய்வதற்கெனச் செல்வது வழக்கமாகும்.
இந்த நிலையில் கடந்த 5 ஆம் திகதி மாலை பூசைக்கென ஆலயத்துக்குச் சென்ற இவர் இதுவரை வீடு திரும்பவில்லை.
இது தொடர்பாக அந்தச் சிறுவனின் சகோதரன் பூ.உமாரூப சர்மாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;
எனது தம்பி தினமும் மறவன் குளத்திலுள்ள ஆலயமொன்றுக்கு பூசை வழிபாடுகளை நிறைவேற்றச் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். இதன் பிரகாரம் கடந்த 5 ஆம் திகதி சென்றவர் இன்னமும் வீடு திரும்பவில்லை. இது தொடர்பாக விசாரித்த போது சு.தில்சான் (வயது -13), நா.டிலக்சன் (வயது -9) ஆகிய சிறுவர்களையும் மேற்படி தினத்திலிருந்து காணவில்லையெனத் தெரிய வந்துள்ளது.
மேலும் எமக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் காணாமற்போனவர்களை பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் தேடிக் கொண்டிருக்கிறோம் - என்றார்.
இதேவேளை இந்த விடயம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது; மேற்படி மூன்று சிறுவர்களும் காணாமற் போனமை தொடர்பாக அவர்களின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்துள்ளதாகவும், தாம் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் பரிசோதகர் சன்ன அபேரத்ன தெரிவித்தார். (க-402)

## யானைகளால் ஏற்படுத்தப்பட்ட சேதம் தொடர்பாக அதிகாரியிடம் முறைப்பாடு



நெடுங்கேணி, ஓக.8
நெடுங்கேணி சேனைப்புலவு கிராமத்தில் யானைகளால் வீடுகள் நாசமாக்கப்பட்டமை தொடர்பாக இடர் சேவைகள் முகாமைத்துவ அதிகாரியிடம் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஒரு மாத காலமாக சேனைப்புலவு கிராமத்தினுள் நுழைகின்ற சுமார் ஆறுக்கும் அதிகமான காட்டு யானைகள் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.
கடந்த வாரம் இங்குள்ள சுமார் மூன்று வீடுகளை இந்த யானைகள் உடைத்து நொறுக்கியுள்ளன.
இதனால் மிகவும் வறிய நிலையிலுள்ள இந்த வீடுகளில் வசிப்பவர்கள் ஒதுங்குவதற்கு இடமில்லாத நிலையில் தவித்து வருகின்றனர்.
இந்த நிலையில் இவர்கள் தமது அவல நிலை தொடர்பாக உரிய அதிகாரியிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.
மேலும் இந்தக் காட்டு யானைகள் விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்ட பயிர்களையும், பயன்தரு மரங்களையும் நாசம் செய்துள்ளன.
இந்த அழிவுகளை வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர் ே நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.
அரச அதிகாரிகளும் இவற்றைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.
ஆனால் யானைகளின் அட்டகாசம் இதுவரை கட்டுப்படுத்தப்படவில்லையெனத் தெரிய வருகின்றது. (க-402)

## போட்டி முடிவுகள்

ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டு பெருவிழாவையொட்டி தண்டுவான், ஒட்டுசுட்டான், மாங்குளம், கற்சிலைமடு ஆகிய பாடசாலைகளுக்கிடையிலான கவிதை, கட்டுரைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் கீழ்வருமாறு:-

**கட்டுரை**
இ.தமிழினி - தண்டுவான் அ.த.க. பாடசாலை, இ.வினோதா - ஒட்டுசுட்டான் ம.வி, டி.கவிப்பிரியா - ஒட்டுசுட்டான் ம.வி.

**கவிதை**
இ.சானுகா - மாங்குளம் ம.வித்தி., இ.மிதுர்ஷா - ஒட்டுசுட்டான் ம.வி., ச.நிவேதி - கற்சிலைமடு அ.த.க. பாடசாலை. (க-500)

## மரம் முறிந்து வீடு சேதம்

வவுனியா அலைகல்லூப் பிரதேசத்தில் மரமொன்று முறிந்து வீழ்ந்ததால் வீடொன்று சேதமடைந்துள்ளது.
வவுனியா அலைகல்லு பகுதியில் வசிக்கும் குசிலாவதி என்பவருடைய வீடே இவ்வாறு சேதமடைந்தது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இந்தக் குடும்பத்தின் பொருளாதார நலன்கருதி வவுனியா மாவட்ட இடர் சேவைகள் நிலையத்தினர் உதவிகளை வழங்கியுள்ளனர்.
இந்தப் பகுதிக்கு அருகில் உள்ள கற்பாறைகளுக்கு வைக்கப்படும் வெடிகளின் அதிர்வினால் இந்த மரம் முறிந்து விழுந்திருக்கலாமென அவ்வூர் வாசிகள் தெரிவித்துள்ளனர். (க-402)

## துணுக்காய்ப் பகுதியில் மேய்ச்சல் தரவைகள் பறிபோகும் அபாய நிலை

### தென்னைச் செய்கைக்கு காணிகள் ஒதுக்கப்படுவதால்

மாங்குளம், ஓக.8
துணுக்காய்ப் பிரதேசத்தில் பல ஏக்கர் நிலம் தென்னைச் செய்கைக்குப் பயன்படுத்தப்படவிருப்பதால் தமது கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை நிலம் பறிபோகக் கூடிய அபாயநிலை தோன்றியுள்ளதாகக் கால்நடை வளர்ப்போர் தெரிவித்துள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய்ப் பிரதேசத்தில் மல்லாவிக்குளம் அலைகரையிலிருந்து அணிஞ்சியன்குளம் பிற்பகுதி வரைக்குமான சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் குறிப்பிட்ட நிலப்பகுதி தெங்கு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படவுள்ளதால் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை நிலங்கள் பறிபோகக் கூடிய அபாய நிலை காணப்படுவதாக அந்தப் பகுதி கால்நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர்.
1998,99 ஆகிய காலப்பகுதியில் இந்த நிலத்தை மேய்ச்சல் தரவைக்கென ஒதுக்கீடு செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும் போர் காரணமாக அது சாத்தியமாகவில்லை-
ஆனாலும் மீள்குடியமர்ந்த மக்கள் தொடர்ந்து இந்த நிலத்தை மேய்ச்சல் தரவையாகப் பயன்படுத்தி வருகின்றனர்.
வன்னிப் பிரதேசத்திலேயே முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்துதான் அதிகளவான பால், எரு பெறப்படுகின்றது.
மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 50 ஆயிரத்துக்கும் அதிகமான மாடுகள் உள்ளன. இதில் துணுக்காய்ப் பிரதேசத்தில் மட்டுமே சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள் உள்ளன.
இந்தப் பகுதியில் தெங்குப் பொருள்களை உற்பத்தி செய்யவுள்ளதாகத் தெரிவித்து துப்புரவு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் இது தொடர்பாக இந்தப் பகுதி மக்களுக்கு எதுவித அறிவித்தலும் வழங்கப்படவில்லை என மக்கள் கூறுகின்றனர்.
இங்குள்ள 1000 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்கெனவே சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பு அரச கால்நடை பண்ணைக்கும், சேவாலங்கா கால்நடை இனவிருத்தி நிறுவனத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.
மேலும் வேற்று இனத்தவர்களைக் கொண்டு வந்து குடியமர்த்தும் வேலைகளும் இடம்பெறலாம் என்ற அச்சமும் இங்கு ஏற்பட்டுள்ளது. எனவே உரியவர்கள் இதனைக் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-422)

# புதிதாகக் கண்டுபிடித்த நுளம்பு களுத்துறையில் தீயிட்டு அழிப்பு

## பரிசோதனை மேற்கொள்வதில் சிக்கல்

கொழும்பு, ஓக.8
இலங்கையில் கண்டுபிடிக் கப்பட்ட புதிய நுளம்பு வகை ஒன்று களுத்துறை மாவட்டத்தில் கண்டறியப் பட்ட இடத்திலேயே தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் நுளம்பு குறித்து மேற்கொள் ளப்பட்ட பரிசோதனையில் இந்த புதிய நுளம்பு வகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொரளை வைத்திய பரிசோதனை நிலையத்தின் பணிப்பாளர் அனில் சமர நாயக்க தெரிவித்தார்.


புதிய நுளம்பு வகை தொடர் பில் அவை கண்டறியப்பட்ட பிரதேசத்தில் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதேச மக்கள் நுளம்பு கண்டறி யப்பட்ட இடத்தைத் தீயிட்டு கொளுத்தியுள்ளனர் என்று அவர் கூறினார். இதன் காரணமாக தற்போது அத்தகைய புதிய இன நுளம்



பையும் அந்தப் பிரதே சத்தில் கண்டறியக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை உலக சுகாதார ஸ்தாபனத்தின் விசேட அதி காரி ஒருவர் அடுத்தவாரம் இலங் கைக்கு வருகைதர வுள்ளார். அதன்போது புதிய நுளம்பு வகை குறித்த பரி சோத னைகள் இடம்பெற வுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முத்தமிழ் விழா கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரியின் ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபத்தில் கல்லூரி அதிபர் இ.ஈஸ்வரதாசன் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (வ-21)

## வீதிக் குழிகளில் விழுந்தெழும் மக்கள்

கொழும்புத்துறை, ஓக.8
அரியாலை கனகரட்ணம் வீதி மிகவும் சேதமடைந்து போக்கு வரத்துச் செய்ய முடியாதவாறு குழிகளாகக் காணப்படுகிறது.

அரியாலை கனகரட்ணம் சந்திக் கும் திருமகள் வீதிச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதி வீதி மிகவும் சேதமடைந்துள்ளது.

நீண்ட காலமாக திருத்தம் செய் யப்படாதுள்ள இந்த வீதியில் பயணிப்போர் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இரவில் போதிய மின்விளக்குகள் அற்ற இந்தப் பகுதியால் பயணிப் போர் குழிகளில் விழுந்தெழுந்து செல்ல வேண்டிய நிலை காணப் படுகிறது.

இந்த வீதியைத் திருத்தியமைக்க யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-135)

## நல்லொழுக்கம் எவ்வாறு பெறப்படுகின்றது

புலன்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நல் லொழுக்கத்தைப் பெறலாம். ஒருவனது சொல் லுக்கும் செயலுக்கு மிடையே இசைவு இருந் தால் தான் வாழ்வில் பெரும் பெரும் காரியங் களில் வெற்றியடைய முடியும்.

இன்றைய சமுதாயத்தில் சொல்லுக்கும் செயலுக் கும் இடையே எந்தவித இசைபாடும் இல்லை.




## கலைஞர் ஒன்றிய அங்குரார்ப்பணக் கூட்டம்

முல்லைத்தீவு மாவட்ட கலைஞர் ஒன்றிய அங்குரார்ப் பணக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் வற்றாப்பளை அம்மன் ஆலய மண்ட பத்தில் நடைபெறவுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட கலைஞர்களின் ஆற்றல்கள் திறமைகளை வெளிக் கொண்டு வரவும் மற்றும் அவர்களுடைய தேவைகளை உணரச் செய்யும் வகையிலும் குறித்த ஒன்றியம் அமைக்கப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (வ-86)

# சைவப் புலவர், இளஞ் சைவப்புலவர் பரீட்சைகளில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஓக.8
அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் 2013 ஆம் ஆண்டு நடத்திய சைவப் புலவர் மற்றும் இளஞ் சைவப்புலவர் தேர்வின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இளஞ் சைவப் புலவர் தேர்வு கல்முனையைச் சேர்ந்த சாமித்தம்பி பொன்னுத் துரை, வாழைச்சேனை யைச் சேர்ந்த குணபால சிங்கம் ரிஷாந்தினி, களு வாஞ்சிக்குடியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் அஜந்தராசா, மட்டக்களப்பைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி கார்த்தி காயினி, கல்குடாவைச் சேர்ந்த தர்மராசா ஷர்மிதன், கொழும்பு-06 ஐச் சேர்ந்த சத்தியவதனி மாணிக்க நடராசா, வாழைச்சேனை யைச் சேர்ந்த உதயகுமார் மிலேந்தினி, வாகரையைச் சேர்ந்த சிவசம்பு விவே கானந்தன், மட்டக்களப்பைச் சேர்ந்த பூமணி ரவீந்திரன்-மட்டக்களப்பைச் சேர்ந்த ஏரம்பமூர்த்தி பிரகலதா, மாத்தளையைச் சேர்ந்த யோகராணி பாலசுப்பிர மணியசர்மா, வாழைச் சேனையைச் சேர்ந்த யோக ராசா யோகதாசன், கல்லா றைச் சேர்ந்த சிவராசா கமல் ராஜ், கல்லாறைச் சேர்ந்த பாலச்சந்திரன் அனுஷியா, பொலநறுவையைச் சேர்ந்த கந்தசாமி தினேஷ்குமார் ஆகியோர் சித்தி பெற்றுள் ளனர்.

சைவப் புலவர் தேர்வு பொல நறுவையைச் சேர்ந்த பாலன் சுதாகரன், மண்டூரைச் சேர்ந்த முருகுப்பிள்ளை சுந்தரலிங் கம், தேத்தாத்தீவு-02 ஐச் சேர்ந்த இளையதம்பி கோபால பிள்ளை, மட்டக்களப்பைச் சேர்ந்த தில்லைநாதன் சதானந்தன், ஒட்டுசுட்டானைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் திலகானந்தம், கொழும்பு-09 ஐச் சேர்ந்த கார்த்திகைக் குமரன் சரவணமுத்து, கொழும்பு-06 ஐச் சேர்ந்த பத்மாவதி தங்கராசா, கொழும்பு-06 ஐச் சேர்ந்த கிருபாதேவி வீரசிங்கம், தெகிவளையைச் சேர்ந்த கிருபன் வெள்ளைச்சாமி ஆகியோரும் சித்திபெற்றுள் ளனர். (வ-14)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?


**மேடம்:** வியாபாரத்தில் மதிக்கப் படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதி கரிக்கும். வெளியூரிலிருந்து உறவினர் கள், நண்பர்களின் வருகையுண்டு. வீண் செலவு களைத் தவிர்ப்பீர்கள்.


**இடபம்:** புதிய எண்ணங்கள் தோன் றும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். இளவயது நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மனநிறைவு கிடைக்கும்.


**மிதுனம்:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.


**கடகம்:** எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். விமர்சனங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். உதவி செய்வதாக வாக் குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். உத்தி யோகத்தில் மறைமுக அவமானங்கள் வந்து நீங்கும்.


**சிங்கம்:** சில காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டாம். உறவினர்கள், நண்பர்களுடன் வாக்குவாதம் வந்து நீங்கும். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். உத்தியோகத்தில் வேலைச் சுமையால் சோர்வு, களைப்பு வந்து நீங்கும்.


**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றி யடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிக் கப்படுவீர்கள். அரச காரியங்களில் அனு கூலமான நிலை காணப்படும்.

**நாளை**
ஆடி-24 வெள்ளிக்கிழமை 09.08.2013
திதி: திருதியை முழுவதும்
நட்சத்திரம்: பூரம் பி.இ. 01.30 வரை
சுபநேரம்: 06.04 - 07.34 வரை
இராகுகாலம்: 10.34 - 12.04 வரை


**துலாம்:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடை யும்.


**விருச்சிகம்:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.


**தனுசு:** வேலைச்சுமையால் உடல் அசதி, மனச் சோர்வு வந்து நீங்கும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழந்து விடாதீர்கள். உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம்.


**மகரம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.


**கும்பம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். குடும்பத்தில் அமைதி நிலவும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.


**மீனம்:** மன நிறைவுடன் சில காரி யங்களைச் செய்து முடிப்பீர்கள். உறவுகளின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி கிட்டும். முன்கோபம் விலகும். அரசுப்பணிகள் சுமுகமாக முடியும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | | | 4 | |
| 7 | 4 | | | | 6 | 8 | | |
| 9 | | 3 | | 8 | 4 | 5 | | 6 |
| | 8 | 9 | | 3 | | | 1 | 2 |
| | | 4 | | | | 9 | | |
| 2 | 3 | | | 1 | | 6 | 5 | |
| 5 | | 2 | 6 | 4 | | 7 | | 3 |
| | | 6 | 7 | | | | 8 | 5 |
| | 7 | | | | | 2 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 5 | 4 | 7 | 3 | 8 | 1 | 9 |
| 7 | 3 | 1 | 8 | 6 | 9 | 2 | 4 | 5 |
| 9 | 4 | 8 | 1 | 5 | 2 | 7 | 3 | 6 |
| 1 | 7 | 4 | 9 | 3 | 8 | 6 | 5 | 2 |
| 5 | 9 | 3 | 6 | 2 | 7 | 4 | 8 | 1 |
| 2 | 8 | 6 | 5 | 4 | 1 | 3 | 9 | 7 |
| 8 | 5 | 2 | 7 | 1 | 4 | 9 | 6 | 3 |
| 3 | 1 | 9 | 2 | 8 | 6 | 5 | 7 | 4 |
| 4 | 6 | 7 | 3 | 9 | 5 | 1 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 8
கரணவாய் வடக்கு நவிண்டில் சிவகாமி அம்மன் ஆலய தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை இடம்பெறும். நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை பூங்காவனமும் வைரவர் மடையும் இடம் பெறும். கடந்த 31 ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமானது. (வ)

# இன்னும் புனரமைக்கப்படாத கொழும்புத்துறை வீதி பாலம்



கொழும்புத்துறை,ஓக.8
கொழும்புத்துறை வீதியில் 5ஆம் குறுக்குத்தெருப் பகுதியில் உள்ள கால்வாய்க்கு மேலான நீண்டகால பழைய பாலம் சீர் செய்யப் படாமையால் அவ்விடம் மட்டும் காப்பெற் இடப்படாது குன்றும் குழியுமாக பல வருடங்களாகக் காணப்படுகிறது.
இதனால் இவ்வீதியில் பயணிப்போர் விபத்துக்களை எதிர்நோக்கி வருகின்றனர். கடந்த மாதங்களில் இவ்விடத்தில் இருவேறு விபத்துச் சம்பவங்களில் இருவர் காயமடைந்ததாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். குறித்த வீதி இரு வருடங்களுக்கு முன்னர் காப்பெற் வீதியாக அமைக்கப்பட்ட போது கடலுக்கு மழைநீரைக் கொண்டு செல்லும் இப் பிரதான கால்வாயின் மேலுள்ள பாலம் சேதமடைந்திருந்தது. இதனால் புனரமைப்புச் செய்வதற்கு வசதியாக அந்தப் பகுதிக்கு காப்பெற் இடப்படவில்லை. எனினும் இது வரை பாலத்தை சீர்செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.
கொழும்புத்துறை, வசந்தபுரம், மணியந்தோட்டம், உதயபுரம், நெடுங்குளம் பகுதி மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதையில் உள்ள இக்குறைபாட்டை நீக்கி சீரான போக்குவரத்துக்கு உதவுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-135)

# சமய சந்நிதிகளில்

வட்டுக்கோட்டை, ஓக.8
வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரப் பெருமானுக்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு சங்கு பூசை, விசேட ஹோமம் என் பன இடம்பெற்று, சங்காபிஷேகம் நடைபெறும். இரவு 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து பூந்தண்டிகையில் சுவாமி வீதி வலம் வருவார்.

★ ★ ★

யாழ். மரியன்னை பேராலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்கு நடைபெறும். எதிர் வரும் 14 ஆம் திகதி புதன் கிழமை மாலை 5 மணிக்கு நற் கருணை வழிபாடும், மறுநாள் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை திருநாள் திருப்பலியும் இடம்பெறும். திருநாள் திருப்பலி காலை6.45 மணிக்கு யாழ். ஆயர் தலைமையிலும் நடைபெறும். மாலை 5 மணிக்கு திருச்சொரூப பவனியும் அன்னையின் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும்.(ந-51)

# மரண அறிவித்தல்கள்

## நல்லதம்பி அருமைச்சந்திரன்



யாழ்ப்பாணம் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் இறம்பைக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி அருமைச் சந்திரன் அவர்கள் 06.08.2013 செவ் வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சந்திரன் மற்றும் இராமச்சந்திரன், செல்வசந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கைலைநாயகியின் அன்புக் கணவரும், வைதேகி (U.K), வாசுகி (ஆஸ்திரேலியா), மாதுமை (BOC வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டினேஷன், தசி ஆகியோரின் மாமனாரும், விதுன், அகர்வின் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.08.2013) வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 459/9,
இறம்பைக்குளம், வவுனியா,
தொ.பே. 024 222 5424
(35219)(4.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆடிப்பூரத் திருவிழா

வலி. வடக்கு, ஓக.8
நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆடிப்பூரத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது. காலையில் அம்மனுக்கு விசேட வழிபாடுகள் இடம்பெறுவதைத் தொடர்ந்து விசேட திரவிய அபிஷேகம், 108 சங்காபிஷேகம், நவோத்திர சகஸ்ரமகா சங்காபிஷேகம், தீபாராதனை வேதஸ்தோத்திரம், திருமறைப் பாராயணம், புஸ்பாஞ்சலி ஆகிய பூசை வழிபாடுகள் இடம்பெறுவதைத் தொடர்ந்து சுவாமி வெளி வீதியுலா வரும் நிகழ்வும் இபம்பெறும்.(வ-86)

★ ★ ★

தென்மராட்சி,, ஓக.8
சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலயத்தில் ஆடிப்பூர விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (வ-9)

★ ★ ★

அளவெட்டி வெளிவயல் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய ஆடிப்பூர விழா நாளை வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. அன்றைய தினம் விசேட பூசைகள் இடம் பெற்று அம்பாள் வீதி உலா இடம்பெறும். 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரலட்சுமி பூசையும் இடம் பெறும். (வ-36)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
02.06.1942

மறைவு
09.07.2013



அமரர் நாகலிங்கம்
சுப்பிரமணியம் (மணியம்)
(முன்னாள் இ.போ.ச. நடத்துநர்)

நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

இல.30,
மூத்ததம்பி வீதி,
மானிப்பாய்.
(3033)(6.4)

குடும்பத்தினர்.

## சிவகுருநாதன் சிதம்பரேஸ்வரி



இணுவில் கிழக்கு, சிவகாமி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வவுனியா, பண்டாரிக்குளம் அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகுருநாதன் சிதம்பரேஸ்வரி 07.08.2013 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நவாலியூர் சோமசுந்தரப்புலவர்-மனோன்மணி தம்பதியரின் மருமகளும், சிவகுருநாதனின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, தணிகாசலத்தரசு, தனஞ்ஜெயசிங்கம், இராசம்மா, மனோன்மணி, பராசக்தி, சிதம்பரநாதன், கனகலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பர்வநாதன் (இந்தியா), அருணகிரிநாதன் (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்), வரலட்சுமி (வவுனியா), மகாலட்சுமி (நடன ஆசிரியர்-டென்மார்க்), லேகா (ஆசிரியர், வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமலாதேவி (இந்தியா), சுதேசா (வவுனியா), பாலசுந்தரம் (இளைப்பாறிய பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்,வவுனியா), சத்தியமூர்த்தி (டென்மார்க்) ஆகியோரின் மாமியாரும், சிவகுமார் லதாயினி (லண்டன்), கோபிநாத் சுதா (லண்டன்), பிரசாத் (கனடா), கஜதுரஞ்சன்(உயர் தொழில்நுட்பக் கல்லூரி-கொழும்பு), சசிதரன் (விஞ்ஞான பீடம் 1 ஆம் வருடம், யாழ் வளாகம்), குகப்பிரியன் (ACCA), கோபிநேசன், கிருஷ்ணப்பிரியா (M.Sc. in political Science டென்மார்க்), துஷ்யந்தன், தான்யா ( M.Sc. in public Health Medical -டென்மார்க்) ஆகியோரின் பேர்த்தியும், ஒலிவியா, டில்வேஸ், ஹன்சியா, அஜய்ஸ், நாவீரியா அஞ்சலி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.99/1, அம்மன் கோயில் வீதி, பண்டாரிக்குளம் இல்லத்தில் இன்று (08.08.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.99/1,
அம்மன் கோயில் வீதி,
பண்டாரிக்குளம்,
வவுனியா.
(35220) (3.6.11)

தகவல்:
அருணகிரிநாதன்
(மகன்)

# மரண அறிவித்தல்



கலாபூசணம், கலைச்சுடர்
## சரவணமுத்துசபாநாயகம்
(ஓவியர் சபா - முன்னாள் ஓவியர்- வீரகேசரி, தினகரன், ஈழநாடு, Masters Advertising Company)

நவாலி தெற்கினைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சபாநாயகம் நேற்று (07.08.2013) புதன்கிழமை அதிகாலை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - தங்கம்மா தம்பதியினரின் அருமை மகனும், கலையரசன் (கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் - சுன்னாகம்), குகநேசன் (பொறியியலாளர் - U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மைதிலி மற்றும் குணவதி (U.K) ஆகியோரின் பாசமிகு மாமனும், கலைப்பிரியா (Malesiya), பவித்திரா, சோபிகா (U.K), அருண் (U.K) ஆகியோரின் பாசமிகு பேரனும், மனோன்மணி (U.K) இன் அன்பு மைத்துனரும், மஞ்சுளா (U.K), சாரதா (U.K), தில்லை நடேசன் (France), ஞானலிங்கம் (Australia), நந்தகுமார் (Australia), சாந்தகுமார் (Australia), ஜெகராஜன், மீனலோஜினி, மேகலா (Canada), கமலாம்பிகை (Canada) ஆகியோரின் பெரிய தந்தையும், யோகாம்பிகை (U.K), ஞானாம்பிகை, சாந்தி (Canada) ஆகியோரின் மாமனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.08.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4 மணியளவில் பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கலாஞ்சலி"
மில் லேன், மல்லாகம்.
(30320) (45.6.)

தகவல்:
கலையரசன் (மகன்)
021 224 1142, 071 282 7745

## விபத்து

வலி. வடக்கு, ஓக.8
கோப்பாய் சந்தியில் திங்கட்கிழமை நண்பகல் இடம்பெற்ற ஓட்டோ மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு வாகனங்களும் சேதம் அடைந்த போதிலும் எவரும் காயங்களுக்கு உள்ளாகாவில்லை. யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி வழியாக வந்த ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் சந்தியில் திரும்ப முற்பட்ட வேளையில் இந்த விபத்து இடம் பெற்றது. (வ-86)

உதயன்
08/08/2013

# ரூ. 30 லட்சம் பெறுமதியான பொருள்களையும் பணத்தையும் திருடிய பொறியியல்பீட மாணவன்

கண்டி,ஓக.8

பேராதனையிலும் கண்டியிலும் வீடுகள், வர்த்தக நிலையங்களில் பொருள்களையும் பணத்தையும் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட் டிருந்த பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்துறை மாணவர் ஒருவர் தம்மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் ஒப்புக்கொண்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி ஏ.எம்.ஏ. வசந்தகுமார அவருக்குத் தண்டனை வழங்குவதை செப்ரெம்பர் 13 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

குறிப்பிட்ட மாணவர் மீது பேராதனைப் பொலிஸாரும் கண்டி பொலிஸாரும் முறையே 18 மற்றும் 3 வழக்குகளை கண்டி நீதிமன்றத்தில் பதிவு செய்திருந்தனர்.

திருடப்பட்ட பணமும் பொருள்களும் சுமார் ரூ.30 இலட்சம் பெறுமதி கொண்டவை எனப் பொலிஸார் கணிப்பிட்டிருந்தனர்.

இந்த வழக்குகள் கடந்த வெள்ளியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி குற்றச்சாட்டுக்களை ஒப்புக் கொண்டார். திருடப்பட்ட பொருள்களில் பொலிஸாரால் மீட்கப்பட்டவற்றை உரியவர்களிடம் ஒப்படைக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார். (ப)


31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
பொன்னம்பலம்
நல்லம்மா

மண்ணில்
02.01.1937

விண்ணில்
09.07.2013

கடந்த 09.07.2013 ஆம் திகதி சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின்வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் இன்று (08.08.2013) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வுகளில் கலந்து கொள்வதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு வீதி,
மீசாலை மேற்கு. (29613)(4.6) குடும்பத்தினர்.



முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி
துரைராஜா கமலாதேவி
(சின்னக்கிளி)

வேலணை மண்ணில் சுவிஸ் மண்ணில்
மலர்வு: 8*01*1940 உதிர்வு: 20*07*2012
திதி: 08.08.2013

எம்மை அன்போடு அரவணைத்து
இவ் வையகத்தினில்
வாழ்வாங்கு வாழ வைத்த
எம் தாயே!
நீங்கள் எங்களைப் பிரிந்து
ஓராண்டு சென்றாலும்
எம் இதயத்தில் வற்றாத
நதியாக உங்கள் நினைவுகள்!
ஓடிக்கொண்டேயிருக்கும்
என்றென்றும் வணங்குகின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்....

இன்று (08.08.2013) வியாழக்கிழமை அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை சுவிஸில் நடைபெறும்.

(30250)(2.6.3)

குடும்பத்தினர்.
மகன்மார்: குமார் (சுவிஸ்).
மோகன் (ஜேர்மனி), சசி (பிரான்ஸ்).

P.மகாதேவன்
(மகான் - சகோதரன்)
கைதடி நுணாவில், சாவகச்சேரி.


## தங்கைக்காக பரீட்சை எழுதிய அக்கா கைது



கொழும்பு,ஓக.8

நடனப் பாடத்துக்காக இடம்பெற்ற பரீட்சையில் தங்கைக்காக அக்கா பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்.

இவ்வாறு பரீட்சை மோசடியில் ஈடுபட்ட குறித்த யுவதியை எம்பிலிபிட்டி, மொரகட்டிய மகா வித்தியாலய பரீட்சை பரிசோதகர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

தங்கையின் தேசிய அடையாள அட்டையின் புகைப்படத்துக்கு மேல் தனது புகைப்படத்தை ஒட்டி குறித்த யுவதி பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்.

குறித்த யுவதி பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொள்பவர் என்பது விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய யுவதி எம்பிலிபிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச)


☎ 0215671111
advt@uthayan.com

33 ஆம் நாள் நினைவஞ்சலி



பாலசுப்பிரமணியம்
தாரணி

தோற்றம்
05.12.1978

மறைவு
07.07.2013

33 நாள்கள் ஆனதுவோ
உன் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீ
நித்தம் புலம்புகின்றோம்
உன் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்

கல்லைவேம்படி
சுழிபுரம் மத்தி, சுழிபுரம். (c.10784) (45.6.)
என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.



6ஆம் ஆண்டு நினைவு நாள்

சரவணமுத்து சதாசிவம்
(சாண்டோ மாஸ்ரர்)
திதி: துதிகை



அகர வரிசையில்
ஓர் கலங்கரை விளக்கு

அன்பின் பிறப்பிடமாய்
ஆற்றலிலே வல்லவனாய்
இயல்பிலே நல்லவனாய்
ஈகையிலே வள்ளலாய்
உவர்விலே உன்னதமாய்
ஊக்கத்திலே சிகரமாய்
எண்ணங்கள் எல்லாம் சிறந்தனவாய்
ஏற்றத்திலே சிறப்பிடமாய்
ஐயங்கள் களைபவனாய்
ஒற்றுமையை வளர்ப்பவனாய்
ஓதலிலே ஆசிரியனாய்
ஔடதம் போல் குறை தீர்ப்பவனாய்
ஃஆன சிறந்த பண்பினனாய்

தோற்றம்
06.12.1922

மறைவு
14.08.2007

வாழ்வாங்கு வாழ்ந்து சதாகாலமும் சிவன் பாதம் சேர்ந்திட்ட
சரவணமுத்து சதாசிவம் அவர்களின்
6ஆம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.

இல. 305, A.V. Road,
அரியாலை, யாழ்ப்பாணம். (30297) (6.3) குடும்பத்தினர்.



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



'கணேச தீபம்'
நாகலிங்கம் நடராசா
(ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர், நயினாதீவு)
(திதி: துதியை)

பிறப்பு
02.12.1950

இறப்பு
20.07.2012

அன்பின் இலக்கணமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
அமைதியின் உறைவிடமாய்
அவனியில் வாழ்ந்து—எமக்கு
கல்வி அறிவூட்டி நல் வழி காட்டி
இன்பமாய் நாம் வாழ
வழி சமைத்த எமதருமை அப்பாவே!
எங்கு சென்றீர்? ஆண்டொன்று
ஓடிமறைந்தாலும்— உங்கள்
நினைவுகள் என்றும் எம்மை விட்டகலாது
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
ஸ்ரீ வீரகத்தி விநாயகருடன்
நயினை நாகபூஷணி அம்மனை
வேண்டி நிற்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (08.08.2013) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

6 ஆம் வட்டாரம்,
நயினா தீவு. (30312)(11.6.) குடும்பத்தினர்.

# கொழும்பு துறைமுகத்தை அண்டி கடலை நிரவி புதிய நகரம்

## நிர்மாணப் பணி ஒக்ரோபரில்

கொழும்பு, ஓக. 8

கொழும்புத் துறைமுகத்தை அண்டியுள்ள கடற்பகுதியை நிரவி நகரமொன்று உருவாக்கப்படவுள்ளது.

400 ஏக்கர்கள் வரையில் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள நிலப்பகுதி துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமாகவுள்ளது என்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவர் பிரியத் பி.விக்கிரம தெரிவித்தார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இந்த அபிவிருத்திட்டத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

1,400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் இந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், தென்னாசியா கப்பல் துறையின் தலைமை அலுவலகங்கள், வீட்டுத் தொகுதிகள், பாடசாலைகள், சிறப்பங்காடிகள், ஹோட்டல்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகிய நவீன அம்சங்களுடனான நகரமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த நகரம் 39 மாத காலத்துக்குள் நிர்மாணித்து முடிக்கப்படும்.

அபிவிருத்தி செய்யப்படும் நவீன நகரம் இலங்கையின் பொருளாதாரத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்திவிடும் வரலாற்றுப் புகழ்மிக்க முதலீடாக அமையும் –என்றார்.

(ச–22)

## கல்வி அமைச்சின் புதிய செயலாளராக அனுர திஸாநாயக்க

கொழும்பு, ஓக. 8

கல்வி அமைச்சின் புதிய செயலாளராக அனுர திஸாநாயக்க நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கெனவே ஜனாதிபதி செயலகத்தில் மேலதிக செயலாளராகப் பணியாற்றி வந்தவராவார்.

இதுவரை காலமும் கல்வி அமைச்சின் செயலாளராகப் பணியாற்றியவர் கோத்தாபய ஜயரத்ன ஆவார்.

(ஒ–22)

புலமைச்சுடர் நடத்தும் தரம் 5 மாணவர்களுக்கான வருடாந்த இலவசக் கருத்தரங்கு



காலம்: 10/08/2013 (சனிக்கிழமை)

யாழ் - கோப்பாயில்

இடம்: கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் தேவஸ்தான திருமண மண்டபம்

நேரம்: காலை 09.00 மணி தொடக்கம் 02.00 மணிவரை

வளவாளர்கள்

பி.அம்பிகைபாகன், ரீ.பேரின்பராஜா

(மூத்த பிரபல ஆசிரியர்)

புலமைப்பரிசில் பரீட்சை எழுதப்போகும் அனைத்து மாணவச் செல்வங்களையும் அழைக்கின்றோம்.

கல்விச்சுடர் வெளியிடும் மாதிரி வினாத்தாள்களை பெற்றுக்கொள்ளும் பாடசாலைகளும் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இடநெருக்கடிகளையும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் 09/08/2013 முன்னதாக 077 9122918 / 077 0711850 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக முற்பதிவுகளை செய்துகொள்ளவும். பாடசாலை ரீதியில் பங்குகொள்ளும் மாணவர்கள் பாடசாலைஊடாக முற்பதிவினை மேற்கொள்ளமுடியும்.

ஒழுங்கமைப்பு

மதுரம் இன்ஸ்ரிடியூட் (டச்சு வீதி, கோப்பாய் தெற்கு)

கற்பகாஸ் கலாசார கழகம் (கோப்பாய் தெற்கு)

முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் (கோப்பாய் தெற்கு)

தொடர்புகளுக்கு

011 5738855 / 071 6850005

ஊடக அனுசரணை உதயன்

# அவலங்களில் இருந்து மீள்வதற்கு அல்லாஹ்விடம் இறைஞ்சுவோம்

### நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் ஹக்கீம்



உள்நாட்டிலும், இஸ்லாமிய, அரபு நாடுகள் உட்பட சர்வதேச நாடுகளிலும் முஸ்லிம் சமூகம் அனுபவித்து வரும் இன்னல்களுக்கு மத்தியில் மீண்டும் ஓர் 'ஈதுல் பித்ர்' பெருநாளைச் சந்திக்கிறோம். இந்த அவலங்களில் இருந்தும், துன்ப துயரங்களில் இருந்தும் மீள்வதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் இறைஞ்சுவோமாக!

இவ்வாறு நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள 'ஈதுல் பித்ர்' நோன்பு பெருநாள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஹக்கீம் விடுத்துள்ள நோன்புப் பெருநாள் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சகிப்புத் தன்மையையும், ஈகையின் சிறப்பையும் அதிகம் வலியுறுத்தும் ரமழான் மாதத்தில் இறை வணக்கத்திலும், திருக்குர்ஆனை ஓதுவதிலும் ஊறித் திளைத்திருந்த முஸ்லிம்கள் புனித கடமையொன்றை இனிதே நிறைவேற்றிய திருப்தியில் பேருவகையோடு 'ஈதுல் பித்ர்' ஈகைத் திருநாளைக் கொண்டாடவுள்ளார்.

கிறீஸ் மனிதன் வெளிக்கிளம்பியதிலிருந்து, வணக்கத்தலங்களான பள்ளிவாசல்கள் தாக்கப்படுவது ஈறாக முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் இனவாத விஷமச் சக்திகளால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதும், அவற்றை தடுப்பதற்கு ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படாததும் விசனத்துக்குரியது.

பேரினவாத விஷமச் சக்திகளின் கை மேலோங்குவதற்கு இன்னமும் இடமளிப்பது ஆபத்தானது. இவ்வாறான சூழ்நிலையில், உரிய நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படாத பட்சத்தில் முஸ்லிம்கள் தங்களது இருப்பையும், பாதுகாப்பையும் தக்க வைத்துக் கொள்வதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அளப்பெரிய ஆற்றலில் நம்பிக்கை வைத்திருப்பது ஒன்றே ஆறுதல் அளிப்பதாகும்.– இவ்வாறு அமைச்சரின் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### துன்பத்தில் இருந்து நீங்கப் பிரார்த்திப்போம்

நோன்புப் பொருநாளின் மகிழ்வோடு கொண்டாடிக் கொண்டிருக்கும் இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் இதய பூர்வமான நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்துள்ளார்.



ரமழான் மாதம் முழுவதையும் இறைவனுக்கான தியாகத்தோடு கழித்த நல்லடியார்களுக்கு இறைவன் இந்த உலகில் கொடுக்கும் மகத்தான ஒரு மகிழ்வுதான் இன்றைய பெருநாளாகும். ரமழான் மாதத்தில் நோன்பு நோற்று இறைவழிபாட்டில் ஈடுபட்ட எம் எல்லோருக்கும் அதன் முழுப் பயனும் மறு உலகில் கிடைக்க நாம் இறைவனிடம் கையேந்துவோம்.

உலகளாவிய ரீதியில் முஸ்லிம்களைக் கொடுமைக்கு உள்ளாக்கும் ஆட்சி மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களிலிருந்து உலக முஸ்லிம் சமூகம் விடுபடவும் இன்றைய தினத்தில் நாம் இறைவனிடம் பிரார்த்திப்போம் என்று அவர் மேலும் கூறினார்.

### சிறப்பான எதிர்காலம் பிறக்க வேண்டும்



நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து இஸ்லாமிய உள்ளங்களும் சமாதானமும், சுகவாழ்வும் கிட்டி சிறப்பான எதிர்காலம் பிறக்க வாழ்த்துகின்றேன் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாறை மாவட்ட பிரசாரச் செயலர் எஸ்.அப்துஸ் ஸலாம் தெரிவித்துள்ளர்.

அவர் வெளியிட்டுள்ள பெருநாள் வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

நோன்பின் மூலம் பிறருடைய பசியையும் பட்டினியையும் அறிந்து கொண்டது மாத்திரமல்லாமல் பிறருக்கு தானதர்மம் செய்யும் மனோபாவத்தையும் தெளிவாக விளங்கும் மறுமைப் பயனையும் மக்கள் பெற்றிருப்பர். அதனூடாக எமக்கு முன்னுள்ள சவால்களை திடமான உள்ளத்தோடு எதிர்கொள்ள உறுதி கொள்ள வேண்டும். சமூக, அரசியல் சூழ்நிலைகள் எமக்கு பாதகமாக அமையும் நிலையில் நாம் உணர்வு ரீதியாக அன்றி அறிவுபூர்வமாக செயற்பட வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

### தேசிய உணர்வுள்ள சமூகமாக மிளிருங்கள்

முஸ்லிம் சமூகம் தேசிய உணர்வுள்ள சமூகமாக என்றும் மிளிர வாழ்த்துகின்றேன் என்று தென். கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர்



எஸ்.எம்.முகமது இஸ்மாயில் தெரிவித்தார்.

பெருநாளை முன்னிட்டு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரமழான் முஸ்லிம்களுக்கு மத்தியில் விமோசனத்தை ஏற்படுத்தும் மாதம். அந்த மாதம் நிறைவுறும்போது அவர்கள் தமக்கான கூலிகளைப் பெற்றுக்கொள்கின்றனர். பாவங்களை சம்பாதித்தவர்கள் விமோசனம் அடைகின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

### பொறுமை காத்து பிரார்த்திப்போம்

புனித மாதம் நம்மை விட்டுப் பிரிந்து அந்த மாதத்தின் அறுவடை நாளான ஈகைத் திருநாள் ஈத் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லிம்களுக்கும் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் கூறினார்.

பெருநாள் வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



சிறு பேரினவாத குழுக்கள் முஸ்லிம் – சிங்கள மக்களிடையே பிளவினை ஏற்படுத்தி நாட்டில் மீண்டும் அமைதியற்ற சூழலை உருவாக்க முற்படுகின்றனர். இந்த நிலையில் நாம் பொறுமைகாத்து மதக் கடமைகளை செய்வதற்காக பிரார்த்திப்போம் என்று அவர் கூறினார்.(ஓ–ச–10)

உதயன் 08/08/2013

## மாநாட்டை அலங்கரிக்க நெதர்லாந்து குதிரைகள்



கொழும்பு,ஓக.8

இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டை அலங்கரிக்க நெதர்லாந்தில் இருந்து 21 குதிரைகள் தருவிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் குதிரைப்படைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் குதிரைகள் இரண்டு கோடி ரூபா பெறுமதியில் வாங்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் குதிரைப்படைப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

குதிரைகளுக்குப் பயிற்சிகளை வழங்கும் செயற்பாடுகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன. தற்போது தருவிக்கப்பட்டுள்ள இந்த 21 குதிரைகளுடன் பொலிஸ் குதிரைப் படைப் பிரிவின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 41 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

## அடுத்த மாதம் மூடப்படும் சரணாலயம்

கொழும்பு,ஓக.8

யால - தேசிய வனவிலங்குகள் சரணாலயம் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து ஒரு மாத காலத்துக்கு மூடப்படவுள்ளது.

தற்போது நிலவும் கடும் வரட்சியான காலநிலையால் வனவாழ் உயிரினங்கள் மற்றும் மரங்கள், செடி, கொடிகளைப் பேணிப் பாதுகாக்க சரணாலயத்தை தற்காலிகமாக ஒரு மாத காலத்துக்கு மூடி விடுவதற்கு வன பாதுகாப்புத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

வனவிலங்குகளை வேட்டையாடுவதற்கு வேட்டைக்காரர்கள் பெருமளவில் சஞ்சரிப்பதைத் தடுத்து நிறுத்தவுமென இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-22)

# மலையகத்தில் தொடர்ந்து கொட்டுகிறது அடைமழை

### 8000 பேர் பாதிப்பு; 969 வீடுகள் சேதம்
### இடம்பெயர்ந்தோர் 11 முகாம்களில் தஞ்சம்


வெள்ளத்தில் மூழ்கியுள்ள குடியிருப்புக்கள்


காசல்ரீ நீர்த்தேக்க வான்கதவுகள் திறப்பு

நுவரெலியா,ஓக.8

நுவரெலியா மாவட்டத்தின் பல இடங்களிலும் தொடர்ந்து பெய்து வரும் அடை மழையால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

ஹற்றன், நோர்வூட், மஸ்கெலியா, பொகவந்தலாவை, வட்டவளை ஆகிய பகுதிகளில் பெய்த அடைமழையால் பல இடங்கள் வெள்ளக்காடாகியுள்ளன.

மழையால் இடம் பெயர்ந்தோர் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களில் தங்கியுள்ளோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் சரத்லால் குமார தெரிவித்தார்.

மழை, வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக கண்டி மற்றும் நுவரெலிய மாவட்டங்களில் 11முகாம்களில் இடம்பெயர்ந்தோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

இதேவேளை 2 ஆயிரத்து 366 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 3 பேர் அடை மழை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது. இடரால் 17 வீடுகள் முழுமையாகவும் 952 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

கடும் மழையால் நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் உயர்வடைந்ததையடுத்து மேல் கொத்மலை, விக்டோரியா, கெனியன், லக்பான, காசல்ரீ, கொத்மலை ஆகிய நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டது. (ச)

இடரால் 17 வீடுகள் முழுமையாகவும் 952 வீடுகள் பகுதியளவிலும் சேதமாக்கப்பட்டுள்ளன.



பதில் பிரதம நீதியரசராக ஷிராணி திலகவர்தன செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.


## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

அக்கரைப்பற்று,ஓக.8

அக்கரைப்பற்று, கண்ணகிபுரம் பிரதேசத்தில் சட்டவிரோதமாக துப்பாக்கி ஒன்றை தன்வசம் வைத்திருந்த நபர் ஒருவரை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அக்கரைப்பற்று, ஒலுவில் கடற்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போதே இந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் இருந்து துப்பாக்கி மற்றும் அதற்கு பயன்படுத்தப்படும் 5 தோட்டாக்கள் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.



சந்தேகநபர் துப்பாக்கியுடன் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார். (ச)

## பேரீச்சம் பழங்கள் தரம் குறைந்தவை

### முஸ்லிம் சேவை ஊழியர்கள் கவலை



கொழும்பு,ஓக.8

கலாசார திணைக்களத்தினால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பேரீச்சம் பழங்கள் உபயோகத்துக்கு ஏற்றவை அல்ல என்று முஸ்லிம் சேவை ஊழியர்கள் கவலை தெரிவித்தனர்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை ஊழியர்களுக்கு 2008 ஆம் ஆண்டு நோன்புக் காலத்துக்குரிய பேரீச்சம்பழங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் இந்த ஆண்டே வழங்கப்பட்டுள்ளன என்று முஸ்லிம் சேவை ஊழியர்கள் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:- 2008 ஆம் ஆண்டுக்கு முன்னர் முஸ்லிம் சேவையின் பணிப்பாளர்களாக இசட். எல்.எம். முகமட் மற்றும் பௌசுல் ஹூஷன் ஆகியோர் கடமையாற்றிய காலப்பகுதியில் ஒவ்வொரு வருடத்திலும் உண்ணக் கூடிய தரமான பேரீச்சம்பழங்கள் வழங்கப்பட்டன. அதன் பின்னர் நான்கு வருடங்கள் தொடர்ச்சியாக பேரீச்சம்பழங்கள் வழங்கப்படவில்லை.

இந்த முறை வழங்கப்பட்ட பேரீச்சம்பழங்கள் தரம் குறைந்து, பழுதடைந்து உண்ண முடியாத நிலையில் காணப்பட்டன.

பேரீச்சம்பழங்களை வழங்க முன்னர் அதன் தரத்தினை உயர் அதிகாரிகள் பரிசோதித்திருக்க வேண்டும்.- என்றனர். (ச-10)

## கடந்த வருட மேலதிக நெல் கால்நடை உணவுக்கு விற்பனை



சிறுபோக நெல்லுக்கு உரிய விலை கிடைக்காமல் போகக் கூடும் என்பதாலேயே அரசு மேலதிக நெல்லைக் கால்டை உணவுக்கு விற்பனை செய்யவுள்ளது.

கொழும்பு,ஓக.8

கடந்த வருடம் பெரும்போகத்தில் விவசாயிகளிடமிருந்து அரசால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லில், மாவட்டச் செயலர்களின் பொறுப்பில் உள்ள 26,104 மெற்றிக் தொன் நெல்லை கால்நடை உணவுகளுக்கு விற்பனை செய்வது குறித்து ஆராயப்படவுள்ளது.

இந்த ஆண்டின் சிறுபோக நெல் சந்தைக்கு வரவுள்ளதால் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள மேலதிக நெல்லை கால்நடை உணவுகளுக்குப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேவைக்கு மேலதிகமாகவுள்ள நெல்லை கால்நடை உணவுகளுக்கு விற்பனை செய்யாது வர்த்தக சந்தைக்கு விட்டால், சிறுபோக நெல்லின் விலை வீழ்ச்சியடைந்து விடும்.

அதனால் சிறுபோக நெல்லுக்கு உரிய விலை கிடைக்காமல் போகக் கூடும் என்பதாலேயே அரசு மேலதிக நெல்லைக் கால்டை உணவுக்கு விற்பனை செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# தமிழர்கள் சர்வதேச விசாரணை கோருவதன் நியாயம் புரிகிறதா?

## வெலிவேரியாவை கோடி காட்டி கேட்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, ஓக. 8

வெலிவேரிய பிரதேச மக்கள் இராணுவத்தால் மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டமைக்குக் கடுமையான எதிர்ப்பை நேற்றுத் தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன், வெலிவேரியவில் மூன்று பேர் கொல்லப்பட்டமைக்கே சுயாதீன விசாரணையைக் கேட்கும்போது, வடக்கில் 4 வருடங்களுக்கு முன் குறைந்தது 70,000 மக்கள் இராணுவத்தினால் கண்மண் தெரியாமல் கொல்லப்பட்டமைக்கு ஏன் சுயாதீன விசாரணையைக் கோரக்கூடாது என்று கேள்வியும் எழுப்பினார்.

அது மட்டுமல்லாது, வெலிவேரிய மக்கள் மீது அரசு திட்டமிட்டு தாக்குதலை நடத்தியுள்ளதுடன், இறந்தவர்களின் உண்மையான விவரங்களை அரசு மறைக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தகருத்துகள்வருமாறு:

''இன்று நாட்டில் மிகவும் கொடூரமான விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. வெலிவேரிய சம்பவமும் இதற்கு சிறந்தொரு சான்றாகும்.

வெலிவேரியவில் நடத்தப்பட்ட இராணுவத்தினரின் தாக்குதலில் 3 அப்பாவிப் பொது மக்கள் உயிரிழந்தனர். ஆனால், இதை விடவும் அதிகமான மக்கள் இறந்திருக்கலாம். இறந்தவர்களின் உண்மையான தகவல்களை அரசு மறைக்கிறது.

அரசுக்கு எதிராக, களம் இறங்குபவர்கள் தமிழராக மட்டுமல்லர், சிங்களவராக இருந்தால் கூட உயிருடன் இருக்க மாட்டார்கள் எனும் செய்தியை அரசு, இந்த திட்டமிடப்பட்ட தாக்குதலை நடத்தி முழு நாட்டிற்கும் பறைசாற்றி விட்டது.

சுத்தமான குடிதண்ணீர் கேட்டுப் போராடுவதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. அதற்காக, இராணுவத்தினரை அவிழ்த்து விட்டு மக்களைக் கொடுமையாகத் தாக்கியமையானது மிகவும் கொடுமையானதாகும். இதை தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற ரீதியில் நாமும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்தக் கொடூரத் தாக்குதல் இடம்பெற்ற போது ஒரு சிங்களவர், ஊடகங்களுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, "வெறும் தண்ணீர் கேட்ட சிங்களவர்களுக்கே இன்று இராணுவத்தால் இவ்வாறான நிலை ஏற்பட்டது என்றால் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு அவர்கள் எவ்வாறான கொடுமைகளை புரிந்திருக்கக் கூடும்? தமிழர்களின் நிலைமை எவ்வாறாக இருக்கும்?'' எனக் கேள்வியொன்றை எழுப்பினார்.

ஆம். வெலிவேரியவில் மூன்று பேர் இராணுவத்தினால் கொல்லப்பட்டமைக்கே சுயாதீன விசாரணைகளை செய்யச் சொல்லும் போது, வடக்கில் அன்று குறைந்தது 70,000 இற்கும் அதிகமான மக்கள் இராணுவத்தினரால் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். அதற்காக நாம் சுயாதீன விசாரணை செய்யச் சொல்லிக் கோருவது தவறானதா?

அரசின் இவ்வாறான செயலால் நாடு மிகவும் பயங்கரத் தன்மையில் சென்று கொண்டிருக்கிறது. அரசு தமிழ், முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து தற்போது சிங்களவர்கள் மீதும் தாக்குதல்களை நடத்துவதை சிங்கள மக்களும் உணர்ந்திருப்பார்கள். இந்த நிலைமையிலிருந்து நாம் அனைவரும் விடுபட வேண்டுமென்றால் உடனே இந்த அரசு மாறவேண்டும். அப்படி நடந்தால் மட்டுமே நாட்டில் மக்கள் நிம்மதியாக வாழ முடியும்.

அது மட்டுமல்லாது, நாட்டு மக்கள் மீது தொடர்ச்சியாக நடத்தும் தாக்குதல்கள் முடிவுக்கு வந்து, இதுவரையிலும் நடைபெற்ற தாக்குதல்களுக்கும் ஒரு சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்''- என்றார்.

# 60 இடங்களில் நடமாடும் சேவை

## 11 ஆயிரம் பேருக்கு அ. அட்டைகள்

யாழ்ப்பாணம், ஓக.8

தேர்தலில் வாக்களிக்கும் நோக்கில் 'கபே' அமைப்பு அண்மையில் 60 இடங்களில் நடமாடும் சேவையை முன்னெடுத்து 10 ஆயிரத்து 966 பேருக்கு தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளதாக அதன் இணைப்பாளர் மனாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலில் வாக்களிப்பதற்காக தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நடமாடும் சேவை நடத்தப் பட்டது. கபே இலங்கை மனித உரிமைகள் அமைப்பு மற்றும் ஆள் பதிவுத் திணைக்களம் என்பன இணைந்து இவற்றை ஏற்பாடு செய்திருந்தன.

நேற்றுமுன்தினம் வரையான சுமார் ஒரு மாத காலப் பகுதியில் 60 இடங்களில் நடமாடும் சேவை நடத்தப் பட்டுள்ளன.

அதில் 10 ஆயிரத்து 966 பேருக்கு தேசிய அடையாள அட்டையும் 8 ஆயிரத்து 885 பேருக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரமும் 213 பேருக்கு இறப்பு அத்தாட்சிப் பத்திரமும் பெற்றுக்கொடுத்த வகையில் மொத்தம் 20 ஆயிரத்து 64 பேர் பயன்·பெற்றுள்ளனர்- என்றார். (வ-4)

## முன்பள்ளியின் விளையாட்டு விழா

வவுனியா அண்ணாநகர் திருமகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எம்.எஸ்.எம்.நஷார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் விருந்தினர்களாக சிறிரெலோ இயக்கத்தின் செயலாளர் நாயகம் பரராசசிங்கம் உதயராசா, வடமாகாண ஆளுநரின் பிராந்திய ஆணையாளர் ஐ.எஸ்.எம்.மொஹைதீன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த விழாவை கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், திருமகள் முன்பள்ளியினர் ஆகியோர் இணைந்து நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-402)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக சென்னையில் இன்று ஆர்ப்பாட்டம்

செயலாளர் ஜெ.அன்பழகன், வடசென்னை மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இதில் பேராசிரியர் சுபவீர பாண்டியன் உள்பட பலர் பங்கேற்றுப் பேசுகின்றனர்.

இதேபோலக் காஞ்சிபுரத்தில் ஆளுநர் அலுவலகம் அருகே நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட செயலாளர் அன்பரசன் தலைமை தாங்குகிறார். முன்னாள் அமைச்சர் துரைமுருகன் சிறப்புரையாற்றுகிறார். (த)

### வெலிவேரிய தாக்குதலுக்குபிரிட்டனும் ஆழ்ந்த கவலை

மையை இலங்கை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விரைவானதும், வெளிப்படையானதுமான விசாரணைகளை நடத்துமாறும் அவர் இலங்கை அரசைக் கேட்டுள்ளார்.

தனது எண்ணங்கள், கொல்லப்பட்ட காயமுற்றவர்களின் குடும்பங்களைச் சுற்றியே இருப்பதாகவும், அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

முன்னதாக, வெலிவேரியா தாக்குதல் தொடர்பாக அமெரிக்காவும் தனது கண்டனத்தை தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (த)

### தேர்தல் விதிகளுக்கு முரணாக யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகள்

உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் படங்களையும் உள்ளடக்கி சுவரொட்டிகளை ஒட்டியுள்ளார்.

அத்துடன் அவர் செல்வச்சந்நிதி ஆலய வீதிகளில் பெரிய 'கட்அவுட்' களையும் வைத்துள்ளதுடன் ஏனைய வீதிகளிலும் இவற்றைக் காட்சிப்படுத்தி உள்ளார்.

இதேவேளை, கைதடி, கொடிகாமம், நுணாவில், சாவகச்சேரி ஆகிய பகுதிகளிலும் இத்தகைய தேர்தல் விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆயினும் இவற்றை அகற்றுவதற்கு பொலிஸார் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது. (த-400)

### இராணுவ நடவடிக்கையை கண்டிக்கிறார் கர்தினால்

ஆண்டகை கண்டனம் வெளியிட்டுள்ளார்.

வெலிவேரிய புனித அந்தோனியார் தேவாலய புனித பூமிக்குள் படையினர் ஆயுதங்களுடன் பிரவேசித்து பொதுமக்களைத் தாக்கினர் என குற்றம்சுமத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அடைக்கலம் பெற்றுக்கொள்ள வந்த மக்களின் மீதான தாக்குதல்களை ஏற்றுக்கொள்ள முடியாது. எந்த மதத்தவரது புனிதத்தலமாக இருந்தாலும் அதற்கு மரியாதை அளிக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெலிவேரியவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் குறித்து பக்கச் சார்பற்ற விசாரணைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# பல்கலை மாணவர் மீது தாக்குதல்

கொழும்பு, ஓக. 8

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் மீது இனந்தெரியாத குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் காயமடைந்த மாணவர்கள் பலாங்கொட வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. விவசாய பீடத்திற்கு அருகிலுள்ள விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் மீதே இனந்தெரியாத குழுவினர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதலில் காயமடைந்த இரு மாணவர்களும் பம்பகின்ன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பலாங்கொட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இது குறித்து மாணவர்களின் உறவினர்கள் சமனலவெவ பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்துள்ளனர்.

எனினும், இனந்தெரியாத குழுவினர் நேற்று அதிகாலை விடுதிக்குச் சென்று இரு பல்கலைக்கழக மாணவர்களை வெளியே வருமாறு அழைத்து தாக்கியுள்ளனர்.

குறித்த இவ்விரு மாணவர்களுக்கு கடந்த சில நாள்களாக மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆள் தேவை**

பெண் காசாளர், ரயர் வேலை பழக இளைஞர் தேவை.

**வசந்தவம் ரயர் வேக்ஸ்**
129 C K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
(80325) (18) 021 222 1082

**வேலைக்கு ஆள் உடன் தேவை**

எமது ஸ்தாபனத்தின் உற்பத்திகளை வாகனத்தில் சென்று விநியோகிப்பதற்கு விநியோகத்தர் ஒருவர் தேவை.

தொடர்பு- 11A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். தொ.இல-0212223857

**உடனடி வேலை வாய்ப்பு**
INNOVAGE INTERNATIONAL (PVT) Ltd.

சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் அமெரிக்க நிறுவனத்தின் 5 புதிய கிளைகளில் நிரந்தர வேலைவாய்ப்பு



* Customer Service
* Marketing executive
* Managers
* Asst. Managers

குறைந்தபட்ச கல்வித் தகைமை O/L
தகைமைக்கேற்ப பயிற்சி வழங்கப்படும்
பயிற்சியின் போது ரூபா. 12,000/= 15,000/=
பயிற்சியின் பின் ரூபா. 30,000/= -50,000/= சம்பளம்.
வெளிநாட்டில் தொழில் புரிய வாய்ப்பு வழங்கப்படும்.

NOTE
கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசத்தினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தங்குமிட வசதி உண்டு
077 632 0962, 021 720 1521,
077 190 8997.

**அறிவித்தல்**

**மட்டுவில் நரசிங்க வைரவர் ஆலய புனருத்தாரண பரிபாலன சபை**

சுந்திரபுரம் மட்டுவில் வடக்கில் நரசிங்க வைரவர் கோயில் அமைந்துள்ளது. ''நல்லான் வளவு'' அல்லது ''வண்ணக் கண் வளவு'' என்னும் நி.பர.2 (அண்ணளவாக)க் குரிய உறுதி மேற்படி ஆலய பரிபாலன சபை வசம் இல்லை. இவ்வாதனம் இவ்வாலயத்துக்குச் சொந்தமானதென்பதை உறுதியொன்றின் மூலமாக நிறுவிக்காண்பிக்க வேண்டிய காரணம் எழுந்துள்ளது. இவ்வாலயம் இவ்வாதனத்தில் கடந்த 60 வருடங்களுக்கு முன்பிருந்தே பொது மக்களால் ஸ்தாபிக்கப்பட்டுப் பரிபாலிக்கப்பட்டு வருகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் ஒரு மாதத்துள் ஆலய பரிபாலன சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**இ.வசந்தன்**
**-தலைவர்.**

(29615)

**இ.பாலசுப்பிரமணியம்**
**-செயலாளர்.**

**தேவை**

*** மேற்பார்வையாளர்**
சிங்களம் தெரிந்த AD சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்.
மாதாந்தம் வருமானம் ரூபா 30,000/= -ரூபா 35,000/= வரை

*** பணம் வசூலிப்பாளர்**
சிங்களம் தெரிந்திருத்தல் அவசியம்
மாதாந்த வரமானம் ரூபா 35,000/= -ரூபா 40,000/= வரை

*** விற்பனைப் பிரதிநிதி**
மாதாந்த வருமானம் ரூபா 30,000/= -ரூபா 35,000/= வரை

கிழமைநாள்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை ஆவணங்களுடன் நேரில் வரவும்

**சுஜித் என்ரபிறைசஸ்**
(8/2729) (19,16) டச்சு வீதி, சாவகச்சேரி. 021 227 0586


## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம் ஓக.8
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர் மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடந்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக் கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப 4மணி
நியூட்டன் (ஏ) விளையாட்டுக் கழகம் எதிர் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகம்.
பி.ப 4.45 மணி
கரைவைச்சுடர் (பி) விளையாட்டுக்கழம் எதிர் கருணாகரன் விளையாட்டுக் கழகம்.
(ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஓக.8
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள லீக் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ற-23)





வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்ற வடமாகாணத் தடகளப் போட்டிகளில் பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் ஒரு காட்சி.

## கலைமதியை வீழ்த்தியது யங்ஹென்றிஸ்

யாழ்ப்பாணம், ஓக.8
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடந்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லீக் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.
இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் கலைமதி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற் றது.
(ற)

# புத்தூர் சரஸ்வதி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஓக.8
திருநெல்வேலி பாரதி விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்துக்கு புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றது.



கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழகமும், சண்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.
மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் சண்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதி யாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ற)

## ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக.8
மஞ்சி வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கோப்பாய் பிரிவிற்கு உட்பட்ட அணிகளிற்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது
கடந்த ஞாயிற் றுக்கிழமை அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதி யாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளை



யாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 3:2 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது. (ற-23)

# தவறாக வெளியாகும் கருத்துக்கள் -டிராவிட்

ஐ.பி.எல். சூதாட்டத்துக்குப் பின், கிரிக்கெட் மீதான நம்பகத்தன்மையை மீட்பது குறித்து வெளியிட்ட கருத்துக்கள் ஊடகங்களால் தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளன என்று டிராவிட் வருத்தம் தெரிவித்தார்
இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவரான ராகுல் டிராவிட் ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் அணியின் தலைமைப் பொறுப்பை வகித்தார். இத்தொடரில் நடந்த சூதாட்டம் தொடர்பாக டிராவிட்டின் அணியை சேர்ந்த ஸ்ரீசாந்த், சண்டிலா, அங்கித் சவான் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.
இது குறித்து டிராவிட் கூறுகையில்,
ஐ.பி.எல். தொடர் சூதாட்டத்தினால் ஏற்பட்டுள்ள சூழல் கிரிக்கெட் வளர்ச்சிக்கு உதவாது. இதனால், கிரிக்கெட் வீரர்களின் மீது வைத்துள்ள மரியாதை, அன்பு, மதிப்பு ஆகியவை குறைந்துவிடும். அந்த ஆட்டத்தின் மீது ரசிகர்கள் இழந்த நம்பிக்கையை மீண்டும் கொண்டு



வர வேண்டும். இதற்கு கிரிக்கெட் சபை அல்லது அரசு என்று யாராக இருந்தாலும் சரி பாகுபாடு பாராமல் உதவ வேண்டும் ''என்றார்.
தவறான கருத்து
இந்த பேட்டி குறித்து டிராவிட் தனது டுவிட்டர் இணைய தளத்தில்வெளியிட்டசெய்தியில், ''நான் தெரிவித்த கருத்துக்களை சில ஊடகங்கள் தவறான பொருள்பட வெளியிட்டது ஏமாற்றம் தருகிறது.
நான் குறிப்பிட்ட நம்பகத்தன்மை குறித்து பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டுள்ளது. எனது முழுமையான பேட்டி விரைவில் வெளியாகிறது. அதுவரை எல்லோரும் பொறுத்திருங்கள்'' என்று தெரிவித்துள்ளார். (ற)

# அநாகரிக நடவடிக்கையில் ஈடுபட்ட மொன்ரி பனசர்

இங்கிலாந்தின் இரவு விடுதியொன்றில் இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் மொன்ரி பனசர் அநாகரிகமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டதுடன் அதற்காக அவருக்கு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.
ஆஷஷ் தொடரின் மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான குழாமில் இடம்பெற்றிருந்த மொன்ரி பனசர், அப்போட்டியில் விளையாடும் பதினொருவரில் இடம்பெற்றிருக்கவில்லை. அப்போட்டியில் வெற்றி தோல்வியற்ற முடிவு கிடைக்கப்பட, ஆஷஷ் கிண்ணத்தை இங்கிலாந்து தக்க வைத்துக் கொண்டது.
இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்த அப்போட்டியின் பின்னர் மொன்ரி பனசர் இரவு விடுதியொன்றிற்குச் சென்றிருக்கலாம் எனவும், அவர் திங்கட்கிழமை அதிகாலையிலேயே இந்த அநாகரிகமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிக்கக் கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.
ஆரம்பத்தில், அந்த விடுதி




யில் காணப்பட்ட பெண்களுக்கு தொந்தரவுகளை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் மொன்ரி பனசர் அந்த இரவு விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.
அதையடுத்து, அங்கிருந்த இரவு விடுதிக் கட்டுப்பாட்டாளர்கள் மீது மொன்ரி பனசர் சிறுநீர் கழித்துள்ளார்.
அதன் பின்னர் மொன்ரி பனசரைப் பிடித்து வைத்த அந்த இரவு விடுதி நிர்வாகம், பொலிஸாரை அழைத்துள்ளதுடன், அங்கு வைத்து மொன்ரி பனசருக்கு 90 ஸ்ரேர்லிங் பௌண்ட்ஸ் அபராதம் விதிக்கப்பட்டது என்றும் கூறப்படுகின்றது.
தனது இந்த மோசமான நடத்தைகளுக்காக மொன்ரி பனசர் தனது வருத்தத்தை வெளிப்படுத்தினார் என்று அவர் சார்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.(ற)




# அடுத்த போட்டிக்கு இங்கிலாந்து தயார்

இங்கிலாந்து- ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரின் 4ஆவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து டெஸ்ட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

3ஆவது டெஸ்ட் போட்டியின் பின்னர் இங்கிலாந்து அணி ஆஷஸ் தொடரை தக்க வைத்துக் கொண்டுள்ள போதிலும் அந்த அணி கிண்ணத்தை கைப்பற்றும் நோக்குடன் திறமையான வீரர்களை உள்வாங்கும் நோக்குடன் புதிய வீரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது.

3 ஆவது போட்டிக்காக அறிவிக்கப்பட்ட அணியிலிருந்து ஜேம்ஸ் ரெய்லர், மொன்ரி பனேசர் இருவரும் நீக்கப்பட்டு கிரஹம் ஒனியன்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள அணி விவரம்:

அலஸ்ரெயர் குக், ஜேம்ஸ் அன்டர்சன், ஜோனி பெயர்ஸ்ரோ, இயன் பெல், ரிம் பிரெஸ்னன், ஸ்ருவேர்ட் ப்ரோட், கிரஹம் ஒனியன்ஸ், கெவின் பீற்றர்சன், மற் பிரயர், ஜோ றூட், கிறேம் ஸ்வான், கிறிஸ் ட்ரெம்லெற், ஜொனதன் ட்ரொட் (ந)

# இலங்கை அணி தொடர்ந்தும் முதலிடம்

சர்வதேச கிரிக்கெட் சபையின் '20/20' தரப்படுத்தலில் இலங்கை அணி தொடர்ந்தும் முதலிடத்தில் காணப்படுகிறது.

தென்னாபிரிக்காவிற்கெதிராக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 3ஆவதும், இறுதியுமான '20/20' சர்வதேச ஆட்டத்தில் வென்றதை அடுத்து இலங்கை அணி தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.


நேற்றைய போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்திருக்குமாயின் இலங்கை அணி 3ஆவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டிருக்கும் என்பதோடு, '20/20' சர்வதேசத் தொடரில் 0:3 என்ற கணக்கில் தோல்வியடைந்த முதலாவது டெஸ்ட் அந்தஸ்துள்ள நாடு என்ற மோசமான சாதனைக்கும் சொந்தமாகியிருக்கும்.




எனினும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இலங்கை அணி திலகரட்ண டில்ஷான், திஸர பெரேரா, மஹேல ஜெயவர்தன ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தால் வெற்றிபெற்றதை அடுத்து முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

குறித்த ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றதன் காரணமாக பாகிஸ்தான் அணி முதலிடத்திற்கு வரும் வாய்ப்புக் கிடைக்காமல் போனதோடு, அவ்வணி தொடர்ந்தும் இரண்டாவது இடத்தில் காணப்படுகிறது. (ற)

# பணக்கார வீரர் ரைகர்வூட்ஸ்



அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்களில் அமெரிக்க கோல்ப் வீரர் ரைகர் வூட்ஸ் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார்.

அமெரிக்காவின் பிரபல பத்திரிகையான 'போர்ப்ஸ்' இதழ், இந்த ஆண்டு அதிக பணம் சம்பாதித்த வீரர், வீராங்கனைகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

100 பேர் கொண்ட இந்த பட்டியலில் அமெரிக்க கோல்ப் வீரர் ரைகர் வூட்ஸ் முதலிடத்தை பிடித்துள்ளார்.

அவர் 2012ஆம் ஆண்டு ஜூன் முதல் 2013ஆம் ஆண்டு ஜூன் வரையிலான ஒரு வருட காலத்தில் மொத்தம் 475 கோடி ரூபா சம்பாதித்து இருக்கிறார். 2 ஆவது இடத்தில் 17 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற ரென்னிஸ் வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் உள்ளார். அவரது வருமானம் 435 கோடி ரூபாவாகும்.

கிரிக்கெட் வீரர்களில் 2 பேர் மட்டுமே இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளார்கள். ஒருவர் இந்திய அணித் தலைவர் மகேந்திர சிங் டோனி. 16ஆவது இடத்தில் உள்ள டோனி 192 கோடி ரூபாவை ஒரு வருட வருமானமாக ஈட்டியிருக்கிறார். இதில் 107 கோடி ரூபாவை விளம்பரங்களின் மூலம் டோனி பெற்றுள்ளார். எஞ்சிய 22 கோடி ரூபா பரிசுத்தொகை மற்றும் போட்டிக்குரிய ஊதியம்என்பவற்றின் மூலம் அடைந்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் அதிகம் சம்பாதிக்கும் வீரர் பட்டியலில் 134 கோடி ரூபாவுடன் 51ஆவது இடத்தில் உள்ளார்.

வீராங்கனைகளில் அதிக வருவாய் பெறுவோர் பட்டியலில் ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா தொடர்ந்தும் 9ஆவது வருடமாக முதலிடத்தில் இருக்கிறார். அவரது வருவாய் தொகை 137 கோடி ரூபா.

அவருக்கு அடுத்தபடியாக அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் உள்ளார். அவரது வருடாந்த வருமானம் 125 கோடி ரூபாவாக உள்ளது.

## சம்பியன்ஸ் லீக் தொடர் ஹைதராபாத்தில் நடக்காது

CHAMPIONS LEAGUE TWENTY 20

தெலுங்கானா பிரச்சினை காரணமாக சம்பியன்ஸ் லீக் தொடர் ஹைதராபாத்தில் நடக்குமா என சந்தேகம் எழுந்துள்ளது.


ஐந்தாவது சம்பியன்ஸ் லீக் '20/20' தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் 17ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 6 ஆம் திகதிவரை இந்தியாவில் நடக்கவுள்ளது. அதில் பிரிமியர் தொடர் சம்பியன் மும்பை, சென்னை மற்றும் ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் ஆடிய அணிகள் பங்கேற்கும்.

இந்தத் தொடரில் ஹைதராபாத்தில் 6 ஆட்டங்கள் நடக்கவுள்ளன. ஆனால் தெலுங்கானா பிரச்சினையால் அங்கு பதட்டம் நிலவுகின்றது.

இதுகுறித்து பிரிமியர் லீக் தொடர் தலைவர் ராஜீவ் சுக்லா கூறுகையில்,

''ஹைதராபாத்தில் பல இடங்களில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதுகுறித்து அங்குள்ள பாதுகாப்புத் தரப்பினருடன் பேசி, மாற்று இடங்களை விரைவில் முடிவு செய்வோம்'' என்று தெரிவித்தார்.(ற)

# அன்ரிகுவா வென்றது



கரீபியன் பிறீமியர் லீக் தொடரின் 8ஆவது ஆட்டத்தில் அன்ரிகுவா அணி வெற்றிபெற்றுள்ளது. சென். லூசியா அணிக்கெதிரான இந்த ஆட்டத்தில் அன்ரிகுவா அணி 33 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சென் லூசியாவில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென் லூசியா அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அன்ரிகுவா அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 166 ஓட்டங்களைக் குவித்தது.

முதலாவது இலக்குக்காக 4.4 பந்துப்பரிமாற்றங்களில் 35 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, 2 ஆவது இலக்குக்காகவும் சிறப்பான இணைப்பாட்டத்தை மேற்கொண்டது. தொடர்ந்து வந்த வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த அன்ரிகுவா அணி 166 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அன்ரிகுவா அணி சார்பாக ஜோன்சன் சார்ள்ஸ் 30 பந்துகளில் 36 ஓட்டங்களையும், டெவோன் தோமஸ் 18 பந்துகளில் 32 ஓட்டங்களையும், கெரான் பொலார்ட் 16 பந்துகளில் 27 ஓட்டங்களையும், றிக்கி பொன்டிங் 24 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென் லூசியா அணி சார்பாக அல்பி மோர்க்கல் 2 இலக்குகளையும், டெரன் சமி, ஷேன் ஷிலிங்பேர்ட், கரே மதுரின் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

167 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சென் லூசியா அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 33 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது இலக்குக்காக 2.4 பந்துப்பரிமாற்றங்களில் 29 ஓட்டங்களைக் குவித்தசென்லூசியா அணி, 6.2 பந்துப்பரிமாற்றங்களில் ஓர் இலக்கை இழந்து 48 ஓட்டங்களுடன் பலமான நிலையில் காணப்பட்ட போதிலும், அதன் பின்னர் இலக்குகள் தொடர்ச்சியாக இழக்கப்பட, தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் சென்.லூசியா அணி சார்பாக தமிம் இக்பால் 39 பந்துகளில் 33 ஓட்டங்களையும், லியம் செபஸ்ரியன் 18 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களையும், அன்ட்ரே பிளெற்சர் 7 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அன்ரிகுவா அணி சார்பாக மார்லன் சாமுவேல்ஸ் 3 இலக்குகளையும், கேமர் றோச், ஷெல்டன் கொட்டரெல், கவின் தொங்கே, றகீம் கோர்வோல், டெவோன் தோமஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக அன்ரிகுவா அணியின் தலைவர் மார்லன் சாமுவேல்ஸ் தெரிவானார். (ற)

IELTS A1 B1 B2 KU Education
ஸ்போக்கன் இங்கிலீஷ் வகுப்பும் Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

Arul Study Circle
111, Bonjean Road, Kotahena, Colombo 13, T.P: 011 2331 495, 011 2470 148
G.C.E. (O/L) 2013 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு
Free Seminar
இலவசக் கருத்தரங்கு நடைபெறும் இடமும் திகதியும்
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி
09.08.2013 (வெள்ளி காலை 8.00 - மாலை 5.00. இருபாலாரும்)
ஊர்காவற்றுறை பிரதேச செயலகம்
10.08.2013 (சனி காலை 8.30 -மாலை 5.00. இருபாலாரும்)
யாழ் வீரசிங்கம் மண்டபம்
11.08.2013 (ஞாயிறு காலை 6.00 - மாலை 5.00 மாணவிகள் மட்டும்)
12.08.2013 (திங்கள் காலை 6.00 - மாலை 5.00 ஆண் மாணவர்கள் மட்டும்)
13.08.2013 (செவ்வாய் காலை 6.00 - மாலை 5.00 இருபாலாரும்)
உருத்திரபுரம் தமிழ் மகா வித்தியாலயம்
16.08.2013 (வெள்ளி காலை 8.00 - மாலை 5.00 இருபாலாரும்)
கடந்த 2010, 2011, 2012 ஆம் வருடங்களில் வெற்றிகரமாக இலவசக் கருத்தரங்குகளை நடத்தியதோடு இந்த வருடமும் சிறப்பாக நடத்தப்படுகின்றது.
நாட்டின் சகல பாகங்களிலும் உள்ள அனைத்து O/L மாணவர்களும் இக் கருத்தரங்கில் பங்குபற்றலாம்
இலவச கருத்தரங்கு முழு அனுசரணை வே.தேவசேனாதிபதி (L.L.B சட்டத்தரணி)
சம்பிரதாய பூர்வமாக வகுப்புகள் காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.
குறிப்பு: முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் நூல்கள்
★ கணிதம், விஞ்ஞானம், வரலாறு, தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களின் 2008, 2009, 2010, 2011, 2012, ஆகிய வருட க.பொ.த. (சா/த) பரீட்சை வினா-விடை புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.
★ கணிதம் கடந்த 16 வருட க.பொ.த (சா/த) பரீட்சை வினா - விடைப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.
★ அனைத்துப் பாடங்களிலும் மாதிரி வினாக்கொத்து (Tutes) வழங்கப்படும்.
★ விஞ்ஞான வினாவிடை நூல் இலவசமாக வழங்கப்படும். (25 வருட கடந்தகால வினாவிடைத் தொகுப்பு)
பிரதான ஒழுங்கமைப்பாளர்:- பே.இளமுருகன் (ஆசிரியர் K.H.C) 077 90 73 593
ஊடக அனுசரணை: உதயன் மக்கள் மனம் நிறைந்த நாளிதழ் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/11071)(10,6,3)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 021 567 1111

SLEAS கருத்தரங்கு
வெள்ளி (9/8),
திங்கள் (12/8),
செவ்வாய் (13/8),
புதன் (14/8)
தினங்களில் காலை 9.00 மணி தொடக்கம் 3.30 மணி வரை நடை பெறும்.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)
(C/10790)(8,3)

HONDA
நெல்லியடி காட்சியறையில் வேலைவாய்ப்பு
செயற்பாட்டு முகாமையாளர்
OPERATION MANAGER
தகைமை
* வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவருக்கு முன்னுரிமை.
* சிங்களம் , ஆங்கிலம் நன்கு தெரிந்த ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
* கணினி, கணக்கியல் அறிவு அவசியம்.
கவர்ச்சிகரமான சம்பளம்
தகுதியானவர்கள் உடன் விண்ணப்பிக்கவும்.
HONDA WORLD
பருத்தித்துறை பிரதான வீதி, நெல்லியடி,
தொடர்புகளுக்கு- 021 2264416, Hot- 077 0387444



ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரான்ஸ், கனடாவுக்கு செல்வோர், மாணவர்கள், மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவை சேர்ந்தவர்களும் இங்கு படிக்கிறார்கள்).
France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே.
இது ஓர் அரிய சந்தர்ப்பம். இன்றே பதிவுசெய்யுங்கள்
புதிய வகுப்பு: 17.08.2013 11a.m - 1 pm (சனி, ஞாயிறு)
61, Kachchery-Nallur Road, Jaffna T.P.021.222.8093
(30321) கச்சேரி பஸ்தரிப்பிடத்தை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்

Dialog டயலொக் நிறுவனம் வழங்கும்
அரிய சந்தர்ப்பம் இலவசம்
உங்கள் இளைய தளபதி விஜய் நடித்த தலைவா
படத்தின் முதல் காட்சியை இலவசமாக கண்டுகளியுங்கள்
நீங்கள் செய்யவேண்டியது
Reload மட்டும் தான்
1000/= Reload - O.D.C
1500/= Reload - Balcany
இடம் : ராஜா திரையரங்கு
காலம்: 09.08.2013 வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி ராஜா - 2
காலை 11.00 மணி ராஜா - 1
ரிக்கெற்றுகளை சகல தொலைத்தொடர்பு நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்
077 348 2712, 077 333 7761, 077 333 3687



ரிக்கற் இலவசம், சாப்பாடு இருப்பிடம் இலவசம்
2 இலட்சம் சம்பளம்
டென்மார்க்கில் படிக்க உழைக்க இன்னும் சில தினங்கள் மாத்திரம் இந்த வாய்ப்பு
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090



1st IN COM, B COM PART I, II.
யாழ்ப்பாண பல்கலைக்கழகம் (வெளிவாரி)
★ 1st IN COM புதிய ஆண்டிற்கான புதிய பிரிவுகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
★ B.COM PART I இக்குரிய விரிவுரைகள் ஆரம்பம் 10.08.2013 (காலை 8மணி)
★ B. COM PART II இக்குரிய விரிவுரைகள் ஆரம்பம் 10.08.2013 (காலை 9 மணி)
குறிப்பு:விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்
விவரங்களுக்கு: S.அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.